# அபிவிருத்திப் பொருளியல்

இதழ்-3



# Development Economics

Issue-3

Young Economist Association
Department of Economics, University of Jaffna, Sri Lanka.

# அபிவிருத்திப் பொருளியல்

உலகமயமாதல் தொடர்பான விசேட கட்டுரைகள்

## இதழ் - 3

## 2002

கல்வியாண்டு 2001/2002


**இதழாசிரியர்**
**திரு.S. சுசிகரன்**

**துணை இதழாசிரியர்கள்**
செல்வி P. சுகந்தி
செல்வி K. சுகந்தா
திரு. T.றொபின்சன்

இளம் பொருளியலாளர் மன்றம்
பொருளியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# DEVELOPMENT ECONOMICS

New volume : 2002

Published on : 2002

Editor :Mr. S. Suseekaran

Printers : HariKanan Printers,
424, K.K.S Road, Jaffna.

Cover Printed : Kumaran Press Private Limitted,
201, Dam Street Colombo - 12

Address : Young Economists Association
Department of Economics,
University of Jaffna
Thirunelvely
Jaffna
SriLanka

**பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன்**

பாதங்களில்

ஒரு புலமைக் காணிக்கையாக ...



தனக்கென்று அன்றித் தரணிக்கென
வாழ்கின்ற
குணக்குன்று நீ!
பிறந்த குழந்தை போற் பல்கலைக்கழகம்
இருந்த காலை
பால் கொடுத்து வளர்த்த பணியில்
பெரும் பங்கு உன்னுடையது.
இது
நீ உழுத நிலம் என்பதனால் - இங்கு
விழுபவை கூட விழுதுகளே.
பொருளியற் காற்றுக்கு
தமிழ் சுவாசிக்கக் கற்றுக் கொடுத்தவன்
நீ.
அதனால்
உன் சூரியச் சுவடுகளில் நின்று
உனது பாதம் நோக்கிப் பாய்வதில்
இச் சிறுகதிர் கொள்கிறது
பெரு மகிழ்ச்சி.

அவர் சேவைகளில் ஊட்டம் பெற்ற
மாணவ தலைமுறையினர்

# YOUNG ECONOMISTS ASSOCIATION, UNIVERSITY OF JAFFNA
# OFFICE BEARERS 2001/2002

| | |
|---|---|
| Patron: | **Mr.V.P.Sivanathan**<br>*(Head, Dept. of Economics)* |
| Senior Treasurer | **Mrs.V.Ravishankar** |
| President: | **Mr.K.Sivakumar** |
| Vice President: | **Mr.S.Jeyanthan** |
| Secretary: | **Mr.S.Sivakumar** |
| Asst. Secretary: | **Mr.S.Ravikaran** |
| Treasurer: | **Mr.K.Mahinthan** |
| Editor: | **Mr.S.Suseekaran** |
| Sub Editors: | **Mr.T.Robinson**<br>**Miss. K.Sugantha**<br>**Miss.P.Suganthi** |
| Committee Members: | **Mr.A.Antoneyrajan**<br>**Mr.S.Saseepan**<br>**Miss. S.Thushyanthi**<br>**Miss. A.Thevaky** |

## அபிவிருத்திப் பொருளியல் இதழ் வருடந்தோறும் சிறப்புற வெளிவர ஆலோசனை வழங்கும் மதிப்பிற்குரிய ஆலோசகர் குழு

1. Mr. V.P. Sivanathan (Head. Dept of Economics)
2. Mr. Prof. N.Balagrishnan
3. Mr. Dr. V.Nithiyananthan
4. Mr. R.Nanthakumar
5. Mr. Prof. M.Sinathampi

# துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

பொருளியற்துறை இளம் பொருளியலாளர் மன்றத்தினால் பொருளியல் அபிவிருத்தி இதழ் – 03 எனும் நூல் வெளிக்கொணரப்படுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இளம் சமூகத்தினரிடையே குறிப்பாக மாணவர்களிடையே ஆய்வுகள் நிறைந்த கல்விப் பாரம்பரியமே அவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமையும். எனவே இத்தகைய கல்விச் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுதல் சிறந்தது.

இன்று பல்கலைக்கழகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற பல்வேறு துறைசார் மன்றங்கள், கழகங்களினால் சிறந்த முறையில் காலந்தோறும் ஆக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்ட சஞ்சிகைகள், நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த வகையிலே இளம் பொருளியலாளர் மன்றத்தால் காலந்தோறும் வெளியிடப்பட்டுவரும் அபிவிருத்திப் பொருளியல் இதழ் 03 பொருளாதாரம் சார்ந்த சிறந்த ஆக்கங்கள், கட்டுரைகளைக் கொண்டதாக அமையும் என்பது திண்ணம்.

நாட்டினுடைய முன்னேற்றப்பாதைக்கு பொருளாதாரம் படிக்கற்களாக அமைகின்றது. பொருளியல்சார் அறிவு வளர்ந்துவரும் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் மிகமிக அவசியமான தொன்றாகும். எனவே இளம் சமுதாயம் பொருளாதாரம்சார் ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்வது மிகச் சிறந்தது. சிறந்த ஆக்கங்கள், ஆய்வுகளைக் கொண்ட சஞ்சிகைகள் நூல்களை வெளிக்கொணரும் முயற்சி மாணவ சமுதாயத்தினது சிந்திக்கும் ஆற்றலையும் ஆளுமையையும் மேலும் வளர்ப்பதற்கு தளமாக அமையும்.

அபிவிருத்திப் பொருளியல் இதழ் பொருளாதாரம்சார் நீண்ட ஆய்வுகளை முன்னெடுத்து காலந்தோறும் தொடர்ந்து வெளிவர வேண்டுமெனக்கூறி வெளிவர உழைத்த மாணவர்கள், விரிவுரையாளர்கள் அனைவருக்கும் இம்மன்றத்தின் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**யாழ். பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**யாழ்ப்பாணம்**

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்

# கலைப்பீடாதிபதியின்

# வாழ்த்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியற்துறையில் இயங்கும் இளம் பொருளியலாளர் மன்றம் வருடந்தோறும் வெளியிட்டு வரும் அபிவிருத்திப் பொருளியல் சஞ்சிகையின் மூன்றாவது இதழ் வெளிவரும் வேளையில் இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று முக்கியத்துவம் பெற்றுவரும் உலகமயமாக்கலில் பொருளியல் சார்ந்த அறிவு, ஆய்வு என்பன முனைப்பு பெறுகின்றன. ஒரு நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் பொருளாதாரத் துறையை வளம்படுத்துவதில் இத்தகைய சஞ்சிகைகளின் பங்கு அளப்பரியது எனில் மிகையில்லை. அத்தகைய அரிய பணியை கருத்திற்கொண்டு இளம் பொருளியலாளர் மன்றத்தினர், பொருளியற்துறைத் தலைவர், மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரது வழிகாட்டலில் அபிவிருத்திப்பொருளியல் சஞ்சிகையை உருவாக்கி வெளியிடுவது காலத்தின் தேவையாகவும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகவும் அமைகின்றமை குறிப்பிடற்பாலது.

இச் சஞ்சிகை இத்துறை சார்ந்த அறிவை மேலும் வளமாக்கும் வகையில் சிறந்த சிந்தனைகளைக் கொண்ட கட்டுரைகளை உள்ளடக்கியதாக மாணவர்களுக்கும் ஏனையோர்களுக்கும் நன்கு பயன்படும் வகையில் அமைந்து விளங்கும் என நம்புகின்றேன்.

இச்சஞ்சிகையின் வெளியீட்டுக்கு உதவிய துறைத்தலைவர், ஆசிரியர்கள், மன்றத்தினர் மற்றும் கட்டுரையாளர்கள் ஆகிய அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. மன்றத்தின் முயற்சிகள் வெற்றி பெறவும் இச்சஞ்சிகை எதிர்காலத்தில் சிறப்பான அம்சங்களைத் தாங்கி பொருளியல் சார்ந்த அறிவு விரிவடைய மேன்மேலும் அரிய பணியாற்றவும் எனது நல்லாசிகளை வழங்குதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

**யாழ்பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**யாழ்ப்பாணம்**

பேராசிரியர்.ப.கோபாலகிருஷ்ணஐயர்,
கலைப்பீடாதிபதி

# துறைத்தலைவரின் உள்ளத்திலிருந்து

அபிவிருத்திப் பொருளியலின் 2002ம் ஆண்டிற்கான சஞ்சிகை வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த இதழ் இன்றைய உலகச்சூழலில் உலகமயமாக்கம் பற்றிய விபரங்களை உள்ளடக்கி சிறப்பு வெளியீடாக வருவது மாணவர்களின் வினைத்திறனை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

உலகமயமாக்கம் பொருளாதார செயற்பாட்டிலும் தேசிய பொருளாதாரங்களின் பேரினக் கொள்கையிலும் பெரும்மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நாணயக் கொள்கையிலும் இறைக்கொள்கையிலும் பெரும்மாற்றங்களை உருவாக்கியுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் விரிவுபடுத்தப்பட்ட பொருளாதார செயற்பாட்டின் விளைவாகப் பரிணமித்திருக்கும் உலகமயமாக்கல் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு மேலும் பல வாய்ப்புக்களை உருவாக்கும் இச் செய்முறை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்கும் என்ன பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை மதிப்பீடு செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். இவ்வேளையில் உலகமயமாக்கலின் கூறுகளை எடுத்துக்காட்டும் இச்சஞ்சிகை பொருளியல் மாணவர்கட்கும் அறிவைத்தேடும் ஏனைய துறை மாணவர்கட்கும் பிரயோசனமானதாகும் இதைத் தனித்த இதழாக வெளியிட எண்ணிய மாணவர்கள் பல்கலைக்கழக சஞ்சிகைகளில் புதியதொரு திருப்பு முனைஒன்றை ஏற்படுத்துகின்றனர் என்பதை அறியும் போது எமதுமாணவர்களையிட்டு பெருமைப்படுகின்றேன். இதைவெளியிடும் மாணவர்கள் தொடக்கி வைத்த சிறப்பு வெளியீட்டு முறையை இனிவரும் மாணவர்களும் செய்வார்கள் என்று நம்புகின்றேன். மாணவர் முயற்சி என்றும் வினைத்திறனுடையது என்பதை இச்சஞ்சிகை வெளிக்காட்டுகிறது. அம்மாணவர்கள் என்றும் இவ்வாறு புதியபோக்கில் செல்வார்கள் என்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

நன்றி

**யாழ். பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**யாழ்ப்பாணம்**

V.P. சிவநாதன்
தலைவர்
பொருளியற்துறை

# பெரும் பொருளாளரின் உள்ளத்திலிருந்து

அபிவிருத்திப் பொருளியல் சஞ்சிகையினை வெளியிடும்இளம் பொருளியலாளர் மன்றம் இம்முறை இதழ் – 3 சஞ்சிகையினை வெளியிடுகின்றது. இம்முறை அபிவிருத்திப் பொருளியல் வித்தியாசமான முறையில் "உலகமயமாதல்" என்னும் தலைப்பின் கீழ் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது.

பலரது வழிகாட்டல் இருந்தபோதும் மாணவர்களின் முயற்சியே இச்சஞ்சிகையின் வெளிப்பாட்டிற்குக் காரணம். இவ்வாறு இவர்கள் செயற்படுவதன் மூலம் தலைமைத்துவப் பாங்குடன் ஒரு விடயத்தை செவ்வனே நடாத்தக்கூடிய ஆற்றலும், துணிவும் ஏற்படுகின்றது. எனவே இவ்வாறான சஞ்சிகைகள் வெளிவருவது மாணவ சமுதாயத்தின் அறிவிற்கும் செயற்பாட்டு ஆற்றலுக்கும் உந்துசக்தியாக அமைகின்றது.

அபிவிருத்திப் பொருளியல் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான கட்டுரைகளைத் தாங்கி வெளிவரவேண்டும் என வாழ்த்துவதுடன் இம்மன்றத்தின் வளர்ச்சிக்கு அனைத்து மாணவர்களும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பதே எல்லோரதும் விருப்பமாகும்.

நன்றி

**யாழ். பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**யாழ்ப்பாணம்**

திருமதி. வீஜிதா ரவிசங்கர்
பெரும் பொருளாளர்,
பொருளியற்துறை.

# மன்றத் தலைவரின் இதயத்திலிருந்து......

யாழ். பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தின் அபாரமான முயற்சியின் விளைவாக அபிவிருத்திப் பொருளியல் இதழ் – 03 எனும் சஞ்சிகை இம்முறை வித்தியாசமான முறையில் வெளிவருகிறது. அதனை வெளியிடுவதில் நாம் பேருவகையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றோம். இம்முறை வெளிவரும் நூலானது பெருமளவில் ''உலகமயமாக்கல்'' பற்றிய கட்டுரைகளைத் தாங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வருடம் இம்மன்றமானது தனது பணியினை மிகச் சிறப்பாக செயலாற்றிவந்துள்ளதை எண்ணி பெருமகிழ்ச்சியடைகின்றேன். இம் மன்றமானது பல்கலைக்கழகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பல மன்றங்களுள் சிறப்பாக செயற்படும் மன்றமாக இது விளங்குகிறது. இவ்வகையில் எமது மன்றம் சிறப்பாக செயற்படுவதற்கு எமக்கு பக்கபலமாக நின்றவர்களை மறவாத நன்றியுடன் நினைவு கூறுவது எனது கடமையாகும். அந்த வகையில் எமது காப்பாளரும், துறைத்தலைவருமாகிய திரு.V.P.சிவநாதன் அவர்களுக்கும், பெரும் பொருளாளர் திருமதி. வி.ரவிசங்கர் அவர்களுக்கும், மற்றும் நூல் வெளியீட்டுக்காக உதவி புரிந்த மாணவர்களையும் எனக்கு தோளோடு தோளாக நின்ற எனது சக மாணவர்களுக்கும், இந்நூலை திறம்பட வெளியிட சோர்வுறாது செயற்பட்ட இதழாசிரியர்களுக்கும், மேலும் பரிசில்கள், அன்பளிப்புக்கள் வழங்கிய வர்த்தகப் பெரு உள்ளங்களுக்கும் நான் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

வரப்போகின்ற காலங்களில் இம்மன்றத்தைப் பொறுப்பேற்கும் செயற்குழுக்கள் அதனை மேலும் பல செயற்பாடுகள் மூலம் எமது நாட்டின் அபிவிருத்திக்கு கைகொடுப்பார்கள் என வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி

**இளம்பொருளியலாளர் மன்றம்**
**யாழ். பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**யாழ்ப்பாணம்**

க.சிவகுமார்
தலைவர்.

# செயலாளரின் உள்ளத்திலிருந்து...

யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறையின் "இளம் பொருளியலாளர் மன்றத்தினால்" வெளியிடப்படும் "அபிவிருத்திப் பொருளியல் இதழ் – 03" ஆனது தற்போது எமது நாட்டில் மெதுவாக ஊடுருவுகின்ற சமாதான காலத்தில் வெளிவருவதை எண்ணி நாம் மட்டில்லா மகிழ்வடைகின்றோம். இந்நூலானது அண்மைக்காலமாக எல்லோராலும் பேசப்படுகின்ற "உலகமயமாக்கல்" என்பது பற்றிய கருத்துக்களையும், விளக்கங்களையும் எடுத்து வருகின்றது. மேலும் இன்று நிலவுகின்ற உலகமயமாக்கல் சர்ச்சைகளுக்கு ஓரளவாவது இந்நூல்தீர்வு காணும் என நம்புகின்றேன்.

அந்த வகையில் அபிவிருத்திப் பொருளியல் இதழ் – 03 க்கு வாழ்த்துச் செய்திகளை வழங்கிய எமது துணைவேந்தர் பேராசிரியர் திரு.பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் திரு.ப.கோபாலகிருஸ்ண ஐயர் அவர்களுக்கும், எமது மன்றத்தின் செயற்பாடுகளுக்கு ஊற்றாகவும், ஆணிவேராகவும் நின்று ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற எமது மன்றக்காப்பாளரும், பொருளியற் துறைத்தலைவருமான திரு.வே.ப.சிவநாதன் அவர்களுக்கும், எமது மன்றத்தின் செயற்பாடுகளுக்கு தூணாக விளங்கும் பெரும் பொருளாளர் திருமதி.வி.ரவிசங்கர் அவர்களுக்கும், எமது மன்றத்தின் சார்பாக இனிதான நன்றியைத் தெரிவிப்பதுடன், இச்சஞ்சிகையை வெளியிடுவதற்கான நிதியைச்சேகரிக்கும் முகமாக அதிஷ்டலாபச்சீட்டுக்களை விற்பனைசெய்து பேருதவி புரிந்த மாணவர்களுக்கும், அதற்கான பரிசில்களை அன்பளிப்பாக வழங்கிய யாழ். றுபா பன்முக வாணிபத்தாருக்கும், நியூ லலிதா ஜுவலறியினருக்கும், மற்றும் இச்சஞ்சிகைக்கான ஆக்கங்களை வழங்கிய விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் எமது மறவாத நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு இவ்விதழுக்கு சிறப்பாக அட்டைப்படத்தை வடிவமைத்த குமரன் பதிப்பகத்தாருக்கும் (கொழும்பு), இவ்விதழை சிறப்பாகவும், விரைவாகவும் வெளியீடு செய்ய உதவிய ஹரிஹணன் அச்சகத்தாருக்கும், எமது மன்றத்தால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகளுக்கு வருகை தந்து கருத்துரைகளை வழங்கிய பேராசான்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அபிவிருத்திப் பொருளியல் இதழானது எதிர்வரும் காலங்களில் எமது மாணவர்களுக்கும், நாட்டுக்கும் பெரும்பங்காற்றும் என நம்புவதோடு, தொடர்ந்து வரப்போகின்ற செயற்குழு உறுப்பினர்கள் எமது மன்றத்தை சிறப்பாக வழிநடாத்திச் செல்வார்கள் என்ற நம்பிக்கையோடு உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.

சி.சிவகுமார்
(செயலாளர்)

**இளம் பொருளியலாளர் மன்றம்**
**யாழ். பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்**

# இளம் பொருளாளரின் இதயத்திலிருந்து....

யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் ஆளுமையை வளர்த்தல், ஆய்வுத்திறனை பர்ணமிக்கச் செய்தல், சமூக விழுமியத்தை ஏற்படுத்தல் போன்ற பன்முக நோக்கில் மாணவர்களை வளர்த்தெடுக்கின்ற மன்றங்களில் "இளம் பொருளியலாளர் மன்றம்" தனக்கென ஒரு தனித்தடம் பதித்துள்ளது. இம்மன்றத்தின் பன்முகச் செயற்பாடுகளில் ஒன்றாகவே "அபிவிருத்திப் பொருளியல் – 03" இதழ் வெளியீடு அமைகின்றது.

மாறிவரும் நவீன உலகின் அதீத வளர்ச்சிக்கு நாமும் ஈடுகொடுக்க வேண்டுமாயின் வளர்ந்து வரும் பொருளியல் சிந்தனைகளை எண்ணக்கருக்களை காலத்தின் தேவையறிந்து முகிழ்ப்புப் பெறச்செய்வது அவசியமான ஒன்றாகும். இத்தேவையை ஈடுசெய்ய முனையும் பொருளியல்துறை மாணவர்களின் தேடலுக்கு விடைபகரும் இதழாக "அபிவிருத்திப் பொருளியல் – 03" அமையும் என்பதில் ஐயமில்லை.

இவ்விதழை இளம் பொருளியலாளர் மன்றம் வெளியிடும் சிந்தனைக்கு ஊற்றாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் தந்து எம்மை வழிநடாத்திய மன்றத்தின் காப்பாளரும், துறைத்தலைவருமான திரு.V.P சிவநாதன் அவர்களையும், காலமறிந்து உதவி நல்கிய பெரும் பொருளாளரும் விரிவுரையாளருமாகிய திருமதி.விஜிதா ரவிசங்கர் அவர்களிற்கும், மற்றும் பொருளியற்துறை சார்ந்த விரிவுரையாளர்கள் அனைவரையும் என் இதயத்தில் இருத்தி நன்றி கூறுகின்றேன்.

அத்துடன் இவ்விதழ் மலர்விற்கு உறுதுணையாக இருந்து தோளோடு தோள் நின்று உதவிய மாணவ நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் இம்மலர் வெளியீட்டுக்கு தேவையான நிதியினை அதிஷ்டலாப சீட்டிழுப்பின் மூலம் பெற உதவிய வர்த்தக பெருமக்களுக்கும் ஏனைய அன்புள்ளங்களிற்கும் இந்நேரத்தில் நன்றிகூறக் கடமைப்படுகின்றேன்.

மேலும் பல வகைகளிலும் முன்னோடியாக திகழும் எமது மன்றம் இனிவரும் காலங்களில் சிறந்த சேவைகளையாற்றி "அபிவிருத்திப் பொருளியல்" இதழை மேலும் மிளிர்வுடன் மலரச் செய்ய வேண்டும் எனக் கேட்டு வாழ்க வளர்க என வாழ்த்துகின்றேன்.

நன்றி

கனகரத்தினம் மகிந்தன்
இளம்பொருளாளர்.

யாழ். பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

# இதழாசிரியர்களின் இதயங்களில் இருந்து...

யாழ். பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தினராகிய நாம் எமது மூன்றாவது இதழாக இந்த அபிவிருத்திப் பொருளியல் இதழ் – 3 இனை உங்கள் கைகளிலே தவழ விடுவதில் பெருமகிழ்வடைகின்றோம். இன்று உலகு எங்குமே "உலகமயமாக்கம்" என்ற சொல்லும் அது பற்றிய நேர், எதிர் கருத்துக்களுமே வியாபித்திருக்கின்றன. எனவே இந்த காலகட்டத்தில் பொருளியல் மாணவர்களாகிய நாம் இதுபற்றி சிந்திக்க வேண்டியவர்களாகவும், மற்றவர்களுக்கும் அதுபற்றி தெளிவுபடுத்த வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். இந்த தேவையை உணர்ந்து எமது மதிப்பிற்குரிய துறைத்தலைவரின் ஆலோசனையுடன் இந்த இதழினை "உலகமயமாக்கம்" சம்பந்தமான ஆக்கங்களை தாங்கிய வெளியீடாக வெளியிடுவதில் நிறைவடைகின்றோம்.

மேலும் எமது அடுத்த வெளியீடானது பிரதேச அபிவிருத்திகளைக் கருத்திற் கொண்டு வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான ஆக்கங்களைக் கொண்டு வெளியிடுவதாக திட்டமிட்டுள்ளோம்.

மேலும் எமது இந்த இதழிற்கு ஆக்கங்களைத் தந்துதவிய விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். அத்துடன் எமக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிய எமது துறைத்தலைவர் மதிப்பிற்குரிய V.P. சிவநாதன் அவர்களுக்கும், எமது பெரும் பொருளாளர் அவர்களுக்கும், நல்ல ஆலோசனைகளை வழங்கி உதவிய விரிவுரையாளர்களுக்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் இந்த இதழினை வெளியிடுவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியிலும் விரைவாக அச்சிட்டு உதவிய ஹரிஹரனன் அச்சகத்தாருக்கும் ஊழியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அட்டைப்படத்தினை வடிவமைத்து அச்சிட்டுத்தந்த குமரன் அச்சகத்தினருக்கும் எமது நன்றிகள்.

நன்றி

**யாழ். பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**யாழ்ப்பாணம்**

**இதழாசிரியர்,**
ச.சுசீகரன்,

**உதவி இதழாசிரியர்கள்**
P.சுகந்தி, K.சுகந்தா
T.றொபின்சன்

# 04-01-2002ல் இருந்து செயலாளரின் ஏட்டிலிருந்து...

1) **நிகழ்வு-01**
தலைப்பு:- "பொருளாதாரக் கொள்கைகளும், வளர்ச்சியும், அபிவிருத்தியும்"
வழங்கியவர்:- திரு.V.P. சிவநாதன் (தலைவர், பொருளியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
காலம்:- 06-03-2002, புதன்கிழமை, பி.ப.3.00 மணி
இடம்:- நூலக கேட்பார் கூடம்.

2) **நிகழ்வு-02**
எமது மன்றத்திற்கென Computer today எனும் ஓர் தொகுதி சஞ்சிகைகள் கொள்வனவு செய்யப்பட்டன. (06-03-02)

3) **நிகழ்வு - 03**
தலைப்பு:- "வடக்கு கிழக்கு மாகாணத்தின் மீன்பிடிக்கைத்தொழில்"
வழங்கியர்:- திரு.கலாநிதி A.S. சூசை (விரிவுரையாளர், புவியியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
காலம்:- 20-03-02 புதன்கிழமை, பி.ப 3.30 மணி
இடம்:- பொருளியற்துறை மண்டபம்

4) **நிகழ்வு -04**
தலைப்பு:- "திறந்த பொருளாதாரத்தில் நெருக்கடிகள்"
வழங்கியவர்:- திரு.R. நந்தகுமார் (பீடாதிபதி, வவுனியா வளாகம்)
காலம்:- 22.05.2002, புதன்கிழமை, பி.ப 3.30 மணி
இடம்:- பொருளியற்துறை மண்டபம்.

5) **நிகழ்வு - 05**
தலைப்பு:- "யாழ் குடாநாட்டுக்கான முதலீட்டுக் கொள்கை வகுத்தல் எனும் ஆய்வுப்பட்டறை"
தலைமை:- திரு. V.P சிவநாதன் (காப்பாளர், இளம்பொருளியலாளர் மன்றம்)
காலம்:- 27.05.2002, திங்கட்கிழமை, காலை 9.00 முதல் மாலை 3.00 மணிவரை
இடம்:- பொருளியற்துறை மண்டபம்

6) அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 03 வெளியீட்டுக்கான அதிஷ்டலாபச்சீட்டுக்கள் 03-06-02 திங்கள் அதிஷ்டம் பார்க்கப்பட்டது.

7) **நிகழ்வு - 07**
தலைப்பு:- "சூழல் பிரச்சனைகளை கையாள்வதற்கான மாற்றுக் கொள்கை"
வழங்கியவர்:- செல்வி.G. மைதிலி (சென்னை பொருளியற் சிந்தனை பள்ளிப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழக விவசாய உயர்மட்ட நிறுவனத்தின் வருகை நேர விரிவுரையாளர்)
காலம்:- 12-08-02 திங்கள், காலை 10.30
இடம்:- புவியியற்துறை மண்டபம்


8) **நிகழ்வு - 08**
தலைப்பு:- "சமாதானம், அபிவிருத்தி, இடைக்காலம் பற்றிய ஓர் நோக்கு"
வழங்கியவர்:- N. சண்முகரத்தினம் (பேராசிரியர், ஒஸ்லோ பல்கலைக்கழகம், நோர்வே)
காலம்:- 25-09-02, புதன்கிழமை, மாலை 3.30 மணி

9) **நிகழ்வு - 09**
எமது மன்றத்தின் பாவனைக்கென தனியானதோர் அலுவலகம் உதவி நலசேவைகள் கிளையிலிருந்து 22-10-02 அன்று பெறப்பட்டமை.

10) **நிகழ்வு - 10**
அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 03 உங்களின் கைகளில் தவழுதல்.

**THE COMMITTEE OF YOUNG ECONOMIST ASSOCIATION (2001/2002)**

**DEPARTMENT OF ECONOMICS - UNIVERSITY OF JAFFNA**



## THE COMMITTEE OF YOUNG ECONOMIST ASSOCIATION (2001/2002)

## DEPARTMENT OF ECONOMICS - UNIVERSITY OF JAFFNA

Sitting [ L → R]

Mr. V. P. Sivanathan *(Head, Dept. of Economics)*, Mr. S. Sivakumar *(Secretary)*,
Mr. P. Balasuntharampillai *(Vice - Chancellor)*, Mr. K. Sivakumar *(President)*,
Mr. P. Gobalakrishnaiyar *(Dean, Arts)*, Mrs. V. Ravishankar *(Senior Treasurer)*.

Standing [ L → R]

Miss. K. Sugantha *(Sub - Editor)*, Miss. S. Thushyanthi *(Committee member)*,
Mr. T. Robinson *(Sub - Editor)*, Mr. S. Suseekaran *(Editor)*,
Mr. K. Mahinthan *(Treasurer)*, Mr. S. Jeyanthan *(Vice - President)*,
Mr. A. Antoneyrajan *(Committee member)*, Mr. S. Ravikaran *(Asst. Secratary)*,
Mr. S. Saseepan *(Committee member)*, Miss. P. Suganthi *(Sub - Editor)*,
Miss. A. Thevaky *(Committee member)*.

# FINAL YEAR STUDENTS, DEPARTMENT OF ECONOMICS
## BATCH - 97/98 (2002)



# அபிவிருத்தியில்.......


- துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்த்துச் செய்தி
- கலைப்பீடாதிபதி பேராசிரியர்.ப.கோபாலகிருஷ்ணஐயர் அவர்களின் வாழ்த்துரை
- துறைத்தலைவரின் உள்ளத்திலிருந்து
- பெரும் பொருளாளரின் உள்ளத்திலிருந்து
- மன்றத் தலைவரின் இதயத்திலிருந்து......
- செயலாளரின் உள்ளத்திலிருந்து...
- இளம் பொருளாளரின் இதயத்திலிருந்து....
- இதழாசிரியர்களின் இதயங்களில் இருந்து...
- 04-01-2002ல் இருந்து செயலாளரின் ஏட்டிலிருந்து...
- உலகமயமாக்கல் - செல்நெறி — 01
  The trend of the Globalization
- உலயமயமாக்கலில் வளர்முக நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் — 13
  The Challengs faced by developing countries in the Globalization
- உலகமயமாக்கலும் சமமின்மைகளும் — 22
  Globalization and Inequalities
- உலகமயமாக்கலும் கலாச்சார மாற்றங்களும் — 32
  Globalization and cultural changes
- உலகமயமாக்கலும் வளர்முக நாடுகளில் அந்நிய நேரடி முதலீடும் — 40
  Globalization and foriegn direct Investment in Developing countries
- உலகமயமாக்கலும் 3ம் உலக நாடுகளும் — 49
  Globalization and Third world countries
- உலகமயமாக்கமும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியும் — 55
  Globalization and sustainable Development
- உலகமயமாக்கலும் சிறிய நாடுகளும் — 61
  Globalization and small countries
- உலகமயமாக்கல் - ஓர் ஆய்வு — 70
  Globalization - Analysis
- உலகமயமாக்கமும் அதன் பண்புகளும் — 76
  Globalization and Its characteristics
- உலகமயமாக்கலும் இலங்கையின் பொருளாதாரமும் — 81
  Globalization and the Economy of Srilanka

# உலகமயமாக்கல் – செல்நெறி
# The Trend of the Globalization

விநாயகமூர்த்தி தயசீலன்
3ம் வருடம்
பொருளியற்துறை

**முகவுரை**

புத்தாயிரமாம் ஆண்டின் உதயத்தில் புதிய நம்பிக்கைகள், புதிய எதிர்பார்ப்புக்கள், குதூகலம், கொண்டாட்டம் எங்கும் பரவி வியாபித்திருக்கும் ஓர் சூழ்நிலையில், நாம் இன்று வாழும் உலகம் பயங்கரமான போர்கள், வன்செயல்கள், குற்றச் செயல்கள் என்பவற்றினதும் பெருகி வரும் அரசியல் வன்முறையினாலும் சிதைந்து சின்னாபின்னப்பட்டுள்ளது. $20^{ம்}$ நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் சமாதானம், செல்வச் செழிப்பு மற்றும் சுகவாழ்வு என்பவற்றுக்கான எதிர்பார்ப்புக்களும் குழப்பங்களும் நிறைந்த உலக அரசியல் பொருளாதாரம், சமூக ஒழுங்கு களங்கப்படுத்துகின்றது. இந்தப் பின்புலத்தில் மேலைத்தேய அதிகார வர்க்கமும் அதன் மும்மூர்த்திகளான சர்வதேச நாணயநிதியம் (IMF), உலகவங்கி (WB), உலகவர்த்தக ஸ்தாபனம் (WTO) ஆகியன சிக்கலான, சர்ச்சைக்குரிய உலகமயமாக்கற் செயன்முறையினை முன்னெடுத்துச் செல்கின்றன.

**உலகமயமாக்கம்**

இலங்கையில் உலகமய மாக்கம் என்பதனை நாம் நோக்கின் உலகநாடுகளினையும், அதில் வாழும் மக்களினையும் ஒருங்கிணைக்கும் ஓர் செயன்முறை என்பர். பொருளாதார நோக்கின் உலகமய மாக்கம் என்பது அனைத்து நாடுகளினதும் பொருளாதார ஒருங்கிணைப்பாகவும் தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் ஒருங்கிணையும் ஒரு செயன்முறையாகவும் உள்ளது. தேசிய சந்தைப் பொருட்கள் சேவைகள் என்பவற்றிலான அதிகரித்த அளவிலான எல்லை தாண்டிய வர்த்தகத்திலும் சர்வதேச மூலதனம் மற்றும் பணம் என்ற அளவுகளிற் கூடாகவும் தொழில் நுட்பமாற்றத்திற்கூடாகவும் இது இடம் பெறுகின்றது. அதாவது இது தொழில் நுட்பத்தால் மட்டும் நெறிப்படுத்தப்பட வில்லை. தலையிடாக் கொள்கையும், கட்டற்ற சந்தையினையும் வலியுறுத்தும் புதிய தாராளவாத நாணயவாத பொருளாதாரத்தை நோக்கிய சித்தாந்த ரீதியான நகர்வினால் பொருளாதார உலக மயமாக்கலிற்கு உசிதமான சூழ்நிலை உருவானது.

தொழில்நுட்பத் தூண்டுதலால் ஏற்பட்ட உலகளாவிய ஒழுங்கமைதியாகிய உலகமயமாக்கமானது வாணிபம், நிதி, வரி விதிப்பு, முதலீட்டுக் கொள்கை, அறிவார்ந்த சொத்து, நாணயமாற்றுத்திறன் ஆகியவற்றில் அறிந்து கொள்ளத்தக்க நடத்தை விதிமுறைகள் உள்ளடக்கப்படுகிறது

எனக்கூறப் படினும் அரசியல் பொருளியல் அறிஞரான "எல்லன்" என்பவர் ஓர் உலகளாவிய அமைப்பு முறை பற்றிய இந்தக் கண்ணோட்டமானது முதலாளித்துவத்தின் ஓர் புதிய முகத்தினைக் குறிக்கின்றது என்றார். இம் முதலாளித்துவம் அதிகம் உலகளாவியது. எதிர்ப்பு அதிகம் இல்லாத தூய்மையாகியது. முன்பு எப்போதையையும் விட அதிகம் கலப்படமற்றது". என்றார். மேலும் இதனை எதிர்ப்பவர்கள் "உலகமயமாக்கலானது மக்களாட்சி முறைக்கு எதிரானது. அது பல்வகைக் குடும்பங்களினை விலக்கி வருகின்றது என்கின்றனர். ஆனால் இந்தப் போக்கு அங்காடி சந்தையில் மட்டுமே உருவானதல்ல. அரசின் தீவிர ஆதரவினால் உருவாகாது விட்டாலும் அரசு இடங்கொடுப்பதனால் முன்னேறிய நாடுகளில் மட்டுமே உருவாக முடியும்.

எனவே மேலைத்தேய உலகினூடாக வலையமைப்புக்களும் கைத்தொழில் உலகின் குறுகிய அக்கறை கொண்ட குழுக்களும் எமது உலகம் இன்று எதிர்கொள்ளும் அனைத்து விதமான பிரச்சினைகளிற்கும் துர்ப்பாக்கியங்களிற்குமான சர்வரோக நிவாரணியாக உலகமயமாக்கலினை சிபாரிசு செய்து வருவதுடன் அதற்கூடாக சகல மக்களிற்கும் புதிய வாய்ப்புக்களும் தெரிவுகளும் கிடைக்க முடியும் என வாக்குறுதிகளினைத் தருகின்றனர். ஆனால் மூன்றாவது மண்டல நாடுகள் தம்முள் பல கோடிக்கணக்கான வறிய மக்களினைக் கொண்டு வறுமை, வேலையின்மை, போசாக்கின்மை, படிநிலை என்பவற்றினை எதிர்கொண்டு திக்குத்திணறி வருவதனை அவர்கள் எளிதில் மறந்து விடுகின்றனர்.

இவ்வாறாக உலகமயமாக்கலானது 3 வகையில் இடம்பெறுகின்றது.

1) காலணித்துவ உலகமயமாக்கம்

2) நிறுவன ரீதியான உலகமயமாக்கம்

3) திறந்த பொருளாதார சந்தைமயமாக்கம்

காலணித்துவ உலகமயமாக்கல் என்பது ஒருநாடு பிறநாடுகளினைப் பின்பற்றித் தமது மதம், மொழி, கலாசாரம், பொருளாதாரம் என்பவற்றினைப் பரப்புவதாகவும், நிறுவன ரீதியான உலகமயமாக்கல் என்பது உலகநாடுகள் தமக்குக் கீழிருந்த 3ம் மண்டல நாடுகளினை மதம், மொழி, மற்றும் உற்பத்திப் பொருட்களினை அவற்றுக்கு அளிப்பதாகவும் திறந்த பொருளாதார சந்தையினை ஒரு நாட்டின் பொருளாதார சந்தையினை, ஒரு நாட்டின் பொருளாதார எல்லைகளினைத் திறந்துவிட்டு மற்ற நாடுகளில் உள்ள மூலவளங்கள், பொருட்கள் என்பன தங்குதடையின்றிப் பாய்வதாகும்.

**உலகமயமாக்கலின் பின்னணி**

உலகமயமாக்கற் செயன்முறையினைத் தெளிவாகப்புரிந்து கொள்ளுவதற்கும் அதனைச் சரியான வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து நோக்குவதற்கும் இதன் வேர்களை நாங்கள் கண்டறிவது அவசியமாகும். நாடுகளிற்கிடையிலான பொருளாதார ஒழுங்கமைப்புச் செயன்முறை 19ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் உருவாகியதுடன் 1870-1913 காலப்பகுதியின் போது பல நாடுகள்

உலகமயமாக்கலின் அடிப்படைக் குணாம்சமான உயர் அளவிலான திறந்த தன்மையினைக் காட்டின. பொருட்கள், மூலதனம் என்பவற்றின் அசைவு தொடர்பாக நிலவி வந்த பெருந்தொகையான கட்டுப்பாடு நீக்கப் பட்டதுடன் பொருளாதார நடவடிக்கை களிலான அரசாங்கத்தின் தலையீடு குறைந்தபட்ச மட்டத்தில் வைக்கப்பட்டி ருந்தது. உலகமயமாக்கல் நிகழ்வுப் போக்கின் இந்த முதலாவது கட்டம் முழுவதிலும் உலக விவகாரங்களில் பிரிட்டன் தனது மேலாதிக்கத்தினைச் செலுத்தி வந்தது. முதலாவது உலகமயமாக்கலின் ஆரம்பம் இக் கட்டத்தினை முடிவுக்குக் கொண்டு வந்தது. இதற்கு சுமார் 6 தசாப்த காலத்தின் பின்னர் தீவிரமான மாற்றங்களினை எதிர்கொண்டிருந்த ஓர் உலகச் சூழ்நிலையில் ஐக்கிய அமெரிக்கா சர்வவல்லமை பொருந்திய அரசாக எழுச்சி அடைந்ததுடன் இணைந்த விதத்தில் 1970களின் தொடக்கத்தில் உலகமயமாக்கலின் இரண்டாவது கட்டம் ஆரம்பமாகியது. இந்த இரு கட்டங்களிலும் நிலவி வந்த குறிப்பிடத்தக்க அம்சம் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்கதோர் தேசிய நாணயத்தைக் கொண்ட பொருளாதார வல்லரசு ஒன்று உலக மயமாக்கலுக்கு அவசியமாகின்றது.

20ம் நூற்றாண்டின் பின்னைய பகுதியின் போது அரசு முதன்மையான ஓர் பங்கினை வகித்து வந்த அபிவிருத்தி மாதிரி ஒன்றினை வளர்முக நாடுகள் பின்பற்றி வந்தன. இந்நாடுகளில் இறக்குமதி பிரதியீட்டு உத்தி குழந்தைப் பருவத்திலிருந்து வந்த அவற்றின் உள்ளூர் கைத்தொழிற் செழித்து வளர்வதற்கு உசிதமானதோர் சூழ்நிலை யினையும் பாதுகாக்கப்பட்ட சந்தை யினையும் வழங்கியது. இக்கொள்கை உத்திகள் 1950களிலும் 1960களிலும் தீவிர முனைப்புடன் எடுத்து செல்லப் பட்டன. எனினும் இந்த உள்முக வழிப்பட்ட கொள்கைகளின் விளைவாக செயற்றிறன் வீழ்ச்சியும் வெளியீடு இழப்பும் ஏற்பட்டு வறுமை ஏற்பட வழிகோலியது.

உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் அனுசரணை யுடனான அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் 1980, 1990 களில் உலகமயமாக்கலை மேலும் தீவிரப்ப டுத்தின. பல்தேசியக்கம்பனிகளும் இதில் முக்கியத்துவம் பெற்றன. கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி, தமது சொந்த நாடுகளில் இடம் பெற்று வந்த செலவு அதிகரிப்புக்கள் என்பன காரணமாக இக்கம்பனிகள் தமது உற்பத்தி வசதிகளினை வளர்முக நாடுகளிற்கு எடுத்துச் செல்கின்றன. 1990களின் பிற்பகுதியின்போது பெருந்தொகையான வளர்முக நாடுகள் பல்தேசியக் கம்பனிகளில் மூலதனத்திற்கெனத் தமது பொருளாதாரங்களினைத் திறந்து விட்டன. பிறிதொரு முனையில் முன்னெப்போதும் இருந்திராதவிதத்தில் ஏற்பட்ட தொழிநுட்பத்தாக்கங்கள், போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் என்பவற்றின் செலவுகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சிகளுடன் இணைந்த விதத்தில் உலகமயமாக்கலை மேலும் தீவிரப்படுத்தின.

இவ்வுலகமயமாக்கலின் ஓர் விளைவாகவே அமெரிக்க அரசானது அண்மையகாலத்தில் மேற்கொண்டு வரும் பிராந்திய வல்லாதிக்கமும், இராணுவ, பொருளாதார மேலாதிக் கங்களும் உலகப் பயங்கரவா தத்திற்கான போரும் வலுவுடைய

காரணமாகின. இதனாலேயே அமெரிக்காவானது வளர்முக நாடுகளது வளங்களை சுரண்டுவதுடன் உலக அரசியலில் தனது செல்வாக்கினைச் செலுத்தி அவற்றை உறுதியற்ற நிலைக்கு இட்டுச் சென்று அதன் மூலம் பொருளாதார ரீதியில் இந்நாடுகளைப் பலம் குன்றச் செய்ய முடிகின்றது. இது எதிர்காலத்தில் பாரிய வறுமையை ஏற்படுத்தலாம்.

இன்றைய நிலையில் முழு உலகமும் ஓர் பூகோளக்கிராமமாகச் சுருங்கிவரும் பின்புலத்தில் உலகளாவிய ரீதியில் பொருளாதாரங்கள் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் நிலை வரவர அதிகரித்து கொண்டு வருகின்றது. இந்த செயன்முறையில் 5 பிரதான கூறுகளினைக் காணலாம்.


1) சர்வதேச நிதிச் சந்தையில் ஏற்படும் துரித வளர்ச்சி.
2) பல்தேசியக் கம்பனிகளுக்கிடையில் ஏற்படும் வர்த்தக வளர்ச்சி.
3) வெளிநாட்டு நேரடி முதலீடுகளிற் காணப்படும் பெரும் பாய்ச்சல்.
4) உலகளாவிய சந்தைகளின் எழுச்சி
5) உலகமயமாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் வசதிகளினூடாகவும் தொழில்நுட்பக்கருத்துக்கள் வியாபித்துச் செல்லல்.

இந்தச் சூழ்நிலையில் பேரளவிலான அரசியல் மற்றும் பொருளாதார சக்தியினைத் தம் வசம் கொண்டிருக்கும் ஐரோப்பா, யப்பான், சீனா, ரஷ்யா, அமெரிக்கா, போன்றன வல்லரசாக மாறுகின்றன. 1990களில் உலகளாவிய ரீதியல் ஏற்பட்ட தொழிநுட்பமாற்றங்கள், தகவல் தொழிநுட்ப புரட்சி, மற்றும் சோவியத் ரஸ்யாவின் உடைவினை அடுத்து சர்வதேச ரீதியில் அரசியல் சூழலில் ஏற்பட்ட திருப்பங்கள், போன்றன பெருமாற்றங்கள் உலகப் பொருளாதாரம் படிப்படியாக ஒருங்கிணைவதற்கான தேவையைத் தோற்றுவித்தன. 1990களின் நடுப்பகுதியில் வளர்முக நாடுகள் அனைத்துமே உலகவர்த்தக நிறுவனத்தின் உறுப்புரிமையை பெற்றுக் கொண்டதுடன் வர்த்தக தாராளமயமாக்கலுக்கான தன்மையையும் பெற்றுக் கொண்டது.

## உலகமயமாக்கலின் பரம்பல்


எவ்வாறு இருப்பினும் உலகமயமாக்கலின் அனுகூலங்கள் நாடுகளிற்கிடையில் சமமான முறையில் பகிரப்பட்டிருக்கவில்லை என்பதனை U.N.Oன் அபிவிருத்தித்திட்ட அறிக்கை போன்ற பல ஆவணங்கள் தெட்டத்தெளிவாகக் காட்டுகின்றன.

**உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தி**
**(அமெரிக்க டொலர் பில்லியனில்)**





ஆதாரம்:- உலகவங்கி உலகமேம்பாட்டுக் குறிப்புக்கள் 2000

**உலகின் சராசரி உள்நாட்டு உற்பத்தி**
**(1995 அமெரிக்க டொலர்)**




ஆதாரம்:- U.N.D.P மனிதவள மேம்பாட்டு அறிக்கை 2000


உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த 25 வருடங்களில் 5 மடங்காக உயர்ந்திருக்கின்றது. எனினும் அதேகால அளவின்போது உலக அளவில் தலைக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.5 மடங்கு மட்டுமே அதிகரித்தது. இந்த உயர்வு எல்லோருக்கும் பகிரப்படவில்லை. இவ் அதிகரிப்புக்கூட உலகிலுள்ள எல்லா மக்களிற்கும் ஏற்படவில்லை.





ஆதாரம்:- உலகவங்கி வறுமை 2000

வளர்முகநாடுகளில் ஒரு நாளைக்கு 1$க்குக் குறைவான செலவில் வாழும் மக்கள் எண்ணிக்கை (120 கோடி) சென்ற தசாப்பத்தில் மாறவில்லை. உலக மக்களில் 20% பேராகவுள்ள பணக்காரர்களும் பரம ஏழைகளுக்கு மிடையிலான வருமான இடைவெளி கடந்த 40 ஆண்டுகளில் இருமடங்கா கியுள்ளது.

**உலக மக்களில் மிகவும் பணக்கார 20% பேரும், மிகவும் ஏழைகளான 20% பேரும் ஈட்டும் வருமானத்தின் விகிதம்**





**உலகின் மிகுந்த பணம் படைத்த 5 நாடுகளினையும் மிகவும் ஏழையான 5 நாடுகளினையும் காட்டும் வரைபடம் 1950-1992 (1999ல் தலைக்குரிய மொ.உ.நா.உ/தீ (அ.டொலரில்)**




**ஆதாரம்:- UNDP மனிதவள மேம்பாட்டு அறிக்கை**

உலகின் மிகுந்த பணக்கார நாடுகள் ஐந்தையும் மிக ஏழையான நாடுகள் ஐந்தினையும் நோக்கின் இந்த அளவு மூன்று மடங்காயுள்ளது. சில குறிப்பிட்ட பகுதிகளில் இந்த ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகத் தெரிகின்றது. எடுத்துக்காட்டாக மிகவும் ஏழையாகவுள்ள 20% மக்கள் உலகின் இணையம் பயன்பாட்டா-ளர்கள் 0.2% மட்டுமே. அதேசமயம் மிகவும் பணக்காரராகவுள்ள 20% பேர் இந்தப்பயன்பாட்டாளர்களில் 93.3% ஆக உள்ளனர்.




உலக மொத்த உள்நாட்டுஉற்பத்தியில் பங்குகள் | சரக்குகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி பங்குகள் | அயல் நாட்டு நேரடி முதலீட்டு பங்குகள் | இணையப் பயன்பாட்டாளர்களில் பங்குகள்

**ஆதாரம்:- மனிதமேம்பாட்டு அலுவல்கள் அமைச்சு 1999**

உலகமயமாக்கலின் விரிவாக்கத்துடன் இணைந்தவிதத்தில் சமூக, அரசியல் கொந்தளிப்புக்கள் தோன்ற முடியும் என்பதனை 1999ம் ஆண்டில் சியாட்டில் நகரத்திலும் பல 3ம் உலக நாடுகளிலும் இடம் பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எடுத்துக் கூறுகின்றன. இந்த சியாட்டில் போராட்டமானது செய்தித்தொடர்பு சாதனங்களால் கடல் ஆமையின் தலைவிதி பேன்ற அற்பபிரச்சினைகளில் கவனம் செலுத்தும் புதிய போராளிகளென்று வர்ணிக்கப்பட்டது.

உலகமயமாக்கலை எதிர்ப்பவர்களினை கண்டிப்பவர்கள் இன்னும் பல சிக்கல்களிற்கு உணர்ச்சிவசப்பட்டுப் பதிலளிக்கின்றனர். முதலாளித்துவம் தன்பரம எதிரியான பொதுவுடமையை வெற்றிகளடைவதனனை அவர்களிலளவிற்கு மீறிக் கொண்டாடுகின்றனர். முதலாளித்துவத்தின் பேராசைக்கும் சமூக உணர்வின் மைக்கும் மாற்றுகளினைத் தேடும் கோட்பாட்டு வாதியின் நிலைமை உளவியல் முறையில் சகித்துக் கொள்ள முடியாது என்று கருதுகின்றனர். இவர்களிற் சிலர் சூனியவாதத்திற்கும் அறிவு எதிர்ப்பு வாதத்திற்கும் திரும்புகின்றனர். இன்னும் சில அறிவாளிகள் வணிகர் கழகங்கள் என்பவை முதலாளித்துவத்தின் தீய சக்திகள் என்றும் அவை அரசையும், மக்களையும், நிறுவனங்களினையும் உலக வணிக அமை வளத்தினையும் கூடக்கைப்பற்றிக் கொண்டன என்றும் கூறிகின்றனர்.

ஆனால் இந்த எதிர்ப்பாளர்கள் ஒன்றை மறந்து விடுகின்றார்கள். சில பொருளாதார தந்திரங்கள் எந்த சூழ்நிலையிலும் வழமைக்கும் சமூக நல்வாழ்வுக்கும் அடிப்படையானவை என்பதனையும் மறந்து விடுகின்றார்கள். எடுத்துக்காட்டாகச் சொத்துரிமைகள் சந்தைகள் என்பன வள ஆதாரங்களினைத் திறமையாக உற்பத்தி செய்து ஒதுக்கீடு செய்வதற்கு ஊக்கமளிக்கின்றன. எங்கும் நிறைந்த அரசுக் கட்டமைப்புக் களுக்கு வெளியே உயிர் வாழ்வதற்கான வழிவகைகளை அனுமதிப்பதன் மூலம் மக்களாட்சியினை வலுப்படுத்தவும் முடியும். பின் பெண்கள், ஏழைகள் போன்றோருக்கு அதிக அரச செலவீனம், பொருளாதார ஊக்குவிப்புக்கள் வாயிலாக எழுத்தறிவும், வேலைவாய்ப்பும், சுகாதார வசதியும் பெறும்படி செய்யலாம். இதுவும் உலகமமாக்கலின் படிமுறை எனலாம்.

என்னும் ஏழை நாடுகளில் வறுமை தொடரவும் நாடுகளிற் குள்ளேயும் நாடுகளிற்கு வெளியேயும் ஏற்றத்தாழ்வுகள் பெருகுவதற்கும் கட்டில்லாச் சந்தையும் கட்டில்லா வர்த்தகமுமே காரணம் எனப்படு கின்றது. நாடுகளிற்கிடையே ஏற்றத் தாழ்வுகளினைப் பொறுத்தவரை உலகப் பொருளாதாரத்துடன் தங்களினை ஒருங்கிணைத்த நாடுகள் மட்டுமே அதாவது "தூரகிழக்கு நாடுகள் ஆசியன் நாடுகள் மட்டுமே திடீர் வளர்ச்சி வீத்தினைக் கொண்டிருந்தன. அதே சமயம் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும், அமெரிக்காவிலுமுள்ள பல நாடுகள் உள்முகமாக நோக்கி வளர்ச்சியை எட்டுவதில் தோல்வி கண்டனர். அத்துடன் வறுமையைக் குறைப்பதிலும் தோல்வி கண்டனர்.

இதற்கிடையில் வளர்முக நாடுகளிலுள்ள அரசுகள் பெருமளவு செலவுகள் செய்யாமல் உலகமய-மாக்கலுக்கு ஈடுகொடுக்க முடியாது என்று கூறப்படுகின்றது. எடுத்துக்-காட்டாக தென்னாபிரிக்க அரசு தனது சமூக சீர்திருத்தத்திட்டங்களினை முனைப்புடன் அங்கிருந்து மூலதனம் வெளியேறிவரும் அபாயத்தை எதிர்நோக்குகின்றது. அதே சமயம் சமூக சீர்திருத்தங்களினை அந்த அரசு கைவிட்டால் அந்நாட்டு மக்கள் பேரிழப்புக்கு உள்ளாக வேண்டும். இத்தகைய நிலையில் அரசுகள் முதலாளித்துவத்திற்கு ஆதரவான நிலையையே பெருமளவு எடுத்துள்ளன. இதற்குக் காரணம் பொருளியல் அறிஞர் "பால் குருக்மன்" கூறியுள்ளது போல் பொதுவுடமையின் வீழ்ச்சியானது முதலாளித்துவத்தின் எதிர்ப்பின் இதயத்தினை அகற்றி விட்டது.

## உலகமயமாக்கலின் விளைவுகள்

உலகமயமாக்கலின் விளை-வுகளினைப் பட்டியலிட்டால் அவை நீண்டு கொண்டே போகும். சகாராவை யொட்டிய ஆபிரிக்க நாடுகள் போன்ற தான வருமானம் குறைந்த நாடுகளில் உலகளாவிய முதலாளித்துவத்தின் புதிய கட்டத்திலிருந்தும் கட்டமைப்பு சீர் திட்டத்திலிருந்தும் மிக அடிப்படைப் பாதுகாப்பை அரசுகள் அளிக்க முடியவில்லை. அதனால் அங்கு மக்களிற்கு அவலமதிகமாகின்றது.

வறுமை, மக்கள் தொகைப் பெருக்கம், சுற்று சூழல், சீர்கேடு, அகியன ஒன்றோடொன்று பின்னிப்-பிணைந்துள்ளன. இதனாலேயே உலகவறுமை என்பது பெண்கள் வறுமை எனப்படும் அளவிற்குக் காணப்படுகின்றது. இவ்வாறு பெண்கள் வறுமை கலாசார சீரழிவினை ஏற்படுத்தி பாலியல் தொடர்பான நோய்கள், சமூகவிரோத தொழில்கள் ஏற்பட வழிவகுக்கும்.

மக்கள் தொகைப் பெருக்கத் தினால் காடழிப்பு, மண் அகழ்வு போன்றன இடம்பெறும். வறுமை ஏற்பட மக்கள் நகர்புறம் நோக்கி இடப்பெயர் வினை மேற்கொள்கின்றனர். மேலும் பன்நாட்டு வணிகக்கழகங்கள் சுற்றுச் சூழலினைச் சீரழிப்பதனால் மக்களிற்கும் நிலத்திற்குமிடையே மரபாக நிகழ்ந்து வந்த சுகவாழ்வு சீரழிகின்றது.

U.S.A, IMF, WB, WTO போன்றவற்றினால் முன்வைக்கப்படும் நவ தாராளவாத பொருளாதாரம் சந்தை சக்திகளின் எவ்வித இடையூறு

களுமின்றி தாராள மயமாக்கல், ஒழுங்குவிதி தளர்வு, தனியார்மய மாக்கல் என்பவற்றிற்கூடாக இயங்கி அனுமதிப்பதன் மூலமும் பொருளா தாரத்தின் அரசின் பங்கினைக் குறிப்பதன் மூலமும் பொருளாதார செயற்றிறன் விருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டது. I.M.F இல் இருந்து உதவி பெறும் நாடுகள் இத்தகைய கொள்கையினைப் பின்பற்ற வேண்டும் என நிபந்தனை விதிப்பதால் சர்வதேச வர்த்தகம், சுற்றுலாத்துறை, வெளிநாட்டு முதலீடு, தொழினுட்பப் பரிமாற்றம் என்பன பரவலான முறையில் பெருக்கம் கண்டிருப்பதுடன் மேலை நாட்டு வாழ்க்கைப் பாணிகள், கலாசாரம் என்பன வளர்முக உலகில் காலூன்றுகின்றது.

உலகமயமாக்கமானது பெரும் பாலான வளர்முக நாடுகளினை உதாசீனப்படுத்தியுள்ளது. வளர்ச்சி யடைந்த நாடுகள் அல்லது கைத் தொழில் நாடுகள் என்பனவும் அந்நாடுகளில் வாழும் பெரும் செல்வந்தர்களும் உலகமயமாக்கலின் மூலம் உச்சமட்ட அனுகூலங்களினை ஈட்டுகின்றனர். மிக வறிய வளர்முக நாடுகளும் அவற்றின் மக்களும் பெரும் பாதிப்பினை எதிர்கொள்கின்றனர்.

உலகமயமாக்கல் கைத் தொழில்களினை வளர்முக நாடுகளிற்கு எடுத்துச் செல்வதுடன் ஏற்றத்தாழ்வான வர்த்தக முதலீட்டு வளர்ச்சியைக் கொண்டதால் பண்டங்களின் விலை, செல்வம் மற்றும் வருமானம் என்பவற் றின் பகிர்வில் காணப்படும் ஏற்றத்தாழ்வு என்பன ஏற்படுகின்றது. இதனை வருமாறு காட்டலாம்.

*சராசரி வருடாந்த வளர்ச்சி வீதம் 1965–1996*

| பிராந்தியம் | தலைக்குரிய மொ.தே.உ/தி | மொத்த உள் நாட்டு முதலீடு | பண்டசேவைகள் ஏற்றுமதி | மொத்த தேசிய உ/தி விகிதாசாரமான வெளி நாட்டு நேரடி முதலீடு | |
|---|---|---|---|---|---|
| | | | | 1968 | 1996 |
| கிழக்காசியா | 5.5 | 9.4 | 8.8 | 0.4 | 4.0 |
| தென்னாசியா | 2.2 | 5.3 | 6.2 | 0.1 | 0.7 |
| இலத்-அமெரிக்கா | 1.1 | 2.0 | 5.2 | 0.8 | 2.1 |
| ஆபிரிக்கா | 0.2 | 1.1 | 2.1 | 0.0 | 1.1 |
| வளர்முகநாடுகள் | 1.6 | - | | 0.2 | 2.2 |

மேலும் உலகமயமாக்கமானது வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வளர் முக நாடுகளிலும் துரித வளர்ச்சியும், வருமான அதிகரிப்பும் கொண்டுள்ளதால் பாதுகாப்பின்மையும் எதிர்கால நிச்சய மற்ற தன்மையும் காணப்படுவதுடன் தொழில் மற்றும் வருமான பாதுகாப்பு இன்மையும் எதிர்கால நிச்சயமற்ற தன்மையும் காணப்படுவதுடன் தொழில் மற்றும் வருமான பாதுகாப்பின்மையும் காணப்படுகின்றது. மேலும் பல்தேசிய நிறுவனங்கள் வளர்முக நாடுகளில் இயங்கிவரும் தொழிற்சாலைகளிலும் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களி-லும் குறைந்த சம்பளங்கள், தொழிற்சங்க உரிமை மறுப்புக்கள், நலன்புரி சேவைகள், புறக்கணிப்பு போன்ற மனித உரிமை மீறல்கள் இடம் பெறும்.

அத்துடன் உலகமயமாக்கல் பாரியளவு குற்றச் செயல்களிற்கான கதவுகளினைத் திறந்து விட்டிருப்பதுடன் பெருமளவிற்குத் தனிப்பட்டளவில் பாதுகாப்பின்மையினையும் உருவாக்கியுள்ளது. போதைவஸ்துக்களினாலான சட்டவிரோத விற்பனைகளும் பெண் வணிகமும் ஆயுத வர்த்தகமும் கறுப்புப் பணமும் உலகெங்கிலும் வன்முறைகளும் அதிகரித்துள்ளன. விபச்சாரத்துக்கான பெண்களினையும் குழந்தைகளினையும் வருடாந்தம் மேற்கு ஐரோப்பாவிற்கு மட்டும் 500,000 பேர் அனுப்பப்படுவதனால் 700 கோடி அமெரிக்க டொலர் வருமானமாகப் பெறப்படுகின்றது. மறுபுறம் உலகமயமாக்கலினால் தூண்டப்பட்ட பயணங்களின் பெருக்கமும் H.I.V எயிட்ஸ் நோயின் பெருக்கத்திற்கும் பாரிய சுகாதார அச்சுறுத்தலுக்கும் வழிகோலியுள்ளது.

உலகமயமாக்கலின் கலாசாரம் தலையிடாக் கொள்கை முதலாளித்துவம் மற்றும் கட்டற்ற சந்தைகள் என்பவற்றின் பணக்கலாசாரமாகும். இதனால் கலாசாரமும், கருத்துக்களும் அறிவும் உலகின் அனைத்து மூலைகளிலிருந்தும் மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் அவர்களினுடைய வாழ்க்கையைத் திறந்து விடுகின்றது. ஆனால் இன்று கலாசாரமும் ஒரு வழிப்பாதையில் அதாவது வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து வளர்முக நாடுகளினை நோக்கியதாகவே காணப்படுகின்றது.

உலகமயமாக்கலின் கீழ் சந்தைகள் புதிய நாடுகள், புதிய பிரதேசங்களினை நோக்கி நகர்வத னால் சுற்றுச் சூழல் மாசடைகின்றது. மரத்தேவைக்காக வெப்பவலயங்களுள் பெருமளவு அழிக்கப்படுவதுடன் மீன்வளம் விரைவாக வீழ்ச்சியடைகின்றது. அத்துடன் உயிர் பன்முகத்தன்மை பாதிக்கப்படுவதுடன் பவளப்பாறைகளில் 10% அழிக்கப்படுகின்றது. மேலும் மண் அழிவு இடம்பெறுவதுடன் சுற்றுப்புறச் சூழல் கேடு இடம்பெறுகின்றது. நீர்மாசடைதல் காரணமாக வருடாந்தம் 50-70 இலட்சம் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். சுற்றுச்சூழல் மீது நிகழ்த்தப்படும் அழிவு மற்றும் சீரழிவு என்பன கோளவெப்பம் அதிகரித்தல், ஓசோனது வாரம் போன்றன ஏற்பட்டு பாரிய அழிவுகள் ஏற்படும். அத்துடன் பல நாடுகளில் பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் சுற்றுச்சூழல் குறித்து அக்கறை செலுத்தாமல் அச் சூழலை மிதமிஞ்சிய அளவில் சுரண்டி வருவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## உலகமயமாக்கலினைக் கட்டுப்படுத்தல்

உலகமயமாக்கல் ஓர் உலக அபிவிருத்திச் செயன்முறையில் ஓர் உள்ளார்ந்த காரணியாக இருந்து வருவதுடன் அதனைத் தடுத்து நிறுத்துவது அனேகமாகச் சாத்திய மற்றுப் போகலாம். ஆனால் அதனைக் கட்டுப்படுத்த முடியும். இன்று எம்முன் இருக்கும் சவால் உலகமயமாக்கல் அனைத்து நாடுகளிற்கும் அனைத்து மக்களிற்கும் ஏற்றத்தாழ்வற்ற விதப்படி வழங்குவதனை உத்தரவாதப்படுத்துவது எப்படி? என்பதாகும். இதனை ஊகித்துக் கொள்ளும் பொருட்டு சந்தையின் மிதமிஞ்சிய அளவிலான மேலாதிக்கத்தின் எதிர்மறையான அம்சங்களினை அகற்றிவிடும் அதே வேளையில் உலக

ளாவிய சந்தைகள் மற்றும் போட்டி என்பவற்றின் அனுகூலங்களினைத் தக்கவைத்துக் கொள்வதற்கான வழி வகைகளினையும் கண்டறிய வேண்டியுள்ளது.

ஒரு நாட்டின் உண்மையான செல்வம் மக்கள் செல்வம் என்பதனை நாம் மறக்கக்கூடாது. பொருளாதாரத்துக்கான நோபல்பரிசு பெற்ற பேராசிரியர் "அமர்த்தியாசென்" குறிப்பிட்டது போல பொருளாதார அபிவிருத்தியின் குறிக்கோள் பண்டங்களுடன் சம்பந்தப் பட்டவையாக இருப்பதனைவிட அதிகளவில் மக்களுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கின்றது. இக்கொள்கைகள் சமூகத்தில் மிகவும் மோசமாக வாழும் மக்கள் பிரிவினர் மீது குறிப்பாகக் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

இன்று 440 கோடி மக்கள் வளர்முக நாடுகளில் வாழ்கின்றனர். இவர்களில் 33%த்தினர் கடும் ஏழைகளாகவும் 20% மக்கள் படிப்பறிவிலும் போசாக்கிலும் கீழ் நிலையிலேயே காணப்படுவதுடன் 25%த்தினர் போதிய வீட்டுவசதியற்றும் 36%த்தினர் சுத்தமான நீரின்றியும் உலக சனத்தொகையில் 20%த்தினர் 5ம் வகுப்பிற்கு மேல் படிக்காமலும் உள்ளனர். இத்தகைய பிரமாண்டமான வறுமை, நோய் மற்றும் எழுத்தறிவின்மை என்பவற்றை உலகமயமாக்கற் கட்டற்ற சந்தைச் சக்திகள் மூலம் ஒழிக்கலாமென்பது வீண் மாயையாகும்.

எனவே உலகமயமாக்கல் சந்தையை மேலுயர்த்துவதுடன் தனியார் துறையின் வளர்ச்சியில் பிரதான இயந்திரமாக இருந்து வருகின்றது. அது அரசு தலையீட்டினை ஒழிக்கின்றது. கட்டற்ற சந்தையின் மூலம் மேம்பட்டு வரும் பொருளாதார வளர்ச்சி மக்களிற்கிடையாலும், நாடுகளிற்கிடையில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளினை நீக்க மாட்டாது மேலும் அது வறுமை, தந்திரநிலை, நோய், அறியாமை, மனித உரிமை மீறல், பாதுகாப்பற்ற நிலை, கலாசாரம், மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றுக்கான அச்சுறுத்தலையும் ஒழிக்க முடியாது. உலகமயமாக்கல் மூலம் கட்டவிழ்க்கப்பட்டுள்ள மிகக் கொடூரமான சந்தைச் சக்திகளினை மிதமான வழியில் நெறிப்படுத்துவதன் மூலம் மட்டுமே வளர்ச்சியையும் சமத்துவத்தினையும் சாதிக்க முடியும்.

## முடிவுரை

ஐ.நா.வின் மானிட அபிவிருத்தி அறிக்கை (1999) "உறுதியான கட்டுப்பாட்டு நிர்வாகம் இல்லாதிருந்தால் 21ம் நூற்றாண்டின் உலகளாவிய பல முரண்பாடுகள் யதார்த்தமாக வெடிக்கக்கூடும்" என்கின்றது. கடந்த ஓரிரு தசாப்தத்தில் இடம்பெற்று வந்திருக்கும் உலகமயமாக்கலின் பெரும் பாய்ச்சல் ஓர் ஆரம்பம் மட்டுமேயாகும். உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட உலகம், உலகளாவிய சந்தைப்போட்டியின் அனுகூலங்களினைப் பாதுகாத்து உலகமயமாக்கல் சக்தியை மானிட முன்னேற்றத்துக்கு உதவும் விதத்தில் திசை திருப்ப வேண்டுமானால் மிகச்சக்தி வாய்ந்ததோர் நிர்வாக முறைமை அவசியமாகும். கல்வி, தொழினுட்பம், அரசாட்சி, பயிற்சி, நிதி, வங்கித்-தொழில், காப்புறுதி, மற்றும் போக்குவரத்துப் போன்ற வளங்கள-

னைத்தும் வளர்ச்சியடைந்துள்ள கைத்தொழில் நாடுகளிலேயே ஒன்று திரண்டுள்ளன. இந்நிலையில் வளர்முக உலகம் உடனடியாக எதிர்காலத்தில் மாற்றம் பெற்றுச் செல்வச்செழிப்பு என்பவற்றைச் சாதித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அரிதாகவே தென்படுகின்றன. உலகமயமாக் கலினை முனைப்புடன் ஆதரித்துப் பேசுபவர்கள் வறிய நாடுகள் தொடர்பாக அவர்கள் முன்வைத்துவரும் அபிலாஷையும் கூடிய இலக்குகள் சாதித்துக் கொள்ளப்படுவதனை உறுதி செய்தாலே ஒழிய இன்றைய இருண்ட யதார்த்த நிலைமைகள் இன்னும் பலவருடங்களிற்கு அவ்வாறே தொடர்ந்து நீடித்து வரக்கூடும் மேலும் உலகமயமாக்கலானது வறுமையை ஒழிக்கவோ அன்றி, மக்களின் முன்னேற்றத்துக்கோ பயன்படவில்லை. என U.N.O அறிக்கை கூறுகின்றது. அதாவது 1960ல் தொடங்கிய மக்களது முன்னேற்றம் தற்போது நின்றுவிட்டது அல்லது தடைப்பட்டு விட்டது என்றே

**References**


✍பொருளியல் நோக்கு ஏப்ரல்/மே 2000. பக். 01-16

✍யுனெஸ்கோ கூரியர் (உலகமயமாக்கலின் மறுபக்கம் நவ - 2000.

✍Word development Report -2000


## உலகமயமாக்கல் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியதா?

அதிகரித்த சர்வதேச வர்த்தகம் மற்றும் மூலதன பாய்ச்சல்கள் போன்றன உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கும் உன்னதாமான வாழ்க்கைத் தரத்திற்குமான பிரதான மூலங்கள் ஆகும். பொருளாதாரத்தை திறந்து விட்டதால் பல நாடுகள் திறந்து விடாத நாடுகளை விட மேன்மை அடைந்துள்ளன என்பதை பல ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. மிக வேகமாக வளர்ந்து வரும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் உள்முகம் நோக்கிய கொள்கையினால் உயர்ந்த அபிவிருத்தியை அடைந்தன என்பதற்கு எதுவித சான்றுகளும் இல்லை. அவ்வாறு இருப்பினும் எல்லா திறந்தபொருளாதாரங்களும் பொருளாதார சபீட்சத்தை பெறவும் இல்லை என்பதும் உண்மையாகும். உலகமயமாக்கல் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திய நாடுகளில் கூட அடிமட்ட மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கும் மேல்மட்ட மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கும் இடையில் உள்ள இடைவெளியானது அதிகரித்துள்ளது. இதேபோன்று வறிய நாடுகளின் ஒட்டு மொத்தமான வாழ்க்கைத்தரம் அதிகரித்த போதும் செல்வந்த நாடுகளின் வாழ்க்கைத்தர அதிகரிப்போடு ஒப்பிடும் போது இரு நாடுகளின் வாழ்க்கை தர இடைவெளியானது அதிகரித்துள்ளது.

**Source:** *Finance of development march 2002*

# உலகமயமாக்கலில் வளர்முக நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள்
# The challenges faced by developing countries in the Globalization

A. Thayaparan,
Lecturer,
Department of Economics & Management
Vavuniya campus, Vavuniya.

உலகமயமாக்கல் என்பது அடிப்படையில் ஏனைய உலக பொருளாதாரங்களுடனான ஒரு நாட்டினது பொருளாதார ஒருங்கிணைப்பை குறிப்பிடுகிறது. இவ்வகையில் உலகமயமாக்கலானது ஒரு பல்பரிமாணத்தைக் கொண்டதாக எல்லாக் கூறுகளையும் அதாவது பொருளாதார, நாகரிக, சூழலியல் மற்றும் சமூக விடயங்களை உள்ளடக்கியதாக அரசுக்கும் நாடுகளுக்கும் இடையிலான தொடர்பை விளக்குவதாக அமைந்துள்ளது. இதன் மூலம் வர்த்தக மேம்பாடு, அதிகளவிலான நிதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீகளது பாய்ச்சல் போன்றவை விரைவான தாராண்மைப்படுத்தலின் ஊடாகவும் முன்னேற்றமடைந்த தகவல் தொழில்நுட்ப புரட்சியின் ஊடாகவும் தூண்டப்படுகிறது. Jilberto, Mommen போன்றவர்கள் உலகமயமாக்கலானது நாடுகளுக்கும், சமூகங்களுக்குமிடையிலான பல்பக்க தொடர்பாடல் களையும் உட்தொடர்புகளையும் கொண்டதென குறிப்பிடுகிறார். முக்கியமாக Leheron என்பவர் உலகமயமாக்கலை விவசாயத் துறையுடன் இணைத்த வகையில் விவசாயத்துறைக்கு முதல் சார்ந்ததும், கைத்தொழில் மயமாக்கப்பட்டதுமான விவசாயத்துறைக்கு தூண்டுதல் அளிப்பதனூடாக உலகமயமாக்கப்பட்ட விவசாயத்தை (Globalized Agriculture) உருவாக்கப்படுவதற்கான தூண்டுதல் அளிக்கப்படுகிறதென குறிப்பிடுகிறார். மேலும் அவர் ஒருங்கிணைக்கப்பட்ட விவசாய உற்பத்தி முறைகளானது (Integrated Agro production systems) உலக மயமாகும் விவசாயத்துறைக்கு ஒரு மைல்கல்லான அடையாளமாக அமைந்து விடுகிறது எனவும் குறிப்பிடுகிறார். இவ்வாறு உலகமயமாக்கலை விவசாயத்துறையுடன் இணைத்து உருவாகும் உலகமயமாகும் விவசாயத் துறையானது உற்பத்தி நடவடிக்கைகளின் அகன்ற ஒரு துறையை குறிப்பதாகவும் உலக செயன்முறைகளுக்கும், உள்ளூர் செயன்முறைகளுக்கும் இடையிலான உள்தொடர்புகளை பிரதிபலிப்பதாகவும் அமைந்து விடுகிறது.

மேலும் நுகர்வோரின் கேள்வி மாற்றங்கள் இத்தகைய உலகளாவிய மாற்றங்களில் முக்கியமான பங்கை பெற்று வருவதால் இதன் மூலம் உலகமயமாக்கலானது "புதிய சந்தைகள்" என்று அர்த்தப்படுவது போல புதிய போட்டியாளர்கள் என்பதையும் அர்த்தப் படுத்துவதாக அமைகிறது என்று Klein, Kerr என்பவர்கள் கருதுகின்றனர். இதனால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளிலுள்ள நிறுவனங்களுக்கு செலவைக் குறைப்பதற்கான போட்டியிலும் (Cost competitive)

புதுமைகளை கண்டறிவதற்குமான தொடர்ச்சியான அழுத்தங்களை பிரயோகித்து வருகிறது. மேலும் உலகமயமாக்கல் வர்த்தகத்துக்கான பரந்த சந்தைகளையும், வர்த்தகம் செய்யக்கூடிய இயலளவை விரிவாக்கம் செய்வதனையும் மற்றும் தனியார் மூலதன உள்பாய்ச்சல்களையும் தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் உருவாக்கிவிடுவதால் உலகமயமாக்கல் பற்றிய அண்மைய கருத்தானது எல்லா நாடுகளிலுமுள்ள, உற்பத்தியாளர்கள் நுகர்வோர்கள் ஆகிய இருசாரர்களுக்கும் முக்கியமானதொரு எண்ணக்கருவாக விளங்கி வருகிறதெனலாம். இந்த எண்ணக்கரு உலக சூழலுடனான (global environment) மாற்றங்களுடன் இணைந்த விதத்தில் ஒரு நாட்டினது உற்பத்தியை ஒழுங்கு செய்வதற்கான தேவைப்பாட்டையும் வலியுறுத்துகிறது. அதே நேரத்தில் West, Vaughan என்பவர்களின் கருத்துப்படி உலகமயமாக்கல் செயன்முறையானது உலக உணவு உற்பத்தியையும், விவசாயத்துறை உற்பத்தியை அடிப்படையாக கொண்ட கைத்தொழில்களை அதிகரிப்பதிலும் முக்கியத்துவம் பெற்று விடுகிறதென்று குறிப்பிடுகின்றனர்.

உலகமயமாக்கலானது சுதந்திரமான வர்த்தக ஊழிய மற்றும் மூலதன பாய்ச்சல்களின் ஊடாக பொருளாதாரங்களுக்கிடையில் ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் செயன்முறையை உருவாக்குவதன் மூலம் உலகின் பலநாடுகளில் வாழும் மக்களது வாழ்க்கைத்தர முன்னேற்றத்துக்கும் வருமான அதிகரிப்புக்கும் உதவி புரிகிறது. தவிர இத்தகைய ஒருங்கிணைப்பின் மூலமாக தகவல்களது பரவலாக்கம் அதிகளவிலான தெரிவு சுதந்திரம் போன்றவற்றால் மனித சுதந்திரமும் தூண்டப்படுகிறது. இவ்வாறாக உலகமயமாக்கலினால் பல சாதகமான விளைவுகளை அனுபவிக்க முடிந்தபோதிலும் அதனால் வரும் எல்லா மாற்றங்களும் நேரானவை என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. பொருளாதார வளர்ச்சியின் தூண்டுதலின் ஊடாக சராசரியான வறுமை வீழ்ச்சியடைந்தாலும் சில நாடுகளைப்பொறுத்து குறிப்பாக வளர்முக நாடுகளைப் பொறுத்து எதிரான தாக்கங்களையும் ஏற்படுத்தி வருவதை காணலாம். மேலும் பொருளாதார கொள்கைகளுக்கும், அதன் பலாபலன்களுக்குமிடையிலான தொடர்பு பற்றியும் வினா எழுப்பப்படுகிறது.

அதிலும் வறுமை மீது பேரினப் பொருளாதார கொள்கைகளும் அமைப்பு ரீதியான சீராக்க கொள்கைகளும் ஏற்படுத்தும் தாக்கம் பற்றியே ஆராயப்படுகிறது. உதாரணமாக வளர்ச்சியானது எவ்வெப்போது வறியோருக்கு நன்மையை அளிக்கும்? எவ்வெப்போது தீமையாக அமையும்? எவ்வாறு வர்த்தகம் வளர்ச்சியை உருவாக்கிறது? எல்லா வெளிநாட்டு மூலதனமும் வளர்ச்சியை அதிகரிக்கிறதா? மூலதனப் பாய்ச்சலானது தீமையற்றது என்பதை எவ்வாறு நாம் உறுதி செய்ய முடியும் என்பது போன்ற வினாக்கள் இது தொடர்பாக முன்வைக்கப்படுகின்றன. இதனாலேயே குறிப்பிட்ட அந்த நாடுகள் உலகமயமாக்கலுக்கு எதிராக சில சவால்களை சந்திக்க வேண்டியதொரு நிலைக்கு தள்ளப்படுகின்றன. அதாவது, உலகமயமாக்கலானது அதிகரித்த வளர்ச்சிக்கும் செல்வத்திற்கும் உதவி புரிகிறது. ஆயினும் எல்லா

நாடுகளும் இத்தகைய நலனை அனுபவிக்க முடிவதில்லை. குறிப்பாக குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்து அதிலும் விசேடமாக ஆபிரிக்க நாடு களைப் பொறுத்து அதன் அபிவிருத்தி மீதும் வறுமை மீதும் இது விரும்பத்த காத பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. உலக வர்த்தகத்தில் இந்த நாடுகளின் குறைந்தளவிலான பங்களிப்பு, குறைந்த ளவான வெளியீடு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு என்பவற்றின் பிரதிபலிப்பு கள் மூலம் இதை அறிய முடிகிறது. இவ்வகையில் உலகமயமாக்கலுக் கெதிரான கருத்துக்கள் முன்வைக்கப் படுவதையும் அவதானிக்கலாம். இவ்வகையில் உலகமய மாக்கலானது அதற்கு எதிரான சவால்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றன. உதாரணமாக ஆபிரிக்க நாடுகளைப் பொறுத்து அவை எதிர்கொள்கின்ற உலகமயமாக்கலின் சவால்களை சமாளிக்க வேண்டுமாயின் உலக பொருளாதாரத்துடன் இணையக் கூடிய வகையிலான சீர்திருத்தங்களை தூண்டக்கூடிய வகையில் சில அடிப் படையான நோக்கங்களை பூர்த்தி செய்ய வேண்டியேற்படுகிறது. அதிலும் முக்கியமாக

1) அதிகளவில் உள்நாட்டு, வெளி நாட்டு தனியார் முதலீடுகளை கவரக்கூடிய வகையில் சிறந்த சாத்தியமான சூழ்நிலைகளை உருவாக்குதல்.
2) அரசாங்கமானது சமூக அபிவிருத்தி குறிப்பாக சுகாதார கல்வி வசதி களை மையப்படுத்திய வகையில் தனது பொருளாதார கட்டமைப்பை மீளமைப்பதனூடாக தனியார் முதலீட்டை ஊக்குவித்தல்.
3) நிதிநிறுவனங்கள் விசேடமாக வங்கித்துறையானது நவீனமய மாக்கம், மீளமைப்பு, மற்றும் மூலதனச் சந்தை போன்ற ஏனைய நிதி நிறுவனங்களின் அபிவிருத்தி மூலமாக நிதித்துறையில் சீர்திருத் தங்களை ஏற்படுத்துதல்.
4) பிராந்திய ஒருங்கிணைப்பு, அதிகள விலான பொருளாதாரக் கூட்டி ணைப்பு, போன்றவையும் உலகளா விய பொருளாதாரத்துடனான இணைப்புக்கு மிகவும் முக்கிய மானது.

உலகமயமாக்கலினால் வரும் எதிரான விளைவுகள் குறிப்பாக வறுமையில் வாழும் மக்களுக்கு எதிரானதாக அமைந்துவிடுகிறது என்ற வகையிலேயே உலகமயமாக்கலின் ஊடான சுதந்திர வர்த்தகமானது செல்வந்த நாடுகளுக்கு மட்டுமே சாதகமாக அமைந்து விடுகிறது என்ற அடிப்படையிலும் இது உள்நாட்டு கொள்கைகள், உள்நாட்டு அபிவிருத்தி என்ற நோக்கின் அடிப்படையிலும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது என வாதிடப்படுகிறது. உலகமயமாக்கல் கிராமிய வறுமைத்தணிப்புக்கான பல சந்தர்ப்பங்களை வழங்குகிறது எனினும் உள்நாட்டு சந்தைகள் தாராண்மைப் படுத்தப்பட்ட நிலையிலும் கிராமிய வறியவர்கள் உலகமயமாக்கலின் நலன்களை அனுபவிப்பதால் பல சவால்களை எதிர்கொள்கின்றன. அதேபோல வினைத்திறன், சொத்து போன்ற விடயங்களில் சமத்துவமற்ற பங்கீட்டையும் ஏற்படுத்தி விடுவதுடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் வறியவர்களது பங்கு பற்றல் தொடர்பாகவும் தடைகளை உண்டாக்கிவிடுகிறது. தவிர உலக-மயமாக்கலினால் எமது சமூகத்துக்கு ஏற்பட்டுவரும் அழிவுகரமான தாக்கங்

கள் வெளித்தெரியும் அதே நேரத்தில் அதன் வழியாக எமது சமுதாயத்துக்கு ஏற்படும் சமூக, சூழலியல் அழிவுகளும் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்திவிடு கிறது குறிப்பாக,

1) உலக சனத்தொகையில் கிட்டத்தட்ட $^{1}/_{5}$ பகுதியினர் வறுமைக்கோட்டிக்கு கீழேயே வாழும் நிலை.
2) 1.5 Billionக்கு மேற்பட்ட மக்கள் சுத்தமான நீர், சுகாதார வசதி-களை பெற முடியாத சூழ்நிலை.
3) கிட்டத்தட்ட $^{1}/_{2}$ Billion க்குட்பட்ட மக்கள் தமக்கு தேவையான உணவைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை.
4) வறுமையால் பாதிக்கப்பட்ட சனத் தொகையில் கிட்டத்தட்ட 70% மானோர் பெண்களாகவுள்ள நிலை.

போன்ற மேற்கூறிய விளைவுகள் யாவும் சர்வதேச நாணயநிதியம், உலகவங்கி போன்றவற்றின் ஆலோசனைகளுக்கு அமைவாக உள்நாட்டு நாணயங்கள், பெறுமானத்தேய்வு, நாணயக்கட்டுப்பாடுகளின் மீள ஒழுங்கமைப்பு, தீர்வைகளின் நீக்கம் போன்றவற்றால் ஏற்பட்டதாகும்.

அண்மைக்காலமாக உலகமயமாக்கலின் விளைவாக தொழிலாளரும், தொழிற்சங்கங்களும் அதிகளவில் அதிகரித்து வரும்தாக்கங்களுக்குள்ளாகி வருகின்றன. இதனால் உலகின் பெரும்பாலான நாடுகள் அதிகரித்து வரும் வேலையின்மை கூலிக்குறைப்பு, தொழிற்சாலைகள், தொழிற்சங்கங்களை மீளமைப்பு செய்ய வேண்டிய தேவை போன்ற பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றன. குறிப்பாக இந்தோனேசியா, சீனா போன்ற நாடுகளை குறிப்பிடலாம். முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகளைப் பொறுத்து கிட்டத்தட்ட 38 Million மக்கள் வேலையின்றியிருக்க வேண்டியுள்ளது. வளர்முக நாடுகளைப் பொறுத்து உயர்ந்தளவிலான உற்பத்தித் திறனும் புதிய தொழில்நுட்ப முறைகளின் அறிமுகமும் அங்கு வேலையின்மையை உருவாக்கிவிடுகிறது.

உலகமயமாக்கலினால் அதிகரித்து வரும் அழுத்தங்களைத் தொடர்ந்து நாடுகள் ஒவ்வொன்றும் அதிகரித்து வரும் போட்டி அழுத்தங்களை சந்திப்பதற்கு உறுதியான தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. பாரம்பரிய வர்த்தக கோட்பாடுகளுக்கு அமைய காரணி ஒப்பீட்டு நன்மைக்கோட்பாடானது (Factor comparative Advantage) அந்த நாட்டினது உற்பத்திக்காரணிகளான நிலம், உழைப்பு, முதல் மற்றும் இயற்கை வளங்கள் போன்றவற்றை தொடர்புபடுத்தி விளக்குகிறது. முக்கியமாக வர்த்தகத்தில் கெக்ஸர் - ஒக்லின் காரணி ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடானது நாடுகளுக்கிடையிலான காரணி வளவேறுபாடே வர்த்தகத்துக்கு அடிப்படையாக விளங்குகிறது என வலியுறுத்துகிறது. மேலும் இக்கோட்பாடு உற்பத்திக்காரணிகள் நாடுகளுக்கிடையே அசைய முடியாதது எனவும் இக்காரணிகள் வெவ்வேறுபட்ட பொருட்களை உற்பத்தி செய்ய வெவ்வேறுபட்ட சேர்க்கைகளில் பயன்படுத்தப் படுகின்றன எனவும் எடுகோள் கொண்டு விளக்கப்படுகிறது.

மேலும் இம்மாதிரி ஒரு நாட்டின் ஏற்றுமதிப் பொருட்கள் அந்த நாட்டில்

மிகையாகவுள்ள காரணி வளத்தை அடிப்படையாக கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவும் எடுகோள் கொண்டு விளக்கப்படுகிறது. ஒப்பீட்டு நன்மையை அடிப்படையாக கொண்டு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை இது விளக்கிய போதும் உலகமயமாக் கல் என்ற இன்றைய எண்ணக் கருவினால் உற்பத்திக்காரணிகள் நாடுகளுக்கிடையே அசைய முடி யாதவை என்ற அடைப்படை எடுகோ ளானது அர்த்த மற்றதாக மாறிவிடுவதை அவதானிக்கலாம். இதனால் வர்த்தகத் திலும் போட்டியிலும் முக்கிய பங்கை வகித்த காரணி ஒப்பீட்டு நம்மைக் கோட் பாட்டின் முக்கியத்துவம் குறைவடைந்து வருவதை காணலாம். இதே நேரம் Fair banks, lindsay என்பவர்களது கருத்துப்படி இதனால் அடிப்படை பிரச்சனைகளில் ஒன்றான செல்வத்தை உருவாக்குதல் (Wealth creation) என்றவொரு பிரச்சனையை அபிவிருத் தியடைந்து வரும் நாடுகள் எதிர் கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துவிடு கின்றன எனவும் வாதிடுகின்றனர்.

உலகமயமாக்கலானது கிரா மிய வறுமைத்தணிப்பை மேற்கொள் வதற்கான பல சந்தர்ப்பங்களை வழங்குகிறது. எனினும் உள்நாட்டு சந்தைகள் தாரண்மைப்படுத்தப்பட்ட நிலையிலும் இக்கிராமிய வறியவர்கள் ஏற்கனவே பல பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர். இந்த நிலையில் உலகமயமாக்கல் மூலமான சர்வதேச சந்தைகளில் அவர்களது செயற்பா டுகளும் சவால்களை சந்திக்க நேரிடுகிறது. உலகமயமாக்கல், ஊழிய சிறப்புத்தேர்ச்சி, மற்றும் ஊழிய செறிவான உற்பத்திகளது பரிமாற்றம் என்ற அடிப்படையில் வறியவர்களுக்கு பல புதிய சந்தை வாய்ப்புகளை வழங்கி னாலும் அவர்களது திறனிலும் (Skills) சொத்துகளிலும் நிலவும் சமமற்ற பங்கீடு, இச்சந்தைகளில் அவர்கள் பங்குபற்றுவதில் பல சிரமங்களை ஏற்படுத்தி விடுகிறது. இவ்வாறு உள்நாட்டு சந்தைகளில் இவ்வறியவர் களது பங்கு பற்றலானது தடையாக வுள்ள போது ஊழியத்தின் தரம், வினைத்திறன் என்ற வகையில் சர்வதேச ரீதியான தடைகளை ஏற்படுத்துவதனூ டாக அது உலக சந்தைகளிலும் வறியவர்கள் பங்குபற்றும் செயற்றிறனி லும் பாதிப்பைக் கொண்டு வருகிறது. வளர்முக நாடுகளைப் பொறுத்து சந்தை வாய்ப்புகளில் பௌதீக ரீதியான, அமைப்பு ரீதியான என்ற இரு பரிமாணங்கள் காணப்படுகின்றன. இதில் முதலாவதாக, சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதில் குறிப்பாக பின்தங்கிய கிராமப்பகுதி மக்களைப் பொறுத்து அவை சந்தைகளை சென்றடைவதில் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் அதே வேளையில் இரண்டாவதாக இச்சந்தை அணுகு முறைகள் படிப்பறிவு குறைந்ததும் சிறுபான்மையினத்தவரும் வறியவர் களுமாக விளங்கும் குறித்த ஒரு குழுவினரை சென்றடைவதிலும் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றன. பின்வரும் கோட்டுப்படத்தின் மூலம் உள்ளூர், தேசிய, பிரதேசிய மற்றும் உலகளாவிய மட்டங்களில் சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதில் வறியவர்கள் எதிர்நோக்கும் பிரச்ச னைகள் சுருக்கமாக விளக்கப்படுகிறது.




இங்கு உயர்ந்த போக்கு வரத்துச் செலவுகள், குறைந்தளவான தொடர்பாடல்கள், உட்கட்டமைப்பு வசதிகள் அவர்களது உற்பத்திகள் பெரும்பாலும் விரைவில் பழுதடையக் கூடிய விவசாய உற்பத்திகளாக இருத்தல் போன்ற காரணிகளால் சந்தை தூண்டுதல்களுக்கு ஏற்ப இவ்வறிய மக்கள் தம்மை சந்தைகளுடன் இணைந்து செயலாற்றுவதில் தடைகளை சந்திக்க நேரிடுகிறது. போதியளவு வீதிகள் இல்லாத நிலையில் உள்ளீடுகளை விரைவில் பெறுவதிலும் தமது உற்பத்திகளை விரைவில் சந்தைப்படுத்துவதிலும் கூட பிரச்சனைகள் தோன்றவதை காணலாம்.

ஆபிரிக்காவைப் பொறுத்து மழைக்காலங்களில் பல வீதிகள் பயன்படுத்தப்பட முடியாத நிலை காணப்படுகிறது. உயர்ந்த போக்கு வரத்து செலவுகள் கூட வர்த்தகத் துக்கான தூண்டுதலை குறைக்கும் ஒரு நடவடிக்கையாகவே அமைகிறது. ஏனெனில் அது உள்ளீட்டு விலைகளை அதிகரித்து பொருட்களது விலைகளை உயர்திவிடுகின்றன. இவ்வாறு குறைந்த ளவான தொடர்பாடல் மற்றும் உட் கட்டமைப்பு வசதிகள் பின்தங்கிய பிரதேசங்களில் சந்தை வாய்ப்புகளை குறைந்து வருகின்றமையால் உலக மயமாக்கலின் விளைவுகளும் அங்கு பாதகமாகவே அமைந்து விடுகின்றன. இதேபோல அமைப்பு ரீதியான தடை களும் வறிய மக்களது சந்தை வாய்ப்பை இழக்கச் செய்கின்றன. வளர்முக நாடுகளைப் பொறுத்து உலகமயமாக்கலானது, பல சவால் களை எதிர்கொள்வதால் அது பல வழிகளில் சில நாடுகளுக்கு எதிரான விளைவுகளையும் ஏற்படுத்தி வருகிறது. பொதுவாக இது வளர்முக நாடுகள் தாமே தன்னிச்சையாக தமது பொருளாதார கொள்கைகளை கைகொள்வதற்கான இயலளவை வரையறுப்பதால் இந்நாடுகள் ஏனைய நாடுகளது அபிவிருத்தி தந்திரோ பாயத்துக்கு அமையவே தமது கொள்கைகளையும் தெரிவு செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளிவிடுகின்றன. அதே போல அதிகரித்துவரும் குறுங்கால உத்தேச மூலதன பாய்ச்சல்களின் விளைவாக நாணய மாற்றுவீதத்தில் ஒரு நிலையான தளம்பல்களை ஏற்படுத்தலாம். அந்த நாடுகளது உள்நாட்டுப் பொருளாதாரத் திலும், வளங்களின் அசைவு, மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்திலும் எதிரான தாக்கத்தை கொண்டு வரலாம்.

வளர்முக நாடுகள் என்ற வகையில் இலங்கையைப் பொறுத்து

அது 1977ம் ஆண்டிலிருந்து சர்வதேச சந்தைகளுடனான இணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் திறந்த பொருளாதார கொள்கைத்தந்திரோபாயத்தை அறிமுகப்படுத்தியது. இதைத்தொடர்ந்து இலங்கை வாழ் மக்கள் அதிகளவிலான தொலைக் காட்சி வசதிகள், தொலைபேசி வசதிகள், மற்றும் இணையத்தளம், E-Mail வசதிகள் போன்றவற்றை அனுபவிக்கும் வாய்ப்பை பெறத் தொடங்கியதன் மூலமாக அது விரைவானதும், நவீனதுமான தகவல் தொழில்நுட்பத்திலும் வளர்ச்சியடையத் தொடங்கியது. உலகமயமாக்கலின் ஊடான இத்தகைய விளைவுகள் இலங்கையைப் பொறுத்து நலன்களை பெற்றுத்தந்தபோதும், பல்வேறு வழிகளில் அது இலங்கைக்கும் பாதகமாகவே அமைந்து விடுகிறது. குறிப்பாக இலங்கையின் விவசாயத்துறையைப் பொறுத்து உலகமயமாக்கலின் இத்தகைய சவால்களை, பிரச்சனைகளை நாம் காணலாம். அதிலும் இலங்கையின் தேயிலைக கைத் தொழிலைப் பொறுத்து 1960களில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதான கைத்தொழிலாக அது முதன்மை பெற்றிருந்தது. இவ்வகையில் உலகத் தேயிலை வர்த்தகத்தில் இலங்கை பிரதான இடத்தை வகித்தது. எனினும் அண்மைக் காலங்களாக இக்கைத் தொழிலில் புதிய போட்டியாளர்கள் குறிப்பாக கென்யா போன்ற நாடுகள் தமது தேயிலை உற்பத்தியை குறைந்த செலவில் உற்பத்தி செய்து உலக சந்தையில் தனது பங்கை அதிகரித்துக் கொண்டு வருவதால் அது இலங்கைத் தேயிலை கைத்தொழிலின் பிரதான ஒரு போட்டியாளராக மாறிவருவதை காணலாம். இவ்வகையில் உலக மயமாக்கலின் விளைவு இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலில் சவால்களை ஏற்படுத்தி விடுகிறது. இதே போல இலங்கை விவசாயத்தின் ஏனைய துறைகளிலும் அதன் உற்பத்திகளில் அது ஒப்பீட்டு நயமின்மையை அனுபவித்து வருகிறது. இதன் காரணமாக இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு உற்பத்திகள் அதிக செலவுள்ளதாக அமைவதும் இலங்கைக்கு பாதகமான விளைவே யாகும். இலங்கையின் ஏனைய துறைகளில் நிலவும் ஒப்பீட்டு நன்மை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு தொடர்பான பல்வேறுபட்ட அளவீட்டு முறைகள் (Athokorala and kelegama, 1996, samaratne, 2000) மிக குறைவாக இருந்தமையை எடுத்துக் காட்டியது.

இவை யாவும் உலகமயமாக்கலின் இலங்கையின் விவசாயத்துறையின் பலவீனமான நிலையையே பிரதிபலிக்கிறது. இதனை உலகமயமாக்கலின் இத்தகைய சவால்களை இலங்கை எதிர்கொள்வதற்கு அது போட்டி அழுத்தங்களை சந்திப்பதற்கேற்ற வகையில் புதிய சந்தைகளை தேட வேண்டியுள்ளது.

உலகமயமாக்கலானது வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தும் சில வளர்ச்சியடைந்து வரும் நாடுகளைப் பொறுத்தும் அவற்றின் விரைவான வருமானம், விரைவான வளர்ச்சி போன்றவற்றிற்கு உதவி புரிகிறது. அதே நேரத்தில் வளர்முக நாடுகளைப் பொறுத்து தொழிற்சாலைகள் வேலைத் தளங்கள் மீதான மனித உரிமை மீறல்கள், தொழில் மற்றும் வருமானம் போன்றவற்றின் பாதுகாப்பின்மை

போன்ற விடயங்கள் தொடர்பான அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகிறது. மறுபுறத்தில் இந்நாடுகளின் தொழிலாளர்கள், விவசாயிகளைப் பொறுத்து அவர்கள் வேலையின்மையினால் வரும் அபாய ஏதுக்களையும், வருமான இழப்புக்களையும் எதிர்கொள்வதற்கு தாராளமயப்படுத்தல் கொள்கையானது வழிவகுக்கிறது. மலிவான இறக்குமதிகள் வெளிநாடுகளிலிருந்து தாராளமாக கிடைப்பதன் மூலம் வரும் வர்த்தக தாராண்மைப்படுத்தல் உள்நாட்டு கைத்தொழிற்சாலைகளை பாதிப்புக்குள்ளாக்குகிறது. மேலும் உலகமயமாக்கல் மூலம் உயர்ந்த உற்பத்தித்திறனுள்ள தொழிலாளருக்கான வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்த-போதும் திறனற்ற தொழிலாளர்களைப் பொறுத்து அவர்களது ஊழிய அசைவுக்கும், அதுவே தேசிய ரீதியில் தடையாவும் அமைந்து விடுகிறது. மேலும் முன்னேற்றமடைந்த தகவல் தொழில்நுட்பம் போக்குவரத்து வசதிகள் தாரளமயமாக்கப்பட்ட நிதிச் சந்தைகள் போன்றவை சமூகத்தில் சட்டவிரோத, சமூக விரோத குற்றச்செயல்களுக்கும் வாய்ப்பை அளித்து வருவதாலும் இந்த நாடுகள் இவற்றுக்கு எதிராக செயற்பட வேண்டிய தேவையை ஏற்படுத்திவிடுகிறது. மற்றும் உல்லாசப்பயணத்துறை வளர்ச்சி இடப்பெயர்வு போன்றவற்றின் விளைவாக சமூகத்தில் HIV/AIDS போன்ற நோய்களது பரவலாக்கத்தின் மூலம் இந்நாடுகளது சுகாதாரத்திற்கும் ஆபத்தை உண்டாக்குகிறது. தவிரவும் நவீன கலாச்சார அம்சங்களின் வளர்ச்சிக்கும் இது காரணமாக அமைவதால் அது அந்நாடுகளின் சுதேசிய, நாகரிக, பண்பாட்டு விழுமியங்களுக்கும் ஒரு அச்சுறுத்தலாக விளங்கி வருகிறது.

வளர்முக நாடுகள் உலகமயமாக்கலின் இத்தகைய எதிர் விளைவுகளை சந்திப்பதால் இந்நாடுகளில் வாழும் வறிய மக்களால் உலகமயமாக்கலினால் கிடைக்கும் நலன்களை பெறுவதற்கான சாத்தியங்களை இழந்து விடுகின்றனர். உலகின் பெரும்பாலான மக்கள் வறியவர்களாக வளர்முக நாடுகளிலேயே வாழ்ந்து வருவதால், பொருளாதார அபிவிருத்தி கொள்கைகள் இவர்களை மையப்படுத்தியதாகவே அமைய வேண்டும். நோபல்பரிசு பெற்ற பொருளியல் பேராசிரியர் அமர்தியா சென் (Amartya sen) இது பற்றி கூறும்போது "பொருளாதார அபிவிருந்திக் கொள்கையின் நோக்கங்கள், பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் வறிய சமூகத்தினரை மையப்படுத்தியே இருக்கவேண்டும்" என குறிப்பிடுகிறார். இவ்வகையில உலகமயமாக்கலின் செயன்முறைகள் இவ்வளர்முக நாடுகளுக்கு நலன் தரும் விதத்திலும் உலக மயமாக்கலின் சவால்களை இந்நாடுகள் சமாளிப்பதற்கும் ஏற்ற வகையில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் (IMF), அரசாங்கம், மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் (NGO) போன்றவற்றின் ஆதரவின் ஊடாக கடன் வழங்குதல், பிராந்திய வர்த்தக உடன்படிக்கை தொடர்பான சீர்திருத்தங்கள் போன்ற வழிகள் மூலமாக வறியவர்களையும், தேசிய உலக சந்தைகளில் இணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இதன் மூலமான உலக சந்தைகளால் வறியவர்களின் பங்கு பற்றலை அதிகரித்துக் கொள்ள இயலும். உலகமயமாக்கலின் செயன்முறைகள்

தனியே முலதன தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யாது, சமூகத்தேவை களையும் இணைத்த வகையில் அமைதல் அவசியமானது பின்தங்கிய பக்கச் சார்பான சமூக முறைகள் அகற்றப்படுவதுடன் வர்த்தக கொள்கை களும் மீளமைப்பு செய்யப் படுதல் வேண்டும். உலக வர்த்தக அமைப்பு (WTO), மற்றும் ஐரோப்பிய யூனியன் (EU) போன்றவற்றின் ஆதர வுடன் வளர்முக நாடுகளது தொழிலா ளர்களையும் அவர்களை பாதுகாக்கும் வகையிலும் உலக வர்த்தக கொள்கை களை வடிவமைப்பதன் ஊடாக இந்த நாடுகள் உலகமயமாக்கலினால் எதிர் கொள்ளும் சவால்களை ஓரளவுக் கேனும் வெற்றி கொள்ள முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## References


- ✍ Economics Review - August/October 1999
- ✍ Economics review April/may 2000
- ✍ The paverty research unit at sussex (PRUS) notes - Prepared by kochel blackman and Julie litchfied (webside www.susex. al. uk/units/PRUS)
- ✍Essays in development issues. Published by Srilanka agricultural Economics Association 2002
- ✍Finance and development Published by the international monetary fund December 2001


> The school in many underdeveloped countries is a reflection and a fruit. Of the surrounding underdevelopment from which arises its deficiency, its quantitative and qualifative poverty; But little by little and there lies the really serious risk the school in these underdeveloped countries risks becoming in turn a factor of underdevelopment.
>
> Joseph kizerbo, former minister of Education, Burkina Faso

# உலகமயமாக்கலும் சமமின்மைகளும் Globalization & Inequalities

செல்வரத்தினம் சந்திரசேகரம்,
விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

இன்றைக்கு ஏறத்தாழ 3,4 தசாப்தங்களுக்கு முன்னர் வெளிநாட்டு முதலீடு, வெளிநாட்டு பொருட்கள், வெளிநாட்டு சேவைகள், வெளிநாட்டு மோகம் மற்றும் வெளிநாட்டவர்கள் மீது வெறுப்பும் விரக்தியும் கொண்டிருந்த இன்றைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மக்கள் இன்று அவைகளை செங்கம்பளம் விரித்து வரவேற்கின்றனர். இது உலக பொருளாதார ஒழுங்கில் ஏற்பட்ட மாற்றம் ஆகும். உலக நாடுகளுக்கு இடையில் காணப்படும் பொருளாதார அரசியல் மற்றும் சக உறவுகளும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இன்று அதிகரித்து காணப்படுகின்றது. உலகத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் உலகமயமாக் கல் என்ற செயல்முறையை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். காரணம் உலகமயமாக்கல் செய்முறையானது தனித்து ஓர் கொள்கை அடிப்படையில் உலக நாடுகளில் பரப்பப்படவில்லை. மாறாக இது ஓர் நிபந்தனையாக அபிவிருத்தி அடைந்த நாடுகளினாலும் சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வர்த்தக ஸ்தாபனம் (WTO) போன்றவற்றால் திணிக்கப்படுகின்றது. இந்த அமைப்புக்களையும் நாடுகளையும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சார்ந்து வாழ்கின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மூலதனப் பற்றாக்குறைக்கும் கடன் வழங்குகின்ற மற்றும் அபிவிருத்திக்கு உதவி செய்கின்ற ஓர் ஏக போக சேவை நிறுவனங்களாக (IMF) உம், உலக வங்கியும் (IBRD) வர்ணிக்கப்படு கின்றன. இவை வழங்கும் உதவியில் பிணைக்கப்பட்டிருக்கும் பொருளாதார சீர்திருத்தங்கள் (Economic reforms) என்ற நிபந்தனையானது உலக மயமாக்கல் செயல் முறையை விரிவாக்குகின்றது.

"உலகமயமாக்கல்" என்ற சிந்தனையானது நவகாலணித்துவத்தின் வடிவமாகக் கொள்ளப்பட்ட போதும் இதனுள் பொருளாதார சிந்தனைக் கோட்பாடு அடிப்படையாக இருப்பதை மறுக்க முடியாது. போட்டிச் சந்தை முறைமையானது பொருளாதாரத்தின் அருமையான வளங்களை வினைத் திறமையாக ஒதுக்கீடு செய்து நாடுகளின் வளங்களின் உச்சப் பயன்பாட்டிற்கு இட்டுச் செல்லும் (Competition among the economic agents leads to efficient allocation of resources) இதன் அடிப்படையில்

போட்டிச் சந்தையை நெருங்கிய ஓர் சந்தை அமைப்பை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்துவதன் மூலம் அருமையான வளங்களை வினைத் திறமையாக ஒதுக்க முடியும் என்ற வாதம் உலகமயமாக்கலுக்கு அடிப் படையாக அமைகிறது. பழம் பொருளிய லாளர்கள் (Classical Economists) புதுப்பழம் பொருளியலாளர்கள் (New classical Economists) போன்றவர்கள் உலகமயமாக்கல் சிந்தனையின் மூலகர்த்தாக்களாக அமைகின்றனர். போட்டிச்சந்தையானது வளங்களை வினைத்திறமையாக ஒதுக்கிய போதி லும் மக்களிடையே நீதித்தன்மையை மற்றும் சமத்துவத்தை ஏற்படுத்தாது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

எனவே IBRD, IMF மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளால் முன்னெடுத்துச் செல்லப்படும் உலக மயமாக்கல் கோட்பாட்டு அடிப்படையி லேயே சமத்துவத்தை ஏற்படுத்தாது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒன்றாகும். போட்டிச்சந்தையில் பரட்டோ வின் வினைத்திறமையான வள ஒதுக்கீடானது சமத்துவம் மற்றும் நீதித்தன்மையை ஏற்படுத்தாது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சமத்துவத்தையும் நீதித்தன்மையையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்தின் தலையீடு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. அரசாங்க தலையீடு என்பது போட்டி மேற்குறிப்பிட்ட கோட்பாடு மற்றும் சர்வதேச நிதி அமைப்பின் சீர்திருத்தப் பின்னணியிலும் உலகமயமாக்கல் தொடர்பான சமமின் மையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சமமின்மை என்பது பிரதானமாக வருமானத்தில் ஏற்படுகின்ற சமமின்மையைக் குறித்து நிற்கிறது. உலகமயமாக்கல் வருமானத்தில் சம மின்மையை ஏற்படுத்துவது மட்டு மல்லாது ஏனைய பொருளாதார விடயங்களான வெளிநாட்டு நேரடி முதலீட்டில் சமமின்மை, சர்வதேச வர்த்தகத்தில் சமமின்மை, பொருளாதார வளர்ச்சியில் சமமின்மை முதலியன வற்றிலும் சமமின்மையை ஏற்படுத்து கிறது. இவை இறுதியில் வருமானச் சமமின்மைக்கு இட்டுச்சென்றாலும் இவற்றை வேறுபடுத்தி ஆய்வு செய்ய வேண்டிய தேவை உள்ளது.

### உலகமயமாக்கல் வரைவிலக்கணம்

உலகமயமாக்கல் என்பது "நாடுகளின் அரசியல் எல்லைகளைக் கடந்து முதலீடு, வர்த்தகம், நிதி, உழைப்பு, அசைவு போன்றவற்றின் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி உலக நாடுகளை ஒரு சந்தையின் கீழ் கொண்டு வருதல்" எனக் கூறப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் சந்தை யானது சுயமாக ஒழுங்குபடுத்தப்படும் சந்தையாகக் காணப்படும் (Self - regulating Market) இச் சந்தையானது விரிவாக்கப்பட்ட சந்தையாக அமைவ தோடு வர்த்தகம், முதலீடு போன்ற வற்றை அதிகரித்து உற்பத்தியை விரிவாக்குகின்றது. மேலும் இது தொழில்நுட்ப வருகை, உற்பத்தித் திறன் அதிகரிப்பு, வாழ்க்கைத்தரத்தின் முன்னேற்றம் மற்றும் வறுமையை நீக்குதல் போன்றவற்றை உறுதிப்படுத்து கின்றது. சுயமாகத் தொழிற்படும் சந்தையை உருவாக்கும் உலகமயமாக் கலை ஏற்படுத்துவதற்காக அபிவிருத்தி

யடைந்துவரும் நாடுகள் பொருளாதாரத்தின் மீது இருக்கும் எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்கும் படியும் மானியங்களை அகற்றும் படியும் மற்றும் அரசாங்கச் செலவைக் குறைக்கும் படியும் IMF, IBRD போன்றனவற்றால் அறிவுறுத்தப்படுகிறது. தாராளமயமாக்கலின் உச்சக் கட்டம் உலகமயமாக்கல் என்றும் உலகமயமாக்கலின் ஆரம்பக் கட்டம் தாராளமயமாக்கல் என்றும் கூறப்படுகின்றது. உலகமயமாக்கலை வழிநடத்துகின்ற அமைப்பாக IBRD, IMF போன்றன காணப்படுகின்றன. இவை பணக்கார நாடுகளின் கைப் பொம்மைகள் எனவும் கூறப்படுகின்றன. உலக மயமாக்கலை மேலைத்தேச மயமாக்கல் என்றும் சிலர் வரையறுக்கின்றனர். குறிப்பாக சமூகவியலாளர்களின் வரைவிலக்கணம் இவ்வாறு அமைந்துள்ளது. (Globalization is Westernalization)

உலகமயமாக்கல் செயல்முறையானது வரியை அகற்றுதல், விலைக் கட்டுப்பாடுகளை நீக்குதல், மானியங்களைக் குறைத்தல் அல்லது முற்றாக நீக்குதல், அளவு ரீதியான கட்டுப்பாடுகளை நீக்குதல், சந்தையில் அரச தலையீட்டை நீக்குதல் என கைத்தொழில், விவசாயம், சேவை ஆகிய எல்லாத் துறைகளிலும் காணப்படுகின்றது.

## உலக மயமாக்கலும் வருமானச் சமமின்மையும்

உலக மயமாக்கலானது உலக நாடுகளில் இரண்டு விதமான வருமானச் சமமின்மையை ஏற்படுத்துகின்றது.

1. நாடுகளுக்கிடையேயான வருமானச் சமமின்மை
2. நாட்டுக்குள் வருமானச் சமமின்மை

உலக மயமாக்கலினால் நாடுகளுக்கிடையே வருமானச்சமமின்மை அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்கலாம். ஏழை நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் இடையிலான வருமான இடைவெளியானது உலகமயமாக்கல் காரணமாக அதிகரித்துக் காணப்படுகின்றது. உலகமயமாக்கல் செய்முறை மூலம் அதிக வாய்ப்புக்களைப் பெறும் நாடுகள் செல்வந்த நாடுகளாகக் காணப்படுகின்றன. வறிய நாடுகள் இவ்வாய்ப்புக்களைப் பெறுவதில் ஓரங்கட்டப்படுகின்றன. உலக மயமாக்கல் செயற்பாடுகளின் சீர்திருத்தங்களின் நன்மைகளை உலகிலே பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் பயன்படுத்துகின்றன. இவைகள் தமது தலைமையகங்களை அபிவிருத்தியடைந்த நாடுகளில் கொண்டிருக்கின்றன. உலக மயமாக்கல் செயல்முறையின் சீர்திருத்தங்களை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கிளைகளைக் குறைவிருத்தி நாடுகளில் நிறுவுகின்றன. ஏற்கனவே மிகை உற்பத்தியை சந்தைப்படுத்த முடியாமல் தேங்கி இருந்த உற்பத்திக்கும் மூலதனத்திற்கும் இந்த குறைவிருத்தி நாடுகளில் உலகமயமாக்கலின் பொருளாதாரச் சூழல் ஓர் வரப்பிரசாதமாக அமைகிறது. இச் சூழலைப் பயன்படுத்தி இந் நிறுவனங்கள் தங்களுடைய வருமானங்களை உயர்த்துகின்றன. இக் கூட்டுத்தாபனங் களுடைய பங்குதாரர்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் மக்களாக இருப்பதால் அபிவிருத்தி

அடைந்து வரும் நாடுகளின் மூலவளங்கள் சுரண்டப்படுகின்றன. இறுதியில் அபிவிருத்தி அடைந்து வரும், நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்த நாடுகளிற்கும் இடையிலான வருமான இடைவெளி என்பது அதிகரிக்கின்றது.

1998 இன் முடிவில் இந்த பல்தேசிய கூட்டுத்தாபனங்கள் உலகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40 சதவீதத் தையும் சர்வதேச (TNCs) வர்த்தகத்தில் 60 சதவீதத்தையும், கொண்டிருந்தன. இக் கூட்டுத்தாபனங் கள் தொடர்ந்தும் பெரியனவாகிக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக மோட்டார்க்கார் உற்பத்தியில் ஆறு பெரியனவாகிக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக மோட்டார்க்கார் உற்பத்தி யில் ஆறு பெரிய கூட்டுக்கம்பனிகள் உலகத்தின் மொத்த கார் உற்பத்தியின் 80 சதவீதத்தை கொண்டிருக்கின்றன. இவ் ஆறு கூட்டுத்தாபனங்களும் அபிவிருத்தி அடைந்த நாட்டுக்கு சொந்தமாக உள்ளன.

கார்க் கம்பனிகளின் வகைகளும், அவற்றின் அதிகளவான பங்கினைக் கொண்ட நாடுகளும்.

1. General motors - Japan and Italy
2. Daimler Charysler - Japan
3. Renavlt - Sweden
4. Renavlt - Japan & Korea
5. Toyota - Japan
6. Vol. Kswagen - Britain

மூலம் The Isalnd 10.02.2002

தொலைத்தொடர்புத் துறையை நோக்கின் பத்து TNCs உலகத் தொலை தொடர்பாடலில் 86 சதவீதப்பங்கினைக் கொண்டுள்ளன. கணனியில் 10 TNCs களும்70 சதவீதத்தினை கொண்டுள்ளன. உலக சந்தையில் பிரதானமான இக் கூட்டுத்தாபனங்கள் பிரதானமான துறைகளில் ஏறத்தாழ அரைப்பங்கினை கொண்டுள்ளன. பிரதான துறைகளாக மின்சார உபகரணங்கள், மென்பொருள் வர்த்தகம், குளிர்பானங்கள், tast food போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே உலக சந்தையானது சுயமாக ஒழுங்கு படுத்தி போட்டியை ஏற்படுத்துகின்றது. என்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இவை உலக சந்தையில் விற்பனை யாளர் களும் கொள்வனவாளர்களும் ஒரே பேரம் பேசும் சக்தியை உலக மயமாக்கல் செயற்பாட்டால் கொண்டி ருக்கும் போது இக் கூட்டுத்தாபனங்கள் போட்டிச் சந்தையில் இருந்து விலகி தனியுரிமை போட்டிக்கு செல்வதால் உலகத்தின் வருமான பரம்பலும் சந்தை புரள்வுக்கு (distortion) ஏற்ப TNCs களின் நாடுகளுக்கு சார்பானதாக அமைவதைக் காணலாம். உலக மயமாக்கல் போட்டிச்சந்தை நிலமையை கூட ஏற்படுத்தவில்லை. சிறிய நிறுவனங்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளன. IMF, IBRD போன்றவற்றின் சீர் திருத்தங்கள் பல்தேசியக் கூட்டுத் தாபனங்களுக்கு தங்கள் மூலதனத்தை விரும்பிய இடத்தில் சுதந்திரமாக முதலீடு செய்வதற்கும் அவைகளின் இலாபங்களை உச்சப்படுத்துவதற்கும் தேவையான முதலீட்டு மற்றும் வர்த்தக சூழலை ஏற்படுத்துவதையே உலக மயமாக்கல் செயற்பாடுகள் தோற்றுவிக் கின்றன. வர்த்தக தாராளமயமாக்கல், சுதந்திர வர்த்தகம், என கூறுகின்ற U.S.A கூட குறைவிருத்தி நாடுகளின்

பல்வேறு பொருட்களுக்கு மறை முகமான தடைகளை விதிக்கின்றன. ஆனால் குறைவிருத்தி நாடுகள் மீது U.S.A தனது விருப்புக்களை உலகமயமாக்கல் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் IMF, IBRD, WTO ஐ பயன்படுத்தி திணித்து தங்கள் வருமானத்தை மென்மேலும் பெருக்கு கின்றன. Henry kissinger aplty remarked 'Globalization is only another word for us domination' (kanes)

அண்மைக்காலங்களில் உற்பத்தி, வர்த்தகம், தொழில்நுட்பம், நேரடி முதலீடு போன்றவற்றில் மிக விரைவான அதிகரிப்பு காணப்பட்டது. ஆனால் இவைகளின் நன்மை எல்லாம் உலகிலே சமமற்ற முறையிலே பங்கிடப் பட்டுள்ளதை காணலாம். இவற்றின் நன்மை எல்லாம் பல்தேசிய கூட்டுத்தாபனங்கள் இயங்குகின்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கே சென்றுள்ளன, 20 சதவீத உலக சனத் தொகையை கொண்டுள்ள அபிவிருத்தி அடைந்த நாடுகள் உலக GDP இல் 80 சதவீதத்தையும் உலக வர்த்தகத்தில் 81 சதவீத்தையும் பெற்றன. ஓர் சில அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மட்டுமே உலக மயமாக்கலினால் நன்மையை பெற்று வருமானத்தை அதிகரித்தன. 15 அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு ஒன்று என்ற அளவிலேயே இவை ஓர் சில அபிவிருத்தி அடைந்த நாடுகளிலேயே இடம் பெற்றன. இன்றும் 3 மில்லியன் மக்கள் U$2 க்கு குறைவாகவே செலவு செய்கின்றனர். 1.1 மில்லியன் மக்கள் U$1 க்கு குறைவாகவே செலவு செய்கின்றனர்.

உலக மயமாக்கலினால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளினால் ஆயிரக் கணக்கான விவசாயிகளினால் சீவனோபாய பயிர் செய்கை அழிக்கப் பட்டது. ஆயிரக்கணக்கான சிறுகைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. தனியார் மயமாக்கலினால் ஆயிரக் கணக்கான மக்கள் தொழில்களை இழந்துள்ளனர். இவை யாவும் இம் மக்களின் வருமான வீழ்ச்சியை ஏற்படுத்தி எதிர்பார்க்கும் ஆயுள் காலத்தையும் குறைத்துள்ளது. 1990 இலிருந்து 33 நாடுகளில் எதிர்பார்க்கும் ஆயுள் காலம் வீழ்ச்சியடைந்துள்ளது. உலகமயமாக்கல் இம் மக்களின் வருமானத்தை அதிகரித்துள்ளது. சுதந்திர வர்த்தகத்தில் உன்னத நாடுகளாக தங்களைக் காட்டிக் கொள்ளும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் குறைவிருத்தி நாடுகளின் சுதேச ஏற்றுமதிகளுக்கு சுகாதாரக் கட்டுப்பாடு என்ற மறைமுகமான தடைகளை ஏற்படுத்துவதோடு இந் நாடுகளில் தங்களின் வர்த்தகத்தின் மூலம் அதிக நன்மைகளை அடைக ின்றன. இது வருமான சமமின்மையை இந்நாடுகளுக்கு இடையில் அதிகரித் துள்ளது.

1960 களில் உலகத்திலுள்ள அதி உச்ச 20 சதவீதமான செல்வந்தர்களுக் கும் (அ.அடை.நாடுகளில்) உலகத்திலுள்ள அதி குறைந்த 20 சதவீத ஏழைகளுக்கும் (அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில்) இடையில் உள்ள வருமான பகிர்வானது ஒரு நபர்க்கு 30 க்கு ஒன்று என்ற விகிதத்தில்

காணப்பட்டது. இது 1997இல் 74க்கு ஒன்று என்ற விகிதத்தில் அதிகரித்து காணப்படுகின்றது.

இவ் 20 சதவீத செல்வந்தர்கள் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 86 சதவீதத்தையும், உலக பொருட்கள் சேவைகள் ஏற்றுமதியில் 82 சதவீதத்தையும், உலக மொத்த நேரடி வெளிநாட்டு முதலீட்டில் 68 சதவீதத்தையும், உலக தொம்த தொலைபேசி இணைப்புக்களில் 74 சதவீதத்தினையும் 20 சதவீதமான செல்வந்தர்கள் கொண்டுள்ளனர். உலகத்தில் உள்ள பெரும் பான்மையான ஏழைகள் இவற்றில் ஒரு சதவீதத்தை மட்டுமே கொண்டிருக்கின்றார்கள்.

உலக மயமாக்களினால் புதிதாக கைத்தொழில் மயமாகிய நாடுகளுக்கும் (NICs) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் இடையிலான வருமான இடைவெளி கூட அதிகரித்துள்ளது. 1975க்கும் 1995க்கும் இடைப்பட்ட காலத்தில் தென்கொரியாவின் வருடாந்த மொத்த தேசிய உற்பத்தியானது சராசரியான 0.7 சதவீதத்தினாலும் சிங்கப்பூரின் வருடாந்த தலா தேசிய உற்பத்தியானது சராசரி 5.8 சதவீதத்தினாலும் அதிகரித்தது. ஆனால் இக்காலப் பகுதியில் ஆபிரிக்காவில் உள்ள பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளினது தலா தேசிய உற்பத்தியானது வருடாந்தம் சராசரி 0.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

உலகமயமாக்கலின் வருமான சமமின்மையினால் பெரிதும் ஓரப்படுத்தப்பட்ட கண்டமாக ஆபிரிக்கா விளங்குகின்றது. 1965க்கும் 1996க்கும் இடைப்பட்ட 31 வருடத்தில் உபசாரா ஆபிரிக்காவின் பொருளாதார வளர்ச்சி வீதம் (எல்லா ஆபிரிக்க நாடுகளிலும்) சராசரியாக 2.7 சதவீதமாக காணப்பட்டது. ஆனால் இது தென் ஆசியாவில் 4.8 சதவீதமாகவும், கிழக்கு ஆசியாவில் 7.4 சதவிதமாகவும் காணப்பட்டது. 1990-1998க்கு இடைப்பட்ட காலத்தில் தென் ஆசியாவின் தலாவருமான வளர்ச்சி சராசரி 2.2 சதவீதமாக காணப்பட்ட போது ஆபிரிக்க நாடுகளின் தலா வருமானம் சராசரி 0.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. 1990-1998 இடையில் பொருளாதார வளர்ச்சி வீதம் தென்னாசியாவில் சராசரி 5.5 சதவீதமாக காணப்பட ஆபிரிக்காவில் இது 2.3 சதவீதமாக குறைவாக காணப்பட்டது. 1965-1996க்கு இடையில் ஆபிரிக்காவின் மொத்த உள்நாட்டு நிலையான முதலீட்டு வளர்ச்சி வீதம் 1.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைய தென்னாசியாவில் 5.3 சதவீதத்தினாலும் கிழக்கு ஆசியாவின் 9.4 சத வீதத்தாலும் அதிகரித்துள்ளது. ஆபிரிக்காவின் அரைப் பங்கு சனத்தொகையானது (600 மில்லியன்) நாள் ஒன்றுக்கு $ 0.65 லேயே வாழ்கின்றனர்.

வாழ்க்கைத்தரத்தை காட்டுகின்ற குறிகாட்டிகள் கூட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது குறைவாக காணப்படுகின்றது. உலக மயமாக்கல் ஆபிரிக்காவின் சராசரி ஏற்றுமதி அதிகரிப்பு 1960-1996 க்கு இடையில் 2.1 சதவீதமாக காணப்பட்டது. இது தென்னாசியாவில் 6.2 சதவீதமாகவும் கிழக்கு ஆசியாவில் 8.8 சதவீதமாகவும் காணப்பட்டது. இவ்வாறு உலக மயமாக்கலானது ஆபிரிக்க நாடுகளை ஓரப்படுத்தியுள்ளது.

உலகமயமாக்கல் காரணமாக நாடுகளுக்கு இடையில் வருமான இடைவெளி அதிகரிக்கப்பட்டுள்ளதை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| நாடுகள் | தலாமொத்த உள்நாட்டு உற்பத்தி (USA 1999) | வருமான இடைவெளி |
|---|---|---|
| உயர் வருமான நாடுகள் | 26050 | .......... |
| இலத்தீன் அமெரிக்கா | 6880 | 19170 |
| அரபுநாடுகள் | 4550 | 21500 |
| கிழக்கு ஆசியாவும் பசுபிக்கும் | 3950 | 22100 |
| தென்னாசியா | 2280 | 23770 |
| ஆபிரிக்கா | 1640 | 24410 |
| எல்லா அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் | 3540 | 22520 |

மூலம்:

UN Human Development Report 2001.

வருமான இடைவெளி அதிகமாக இருக்கும் நாடுகளின் முன்னணியில் ஆபிரிக்கா விளங்குகின்றது. 1960 க்கும் இடைப்பட்ட காலத்தில் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் உயர்வருமானம் பெறும் நாடுகளுக்கும் இடையிலான வருமான இடைவெளி $ 6000 இல் இருந்து $ 13000 ஆக அதிகரித்துள்ளது.

1990 களில் அநேகமான அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகம் அதிகரித்துள்ளது. ஆனால் இவ் அதிகரிப்பானது ஓர் இரு நாடுகளில் செறிந்து இருந்ததை அவதானிக்கலாம். உதாரணமாக 1996 இல் ஏறத்தாழ 80 சதவீதமான அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதியானது ஆக 15 நாடுகளால் மட்டும் மேற்கொள்ளப் பட்டது. மிகுதி 20 சதவீதத்தையே ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் ஏற்றுமதி செய்தன. மேலும் 1996இல் 95 சதவீதமான நேரடி வெளிநாட்டு முதலீடு ஆக 25 நாடுகளுக்கு சென்றன. மிகுதி 5 சதவீதத்தையே ஏனைய 140 அபிவிருத்தி அடைந்த நாடுகள் பெற்றன. எனவே வர்த்தகம் முதலீடு போன்றவற்றில் சமமற்ற பரம்பலை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உலக மயமாக்கல் ஏற்படுத்துவதன் மூலம் வருமானப் பரம்பலில் சமமின்மையை ஏற்படுத்துகின்றது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் உலகமயமாக்கல் செய்முறையில் வர்த்தகத்தின் ஊடாக அதிக வருமானத்தை பெறமுடியாமல் காணப்படுகின்றது. உலக மயமாக்கப்பட்ட வர்த்தகத்தின் பெரும் நன்மையும் வருமானமும் கைத்தொழில், மற்றும் இலத்திரனியல் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கே கிடைக்கிறது. ஆனால் எல்லா அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் கைத்தொழிலில் ஏற்றமதியை அதிகரிக்க முடியாது. அனேகமானவை முதனிலை பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியிருக்கின்றன. முதனிலை பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் உலக மயமாக்கலினால் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. 1980க்கும் 1997க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் முதனிலைப் பொருட்களின் மெய் விலைகள் 39 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் முதனிலைப்

பொருட்களில் தாவர எண்ணெய்யின் விலை 61 சதவீதத்தினாலும் கோதுமை தானியத்தின் விலை 59 சதவீதத்தினாலும் இறப்பரின் விலை 59 சதவீதத்தினாலும் இறப்பரின் விலை 53 சதவீதத்தினாலும் அரிசியின் விலை 48 சதவீதத்தினாலும், சோயா அவரையின் விலை 46 சதவீதத்தினா லும், சீனியில் விலை 25 சதவீதத் தினாலும், கொக்கோவின் விலை 18 சதவீதத்தினாலும், வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான விலை வீழ்ச்சியில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்து வருமான சமமின்மையை எதிர் நோக்குகின்றன. ஆபிரிக்கா நாடுகளின் ஏற்றுமதிகளின் விலையில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டதை பின்வரும் புள்ளி விபரம் காட்டுகிறது.

தெரிவு செய்யப்பட்ட ஆபிரிக்க ஏற்றுமதிகளின் உலக சந்தை விலைகள் US டொலரில்

| ஏற்றுமதி பொருட்கள் | 1996 | 1998 | 2001 | 1996 க்கும் 2001 வீழ்ச்சியின் வீதம் |
|---|---|---|---|---|
| கோப்பி (IB) | 1.28 | 1.61 | 0.65 | 49 |
| பருத்தி (IB) | 0.86 | 0.60 | 0.45 | 48 |
| கொக்கோ (Ton) | 1517 | 1814 | 1249 | 18 |
| கோப்பர் (IB) | 2615 | 1740 | 1661 | 36 |

மூலம் The Island 01.07.2001

***இவ்வாறான விலை வீழ்ச்சியினால் இந் நாடுகளின் வருமானம் குறைந்து உலக மயமாக்கல் வருமான சமமின்மை அதிகரித்துள்ளது.***

1997களில் செல்வந்த நாடுகளில் வாழும் உச்சமான வருமானம் பெறும் 20 சதவீத மக்கள் உலக GDP 86 சதவீதத்தினை பெற்றனர் அடிமட்டத்தில் உள்ள 20 சதவீத வறிய மக்கள் ஆக ஓர் சதவீத உலக GDP ஐ பெற்றனர். LSE இன் பேராசிரியர் றொபேட் வோட் உலக மயமாக்கல் வருமான சமமின்மை பற்றி குறிப்பிடும் போது செல்வந்த வறிய நாடுகளுக்கு இடையிலான வருமான இடைவெளி அதிகரிக்கின்றது என குறிப்பிடுகின்றார். 1970 களில் U.S.A க்கும் வறிய நாடு ஒன்றுக்கும் இடையில் ஒரு நபருக்கான வருமானம் 9 மடங்கு அதிகமாக இருந்தது. இது 1995இல் 45 மடங்காக அதிகரித்துள்ளது. (U.S.A க்கும் எதியோப்பியாவுக்கும்)

### உலகமயமாக்கலும் நாட்டு மக்களுக்கு இடையிலான வருமான சமமின்மையும்

மேலே நாடுகளுக்கு இடையில் பல்வேறுபட்ட சமமின்மைகளை எடுத்துக் காட்டி அவை உலக நாடுகளின் வருமான சமமின்மையை ஏற்படுத்தியுள்ளதை நோக்கினோம். இன்னொரு வகையில் உலக மயமாக்கலானது அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டு மக்களுக்குள்ளும் அடைந்த நாடுகளின் மக்களுக்குள்ளும் வருமான இடைவெளியை அதிகரித்துள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழும் மக்களின் வருமான இடைவெளி அதிகரித்துள்ளது. இதன் காரணமாகத் தான் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட உலக மயமாக்கலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. பணக்காரர்கள் மென்மேலும் செல்வந்தர்கள் ஆகின்றனர். ஏழைகள் மென்மேலும் வறியவர்களாகின்றனர். (The riches are

Growing richer and The Poors are growing poorer) கடந்த பத்து வருடத்தில் அமெரிக்காவில் அடிமட்டத்தில் உள்ள 20 சதவீதமான மக்களின் வருமானம் 8 சதவீதத்தால் அதிகரிக்க உச்ச வருமானம் பெறும் 20 சதவீதமான மக்களின் வருமானம் 44 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மிக உயர்ந்த 5 சதவீதமான செல்வந்தரின் வருமானம் 60 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. சிங்கப்பூரில் கொள்கை கற்கை நிறுவனத்தின் கணிப்பின்படி சிங்கப்பூரில் 1990 இல் அடிமட்ட வருமானத்தை பெறும் 10 சதவீதமான மக்களின் சராசரி மாதாந்த வருமானம் 258 சிங்கப்பூர் டொலரில் இருந்து 2000 இல் 133 சிங்கப்பூர் டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. 1998இல் ஆக குறைந்த வருமானம் பெறும் 20சதவீதமான மக்களின் வருமானத்தின் 15 மடங்கினை 20 சதவீதமான உச்ச வருமானம் பெறுபவர்கள் பெற்றனர். இது 2000 இல் 18 மடங்குகளாக அதிகரித்துள்ளது. ILO இன் அறிக்கையின் படி உலக தொழிலாளர்களில் 80 சதவீதமானவர்கள் போதுமான சமூக பாதுகாப்பை கொண்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் கூட வறியவர்களின் வருமானம் சிறிது அதிகரித்த போதும் செல்வந்தர்களின் வருமானம் அதிகரிப்பு வேகம் உயர்வானதாக காணப்படுகின்றது. இந் நாடுகளில் செல்வந்தர்கள் பொருளாதார வாய்ப்புக்களை மென் மேலும் பெற்று செல்வத்தை சேர்க்கின்றார்கள். ஆனால் வறியவர்கள் பொருளாதார வாய்ப்புக்களை இழந்து மென்மேலும் வறிவர்களாகின்றனர்.

ஆபிரிக்காவில் குறைந்த வருமானம் பெறும் 10 வீத மக்களின் வருமானத்தின் 20 மடங்கிற்கு மேலாக 10 சதவீத உயர் வருமானம் பெறுபவர்கள் இது மெச்சிக்கோவில் 15 மடங்காக காணப்படுகின்றது. இவ்வாறு உலக மயமாக்கல் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குள்ளும் வருமான இடைவெளியை அதிகரிக்கின்றது. அதி கூடிய வருமானம் பெறும் 10% சத வீத செல்வந்தர்களுக்கும் குறைந்த வருமானம் பெறும் 10 சதவீத வறியவர்களுக்கும் இடையிலான வருமான இடைவெளி மலேசியாவில் 22% ஆகவும் பிலிப்பைன்ஸில் 16% ஆகவும். சீனா மற்றும் தாய்லாந்தில் 20% ஆகவும் காணப்படுகின்றது. இது தென்கொரியாவில் 81% ஆகவும் இந்தோனேசியாவில், பாகிஸ்தானில் 8% ஆகவும் பங்களாதேசத்தில் 71% ஆகவும், இந்தியாவில் 10% ஆகவும் காணப்படுகின்றது.

இவ்வாறாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுள்ளும் வருமான சமமின்மை அதிகரித்து செல்வதை அவதானிக்கலாம்.

உலக மயமாக்கல் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வறியவர்களின் வருமானத்தை குறைப்பதற்கு பின்வருவன காரணங்களாக அமைகின்றன.

1. வறியவர்களுக்கான மானியங்கள் குறைக்கப்பட்டமையும், பல நீக்கப்பட்டமையும்.
2. கட்டற்ற வர்த்தகம் வறியவர்களின் தொழில் முயற்சிகளை போட்டி காரணமாக இழக்கச் செய்து கூலித்

தொழிலாளர்களாக மாற்றப் பட்டுள்ளது.

3. உலகமயமாக்கல் பொருளாதார நீரோட்டத்தில் இணைகின்ற நாடுகளில் பணவீக்கம் அதிகரித்துள்ளது. இப்பணவீக்கமானது வருமான இடைவெளியை அதிகரித்துள்ளது.
4. உலகமயமாக்கல் எடுத்து வரும் மூலதன செறிவான தொழில் நுட்பத்தின் காரணமாக பல நன்மைகளைக் கொண்ட மூலதனச் செறிவான தொழில்நுட்பத்தினைக் பயன்படுத்துவதால் தொழில் நிறுவனங்கள் ஊழிய செறிவான தொழில் நுட்ப முறையை கைவிட்டு ஒப்பீட்டு ரீதியில் பல தொழிலார்கள் தொழிலை இழந்துள்ளனர்.
5. விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப் பட்டதனால் வருமான சமமின்மை அதிகரித்துள்ளது.
6. உலகமயமாக்கலின் பொருளாதார வாய்ப்புக்களை ஏற்கனவே மூலதனம், கல்வியறிவு, தொடர்பாடல் போன்ற வற்றை அதிகமாகக் கொண்டிருந்த நகர மக்கள் அதிகமாக பெற்றனர். அதேநேரம் மூலதனத்தால், கல்வியறிவால் குறைந்து இருந்த கிராமியத் துறை மக்கள் உலக மயமாக்கலினால் கிடைக்கப் பெறும் வாய்ப்புக் களை இழந்து விடுகின்றனர். இதனால் வருமான சமமின்மை அதிகரித் துள்ளது.
7. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தனியார் துறையின் விரிவாக்கமும் பொதுத்துறையின் ஸ்தம்பித நிலையும் கூட வருமான சமமின்மை நாடுகளுக்கு இடையில் அதிகரித் தமைக்கு காரணமாக அமைகின்றது.

### தொகுப்பு

உலகமயமாக்கலானது வெளிநாட்டு வர்த்தகம், நேரடி முதலீடு போன்ற வற்றில் சமமின்மைகளை உருவாக்கி நாடுகளின் உற்பத்தி, வருமான சமமின்மைகளை தோற்றுவிக்கின்றது. இச் சமமின்மையானது அபிவிருத்தி அடைந்த நாடுகளின் மக்களின் பங்குதாரர்களை அதிகமாக கொண்ட பல் தேசிய கூட்டுத்தாபனங்களின் விரிவாக்கத்தால் தூண்டப்படுகின்றது. உலக மயமாக்கல் செயல் முறையானது IMF, IBRD போன்ற அமைப்புக்களால் திட்டமிடப்பட்ட முறையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு சாதகமாக அமைக்கப்பட்டுள்ளது. வருமான சமமின்மை நாடுகளுக் குள்ளும் நாடுகளுக்கிடையேயும் தொடர்ச்சியாக அதிகரித்து காணப்படு வது நாடுகளில் பல சமூக பொருளாதார அரசியல் பிரச்சனைகளுக்கும் முரண் பாடுகளுக்கும் காரணமாக அமை கின்றது.

## References:-


✍ சர்வதேச நாணய நிதியத்தின் இணையத்தள வெளியீடுகள்

✍ உலக வங்கியின் இணைய வெளியீடுகள்

✍ **World Development reports.**

✍ **Globalization - Economic Review April & May** 2000.

# உலகமயமாக்கலும் கலாச்சார மாற்றங்களும்
# Globalization and cultural changes

*சந்திரசேகரம் சுசீகரன்*
*3ம் வருடம்*
*பொருளியல் (சிறப்பு)*

**அறிமுகம்**

உலகமயமாக்கம் எனும் போது பொருளாதார, அரசியல், சமூக கலாச்சார நடவடிக்கைகள் அனைத்தையும், தேசியமட்டம் என்பதிலிருந்து சர்வதேசமட்டம் என்பதனை நோக்கி நகர்த்திச் செல்லும் அதாவது உலகளாவிய மட்டத்திற்கு எடுத்துச்செல்லும் ஓர் உச்சகட்ட செயன்முறையாகும். உலகநாடுகளையும் அங்கு வாழும் மக்களையும் அவர்களது அனைத்து செயற்பாடுகளிலும் ஒருங்கிணைக்கும் ஓர் செய்முறையாகும். இதனால் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலை தோன்றுவதுடன் உலகின் மூலை முடுக்கெங்கும் வாழும் மக்கள் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்களை (Global village) போன்றவாறு மிக அருகில் எடுத்துவரப்படுகின்றார்கள். இந்த வகையில் தேசியமட்டத்திலான உற்பத்தி, வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், தொடர்பாடல் என்ற மரபு சார்ந்த செயல்முறைகளுக்கு மாறாக உலக உற்பத்தி, உலக வர்த்தகம், உலகமுதலீடு, உலக தொடர்பாடல், என்பவற்றுடன் இன்று உலக கலாச்சாரம் என்று நோக்கும் வகையில் உலகளாவிய பொருளாதார, சமூக கலாச்சாரமுறையொன்று உருவாகி வருதல் உலக மயமாதல் எனலாம்.

இவ்வுலகமயமாக்கமானது தேசிய சந்தைகள் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றிலான அதிகரித்த அளவிலான எல்லை தாண்டிய வர்த்தகத்திலும் சர்வதேச மூலதனம் மற்றும் பணம் என்பவற்றின் அசைவுகளுக்கூடாகவும், தொழிநுட்ப பரிமாற்றத்திற்கூடாகவும், வர்த்தக மேம்படுத்தல் நடவடிக்கைகள் குறிப்பாக விளம்பரங்களுக்கூடாகவும் இடம் பெற்று வருவதுடன், புதிய சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதும், குறைந்த செலவில் கூடிய இலாபத்தை பெற்றுக் கொள்வதும் இதற்கு முக்கிய காரணங்களாகவும் அமைகின்றன.

இந்த உலக மயமாக்கல் செயன்முறையின் மூலம் மரபு ரீதியான தேசிய மட்ட பொருளாதார முறைமையில் மாற்றங்கள், தேசிய அரசமைப்பு முறையில் மாற்றங்கள் (அரசியல் மாற்றங்கள்) பாரம்பரிய கலாச்சார முறைமையில் மாற்றங்கள் (Cultural changes) என்பன ஏற்படுவதை நாம் காணலாம். இருந்தும் இக்கட்டுரையிலே உலக மயமாக்கமும், கலாச்சார மாற்றங்களும் என்ற தலைப்பின் கீழ் ஆராயப்படுவதனால் இன்று அனேகராலும் பிரபல்யமாகப் பேசப்படும் இச்செயன் முறையானது அண்மைக் காலத்திலே தான் முளைத்த ஒன்றா? அல்லது நீண்டகாலமாக இடம்பெற்று வருகின்றதா? இக்கலாச்சார மாற்றம்

பற்றிய அறிஞர்களது கருத்து என்ன? இக்காலச்சார மாற்றங்கள் ஏன், எப்படி, எங்கு அதிகம் ஏற்படுகின்றது. இதன் மூலமான நன்மை தீமைகள் எவை என்பன பற்றி விரிவாக ஆராய்வோம்.

அடுத்து கலாச்சாரம் என்பது என்ன என்பதை பற்றி சுருக்கமாகக் கூறின், ஒரு மக்கள் குழுவினரால் பின்பற்றப்பட்டுவரும், கலைகள், இலக்கியம், ஆத்மீகம், மரபு, மொழி, என்பவற்றுடன் தனிமனித விழுமியங்கள் உற்பத்தி செயன்முறைகள், நுகர்வுப் பழக்கங்கள், சமூக உறவுகள் முதலியவற்றை உள்ளடக்கியதாக நோக்கப்படும் ஒரு நோக்காகும். இந்த வகையில் சமூகவியல் அடிப்படையிலே சமூகம் என்பது இயங்கிக் கொண்டிருக் கும் ஒரு "அங்க ஜீவி" என நோக்கப் படுகின்றது. எனவே உலகமயமாக்கல் செய்முறை மூலம், இயங்கிக் கொண்டிருக்கும் சமூகமும் காலத்திற் கேற்ப புதிய சிந்தனைகளை உள் வாங்கிக் கொள்வது என்பது தவிர்க்க முடியாததொன்றாகும். சமூகமானது இந்த புதிய மாற்றங்களை உள்வாங்கி தேசிய அபிவிருத்திக்கு பங்களிக்கின்றது என்று வாதிடுவோரும் இருக்கின்றனர்.

இந்த உலகமயமாக்கமும் சமூக மாற்றமும் பற்றி கூறிய சில அறிஞர் கருத்துக்களை நோக்கின், ஒவ்வொருவர் ஒவ்வொரு கருத்துக்களைக் கூறி யுள்ளனர்.

### சமூகவியலாளர்களின் பார்வையிலே

"உலகமயமாக்கம் என்பது பண்பாட்டு ஒருமைப்பாட்டை நோக்கி நகர்ந்து செல்லல்" (Cultural Homogenization) என ஒரு அறிஞர் குறிப்பிடுகின்றார். இன்னொருவர் "உலக மயமாக்கமானது பண்பாட்டுத் துண்டா டலுக்கு (Cultural Fragmentation) இட்டுச் செல்கின்றது என்றார். இதைவிட பண்பாட்டு கலப்பிற்கு (Cultural Hybritation) இட்டுச் செல்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளனர். உதாரணமாக தமிழ் மக்களுடைய உடைகளில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிப்பிடலாம். மேலும் இவ் உலகமய மாக்கம் சம்பந்தமாக ஆராய்ந்த அறிஞர்கள் "மைய நாடுகள் குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா போன்றன புறப்பரப்பு நாடுகள் மீது திணித்துக் கொள்ளும் அனைத்துச் செயன் முறைகளும் உலகமயமாக்கம் எனவும், "முதலாளித்துவ விரிவாக்கத்தினால் நாடுகளிடையே ஏற்பட்ட ஒரு தவிர்க்க முடியாத இடைத்தொடர்பு" எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இனி இந்த உலகமயமாக்க வளர்ச்சிப் போக்குப் பற்றி ஆராயும் போது இன்றைய காலத்தில் புதிதாக தோன்றியதல்ல. இந்த உலக மயமாக்கத்தினை பின்வரும் மூன்று காலப்பகுதிகளாக பிரித்து நோக்கலாம்.

1) குடியேற்றவாத காலப்பகுதி
2) 70-90 வரையான காலப்பகுதி
3) 90ற்கு பிற்பட்ட காலப்பகுதி

இந்த மூன்று காலப்பகுதிக-ளிலும் 90ற்கு பிற்பட்ட காலப்பகுதியி-லேயே தகவல் புரட்சி காரணமாக உலக மயமாக்கச் செயன்முறை முனைப்பு பெற்றிருக்கின்றது. இருப்பினும் அதற்கு முந்திய காலப்பகுதிகளிலும் ஏதோ ஒரு வகையில் உலகமயமாக்கம் இடம்

பெற்றிருப்பதனை அவதானிக்கலாம். குறிப்பாக குடியேற்றவாத காலப்பகுதியிலும் வர்த்தகத்தினூடு மதமாற்றம் செய்யப்பட்டு பாரிய கலாச்சார மாற்றம் ஒன்று ஏற்பட்டதை நாம் அறிவோம். அத்துடன் இங்கே இன்னுமொரு விடயத்தை நாம் நோக்க முடியும். அதாவது ஆரம்ப காலங்களிலே உலக மயமாக்கல் செய்முறையிலே தலைமை தாங்கி நின்று செயற்பட்டவர்கள் பிரித்தானியர்கள். இன்று அமெரிக்கா அந்த இடத்தினை அடைந்து மிகவும் முனைப்பாக செயற்பட்டு வருகின்றது. இவ்வாறாக இந்த நீண்டதொரு வரலாற்றைக் கொண்ட உலகமயமாக்கல் செய்முறையின் காரணமாக காலம் காலமாக உலக கலாச்சாரங்களும் மாற்றங்களுக்குள்ளாகி வந்துள்ளன. இவற்றை கீழே அவதானிப்போம்.

ஆரம்ப காலங்களிலே சிற்றரசுகள் காணப்பட்டன. இந்த சிற்றரசுகள் ஒவ்வொன்றும் தமக்கென ஒவ்வொரு தனித்துவமான ஆட்சி முறைகள், கலாச்சாரங்கள், பண்பாட்டம்சங்கள் என்பவற்றை தம்மகத்தே கொண்டு காணப்பட்டன. பின்னர் இந்த சிற்றரசுகள் கைப்பற்றப்பட்டு பேரரசுகளின் உருவாக்கம் ஏற்பட்டது. இதன்போதே சிற்றரசுகளின் கலாச்சாரங்கள் பண்பாட்டம்சங்கள் என்பன மாற்றமடைந்து பேரரசுகளின் தாக்கத்திற்குட்பட்டதை காணலாம். இதற்கு உதாரணமாக கிரேக்க, உரோம பேரரசுகளின் தோற்றத்தினைக் குறிப்பிடலாம். இவற்றின் தோற்றத்தினால் முன்னைய கலைகள் ரோம பாரம்பரிய கலைகள் என்ற நிலைக்கு வந்தது. கட்டடகலையிலும் வளர்ச்சி ஏற்பட்டது.

இதன் பின்னர் புரட்சிகள் ஏற்பட்டு பேரரசுகள் வீழ்ச்சி கண்டு தேசியம் என்ற எண்ணக்கரு உருவாகி நாடுகள் உருவாகின. இதன் பின் குடியேற்ற வாதமும் இடம் பெற்றது. இக்குடியேற்ற காலத்திலும் பிரித்தானிய கலாச்சாரங்கள், மதம் என்பன குடியேற்ற நாடுகளில் பரப்பப்பட்டமையை நாம் இன்றும் அதன் எச்சங்களைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக ஆங்கிலக்கல்வி, மதமாற்றம், வெள்உடுப்பு, உத்தியோகம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இதன் பின்னர் முதலாம், இரண்டாம் உலக யுத்தத்தின்போதும் உலகின் பல தனித்துவமான கலாச்சாரங்கள் மாற்றத்திற்குள்ளாயின, சில அழிக்கப்பட்டன இவ்வாறாக உலக வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன.

அடுத்து முக்கியமாக குறிப்பிடக்கூடிய ஒரு காலகட்டமாக பனிப்போர் என்பதைக் குறிப்பிடலாம். ஏனெனில் இக்காலத்திலே இரண்டு வகையான உலகமயமாக்கல் செயன்முறைகள் இடம் பெற்றதை நாம் காணலாம். அதாவது அமெரிக்காவை தளமாக கொண்டு முதலாளித்துவமும் அதன் அம்சங்களும், ரஷ்யாவைத் தளமாக கொண்டு சமவுடமையும் அதன் அம்சங்களும் மிகப் போட்டியான முறையில் பரப்பப்பட்டன. இவ்விரண்டு, தலைமையின் கீழும் பலநாடுகள் நின்று செயற்பட்டு பண்பாட்டு கலாச்சார பொருளாதார மாற்றங்களினைப் பெற்று வந்தன. இதன் பின்னர் ரஷ்யாவின் வீழ்ச்சி காரணமாக சமவுடமை படிப்படியாக மறைய ஆரம்பிக்க இன்று அமெரிக்காவின் தாக்கமே உலகு

எங்கும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. இதனை விரிவாக ஆராய்வோம்.

### 90ற்கு பிற்பட்ட காலம்

இன்று அமெரிக்கா உலகமய மாக்கலை ஏன் துரிதமாக மேற்கொள் கின்றது, என்பதை பார்த்தால், உலகிலே ஏகவல்லரசு என்ற அந்தஸ்தினை அடைவதற்காக ஆகும். அதாவது I.M.F, W.B, U.N,D என்பனவற்றின் மூலம் இந்த செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றது. IMF, WB என்பவற்றின் உதவிகளைப் பெறவேண்டுமாயின் முதலாளித்துவம், திறந்த சந்தை, தனியார் மயமாக்கல் போன்றவற்றை பிற நாடுகள் பின்பற்ற வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுகின்றன. திறந்த சந்தை மூலம் தனது உற்பத்தி களையும், கலாச்சாரங்களை யும் உலகின் மூலை முடுக்கெங்கும் பரவ விடுகின்றது. இது ஏனைய நாடு களின் கலாச்சாரங்களை வெகுவாக மாற்றுகின்றன.

### கலாச்சாரத்தை பரப்பி அதனூடு சந்தைப்படுத்தல்

அதாவது வட அமெரிக்கா தனது கலாச்சாரங்களை உலகு எங்கும் பரப்புவதன் மூலம் தனது உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தி வருகின் றது. கலாச்சார பாதிப்பிற்கு உட்பட்ட மக்கள் அந்த கலாச்சாரத்தினைப் பின்பற்ற தேவையான பொருட்களை நுகர வேண்டிய தேவை எழுகின்றது. ஹொலீவூட் திரைப்படங்களைப் பார்க்கும் மக்கள் அதே போன்று தாமும் செயற்படவும், உடைகளை அணியவும் முற்படுகின்றனர். அதேபோல் பொழுது போக்கு என்பது அமெரிக்காவினால் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஹோட்டல் சென்று களிப்படையும் நிலை இன்று இலங்கை போன்ற அனைத்து நாடுகளிலும் ஏற்பட்டுவிட்டது. இது கலாச்சாரத்தில் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளது. அதே போல் சுற்றுலாத்துறையை எடுத்துக்கொண் டால் மேற்கத்தியவர்கள் கீழத்தேய நாடுகளுக்கு வந்து இங்குள்ள மக்களின் நடை, உடை, பாவனை என்பவற்றை பெரிதும் மாற்றியுள்ளனர். நீச்சலுடை, பெண்கள் ஜீன்ஸ் அணிதல் போன்றவற்றை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம். இவ்வாறாக உடையில் மாற்றத்தை ஏற்படுத்துபவர்கள் பாவனை யையும் மாற்றுகின்றனர். (ஆங்கிலம் பேசுதல்) அதாவது தமது சுய தோற்றத்தினையே இன்று மாற்றுகின்ற னர். உதாரணமாக அமெரிக்கர்களின் தலைமுடியின் நிறம் போல் கீழத் தேயத்தவர்களும் தமது கருமை முடியினை சில இறக்குமதி செய்யப்பட்ட மருந்து வகைகள் மூலம் வெண்மையாக மாற்றுகின்றனர்.

இதேபோல் இசைத்துறையில் இன்று பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்-கின்றது. குறிப்பாக இலங்கையில் அல்லது இந்தியாவில் எமக்குரிய பாரம்பரிய இசை, கர்நாடக இசை ஆகும். ஆனால் இந்த உலகமய மாக்கலின் மூலம் பொப் இசை என்பது பெரிதும் செல்வாக்குச் செலுத்தி யுள்ளது. இதனால் உள்நாட்டு இசைக் கலைஞர்கள் செல்வாக்கை இழந்துள்ள னர். இதனால் மேற்கத்திய இசைக் கருவிகள் பெருமளவு இறக்குமதி செய்யப்படுகின்றது. அத்துடன் இக்

கருவிகளை கற்பதிலும் எல்லோரும் ஆர்வமாகவுமுள்ளனர். அதே போல் நடனக் கலையிலும் இன்று பிறேக் டான்ஸ் என்பது பாரிய செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

இன்று ஆங்கிலத் திரைப் படங்களைப் பார்ப்பவர்கள் அதிகரித் துள்ளனர். இப்படங்கள் Internet மூல மும் T.V மூலமும் விரைவாக பரப்பப்படுகின்றது. இதனால் ஆங்கில பட மோகம் வளர்ந்துவிட்டது. மக்கள் பாரம்பரிய நாடகம், கூத்து போன்றவற் றினை தூக்கி ஏறிகின்றனர். இன்று நாடகம், கூத்து என்பவற்றில் இசை, அமைப்பு, நடிப்பு என்பவற்றில் மாற்றங் களை செய்து நடிக்கின்றனர். இது பெரிய பாதிப்பாக இருக்கும் அதே நேரம் பெருமளவு உள்நாட்டு நிதி திரைப்படங் களை இறக்குமதி செய்வதற்கும் செலவிடப்படுகின்றது. அத்துடன் இத் திரைப்படங்களைப் பார்க்கும் மக்கள் புகைப்பிடித்தல் பழக்கத்தினையும் மேற் கொள்கின்றனர்.

இதே போலவே மேற்சொன்ன காரணிகள் அனைத்தினூடாகவும் கொக்கோ கோலா அருந்தும் பழக்கத் தினை கீழத்தேயங்களில் அமெரிக்கா வெகுவாக பரப்பி விட்டது. இதன் மூலம் பாரிய சந்தையை பிடித்திருப்பதன் மூலம் பெருமளவு வருமானத்தினையும் இன்று பெறுகின்றது.

**ஏகப்பேரரசு நோக்கும்சந்தை விரிவாக்கலும்**

அதாவது ஒரே கல்லில் பல மாங்காய் வீழ்த்துவது போல அமெரிக் காவானது இன்று இந்த உலகமய மாக்கல் செயன்முறை மூலம் பல நோக்கங்களை நிறைவேற்றி வருகின் றது. அதாவது தனது கலாச்சாரத்தினை உலகு எங்கும் பரப்புவதன் மூலம் உலகிலே அமெரிக்க கலாச்சாரம் மேலோங்கி வளர, அமெரிக்கா தலை சிறந்து விளங்கும். அதே நேரம் அக்கலாச்சாரத்தினைப் பின்பற்றுகின்ற மக்கள் கட்டாயமாகவே அமெரிக்காவின் உற்பத்திப் பொருட்களையே நுகர வேண்டும். இதனால் அமெரிக்காவின் உற்பத்திப்பொருட்களுக்கு உலகெங் கும் பாரிய சந்தை வாய்ப்பு ஏற்ப டுகின்றது. இதுவும் அமெரிக்காவிற்கு பாரியதொரு வெற்றியே. உதாரணமாக கொக்ககோலா. இது மட்டுமல்லாமல் இவ் உலகமயமாக்கல் மூலம் தனது இராணுவ, அரசியல் செல்வாக்கினையும் உலகம் முழுவதும் ஏற்படுத்தியும் வருகின்றது. அதாவது திறந்த பொருளாதார கொள்கையூடாக பிற நாடுகளுடன் பொருளாதார, அரசியல் ரீதியாக ஒப்பந்தங்களை மேற்கொண்டு அதனூடு அந்த நாடுகளில் காலூன்றி ஆதிக்கம் செலுத்த முற்படுகின்றது. இதற்கு நல்ல உதாரணமாக அண்மை யில் சமாதான சூழ்நிலையின் பின் இலங்கை அரசுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு இலங்கை விவகாரங் களில் அமெரிக்கா தலையிடுவதைக் கூறிக் கொள்ளலாம். ஆகமொத்தத் திலே அமெரிக்காவின் இந்த செயற்பாட்டின் முக்கிய நோக்கம் யாதென நாம் நோக்கிப் பார்த்தால் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கு பின்னர் ஏகவல்லரசு என்ற ஒரு நிலையை நோக்கி செல்வதே ஆகும். இதற் கமைவாகவே அண்மைய காலங்களில் அமெரிக்காவின் செயற்பாடுகள் அமைந்து செல்வதை நாம் நாளாந்த செய்திகளினூடு அறிந்து கொள்ள

முடிகின்றது. இவ்வாறாக ஏகவல்லரசை அடைந்த பின்னர் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் என்ற எல்லாவற்றிலும் உலகம் பூராகவும் தனது அம்சங்களை பரப்புவதன் மூலம்உலகம் முழுவதையுமே தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து அமெரிக்க அரசு ஏகப் பேரரசு என்ற ஒரு நிலையை அடைந்து கொள்வதே நோக்கம் ஆகும். அதாவது உலகின் அரசியல் எல்லைகளை புறக்கணித்து நாடு என்ற ஒரு நிலையை அகற்றி ஒவ்வொரு நாட்டினையும் ஒரு சந்தையாக மாற்றுவதே இதன் முக்கிய நோக்கம் என அறிஞர்கள் கூறுகின்றனர். இதற்கு ஆதாரம் இன்று அமெரிக்கா எந்தவொரு நாட்டினையும் நாடு என்று அழைப்பதில்லை. மாறாக தேசிய அரசியல் எல்லைகளைப் புறக்கணித்து அதை சந்தை என்ற பெயரிலேயே அழைக்கின்றது. உதாரணம் ஆசிய சந்தை, இலங்கை சந்தை என அழைக்கப்படும் பலவற்றை குறிப்பிடலாம்.

இவ்வாறாக அமெரிக்காவின் நோக்கம் இருப்பினும் இன்னும் பல நாடுகள் தமது கலாச்சார, பண்பாட்டம்சங்களையும், இறைமையையும் பாதுகாத்து கொள்ளும் வண்ணம் எதிரான வாதங்களையும் வெளியிடுகின்றன. சீனா, ரஷ்யா அராபிய நாடுகளில் சில, என்பவையும் இவ்வாறு செயற்பட்டு வருகின்றன. இருந்தும் உலகமயமாக்கல் செயன் முறைகளை தடுக்க முடியவில்லை. அண்மையில் தலிபான்கள் தமது முஸ்லிம் கலாச்சார பண்பாட்டம்சங்களை கடைப்பிடிக்கும் படி மக்களுடன் இறுக்கமாக செயற்பட்டதும் அதை நடைமுறைப்படுத்த முடியாமற் போனதும் அறிந்ததே. இங்கே அமெரிக்கா ஏதோ ஒரு காரணத்தை காட்டி தலிபான்கள் மீது தாக்குதலை தொடுத்ததும் குறிப்பிடத் தக்கது.

இவ்வளவும் மேலைத்தேய கலாச்சாரங்கள் கீழைத்தேய கலாச் சாரங்களில் ஊடுருவியமை பற்றிப் பார்த்தோம். அதே போல உலகமயமாக்கல் மூலம் கீழத்தேய கலாச்சார பண்பாட்டம் சங்களும் மேலைத்தேய கலாச்சாரங் களிலே பரவியிருப்பதனையும் நாம் இங்கே குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். ஆயினும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன என்று கூறமுடியாது.

## நன்மை தீமைகள்

இந்த உலகமயமாக்கல் செய்முறை மூலம் ஏற்பட்டுவரும் கலாச்சர மாற்றங்களினாலே நன்மைகள் கிடைக்கின்ற அதேவேளை தீமைகளும் ஏற்படுகின்றன.

அந்த வகையிலே நன்மைகள் என நோக்குகின்றபோது பொருளாதார ரீதியாக பார்த்தால் பாரிய விரிந்ததொரு சந்தைவாய்ப்பு கிடைக்கின்றது. இதன் மூலம் உற்பத்திப் பொருட்களை உலகெங்கும் விற்பனை செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன் பிராந்தியங்கள் கடந்த நிலையிலும் பண்பாட்டு ஒருமைப்பாடு ஒன்று ஏற்படுகின்றது. உதாரணமாக புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்குமிடையில் T.V, Internet என்பன மூலம் ஓர் ஒருமைப்பாடு ஏற்படுகின்றது. இலங்கைத் தமிழர்களின் அலுவலங்களை பிரச்சனைகளை உடனுக்குடன் அறிந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் குரல் கொடுக்கின்றனர்.

இங்கே எல்லோரும் தமிழர்கள் என்ற ஓர் ஒருமைப்பாடு ஏற்படுகின்றது. இதை விட ஒத்துணர்வு என்பதும் ஏற்பட்டிருக்கின்றது. இதன் மூலம் புரிந்துணர்வு என்பது மக்களுக்கிடையில் ஏற்படுகின்றது. இன்று உலகிலே நடைபெற்று வருகின்ற யுத்தங்களில் பெரும்பாலானவை இன, மத பண்பாட்டு அடிப்படைகளிலேயே தோற்றம் பெற்று நடைபெறுவதனை நாம் அறிவோம்.

எனவே இந்த உலகமயமாக்கல் மூலம் உலகிலே இன, மத, பண்பாட்டம்சங்கள் அனைத்தும் கலப்படைந்து ஒரே மதம், ஒரே இனம், ஒரே பண்பாடு என்ற வகையிலே நோக்கக் கூடிய ஒரு நிலை தோன்றும். இந்த நிலையின் மூலம் இன, மத, கலாச்சார ரீதியாக ஏற்படும் போர்கள், பிரச்சனைகள் என்பவற்றை தவிர்த்துக் கொள்ள முடியும். இன்றும் கூட இலங்கையில் இடம் பெற்றுவரும் சமாதான முயற்சிகளில் நோர்வே தலையிட்டுக் கொள்வதற்கு உலகமயமாக்கல் தான் காரணம் என்று கூறினாலும் மறுப்பதற்கில்லை.

அத்துடன் சில கலாச்சாரங்களிலே காணப்படுகின்ற மூடநம்பிக்கைகள் உடைக்கப்படுகின்றன. இதன் மூலம் குறித்த ஓர் சமுதாயம் அல்லது பொருளாதார வளர்ச்சி நிலையை அடைந்து கொள்ள முடியும். பெண்கள் பற்றிய மூடநம்பிக்கைகள் தமிழ் சமூகத்தில் ஏராளம் காணப்பட்டது. இதனால் பெண்கள் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளக்கூடாது என்ற நிலையில் அவர்கள் தங்கி வாழ்வோராக இருந்தனர். இது பொருளாதார ரீதியாக பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். இன்று இந்த நிலை உடைத்தெறியப்பட்டு பெண்களில் ஏராளமானவர்கள் தொழில் நுட்பவியலாளர்களாவும், சிறந்த தொழிலாளர்களாகவும் பொருளாதாரத்திற்குப் பங்காற்றுகின்றனர். இவ்வாறாக இன்றும் பல்வேறு நன்மைகள் பொருளாதார, அரசியல் ரீதியாக ஏற்படுவதையும் நாம் காணலாம்.

தீமைகள் எனும்போது ஏராளமான தீமைகள் ஏற்படுகின்றன. அவையும் பொருளாதார, அரசியல், சமூக ரீதியில் ஏற்படுகின்றன. இருப்பினும் கலாசார ரீதியான மாற்றங்களினால் ஏற்படும் சில தீமைகளை நோக்கின் பண்பாட்டின் தனித்துவமான அர்த்தங்கள், எல்லைகள் உடைக்கப்பட்டு பண்பாட்டு தனித்துவம் சிதைவடைகின்றது. அத்துடன் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையும் தோன்றுகின்றது. இது மிகவும் ஒரு ஆபத்தானதாகும். பண்பாட்டு அர்த்தங்கள் உடைக்கப்படும்போது மத நம்பிக்கைகள், கட்டுப்பாடுகள் என்பனவும் சீரழிகின்றது. இதனால் கலாச்சார சீரழிவுகள், சமூக பிரச்சனைகள் என்பன தோன்றுகின்றது. போதைவஸ்து பாவனை என்பது அதிகரித்து அதுவும் பாரிய சமூக சீரழிவை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு கலாச்சார தனித்துவம் பல்வேறு வழிகளில் உடைத்தெறியப்படுகின்றது. கலாச்சாரம் சீரற்றுப்போக சமூகக் கட்டமைப்பும் உடைகின்றது. இது பொருளாதாரத்தையும் சீரழிக்கும். அத்துடன் எயிட்ஸ் போன்ற கொடிய நோய்களும், வேறும் புதிய நோய்களும் சமூகத்தினைச் சீரழிக்கின்றது. இவை யாவும் மேலைத்தேய கலாச்சாரத்தின் மூலம் கிடைக்கப் பெற்றவையே. இவ்வாறான நோய்களினால் ஒரு வீரியமற்ற மனிதவளம் உருவாக்கப்படு

கின்றது. இது பொருளாதார ரீதியாக பாரிய இழப்பாகும். இவ்வாறாக பல்வேறு தீமைகள் ஏற்படுகின்றன.

இவ்வாறாக உலகமயமாக்கல் செய்முறையானது ஆரம்ப காலங்களிலே குறுகியதொன்றாக இன்றைய நிலையில் இருந்து வேறுபட்ட நிலையில் காணப்பட்டது. ஆனாலும் இது 1990களிற்கு பிற்பட்ட காலப்பகுதியிலே தான் முனைப்பு பெற்று வளர்ந்து வருவதைக் காணலாம். சந்தை வாய்ப்பு, கலாச்சார மாற்றம், அரசியல் கொள்கை என்ற அனைத்து அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்த நிலையில் மாற்றமடைந்து வருவதை நாம் காணலாம். இந்த உலகமயமாக்கல் மூலம் நன்மை, தீமை என்ற இரு பக்க விளைவுகளுமே ஏற்படுகின்றன. இதனால் இந்த செய்முறையினை ஏற்க மறுக்கின்ற சில நாடுகள் இன்றும் இதற்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. இருந்தும் உலகிலே வாழ்கின்ற அனைவரும் இன்று இந்த செயற்பாட்டை விரும்பியோ, விரும்பாமலோ பின்பற்ற வேண்டிய சூழ்நிலை ஒன்று ஏற்பட்டு விட்டது. எனவே இன்றைய இந்த உலகமயமாக்கல் செய்முறையை நோக்குகின்றபோது, அது ஒரு பக்க பாச்சல் அதிகமாக கொண்டதாகவே காணப்படுகின்றது. அதாவது மேல்நாட்டு அம்சங்கள் கீழத்தேயங்களில் பரவி வருவதையே காணமுடிகின்றது. எனவே இதை Westernalization என்றே (மேற்கத்திய மயமாக்கம்) கூறிக் கொள்ள முடியும். எனவே இந்த உலகமயமாக்கல் போக்கிலே எதிர் காலத்தில் இனம், மதம், மொழி, கலாச்சாரம் என்பன அனைத்தையும் கடந்து உலக பண்பாட்டம்சங்கள் அனைத்தும் கலந்த ஓர் ஒருமைப்பாடான சமூகம் தோற்றம் பெறலாம்.

## References:


✍பொருளியல் நோக்கு: ஏப்ரல் - மே 2000

✍பிரவாதம் : N. சண்முகரத்தினம் ஜனவரி, ஜுன் 2002

✍யுனெஸ்கோ கூரியர்- நவம்பர் 2000

✍அபிவிருத்திப் பொருளியல் இதழ்-1, 2000

வளர்முக நாடுகளும் புதிய கலாச்சாரமும்- Miss சசிரேகா

✍விருட்சம் இதழ் 5, 2000 பக். 84-87


> The opening of a foreign trade.... sometimes works a sort of industrial revolution in a country whose resources were previously under developed.
>
> John Stuart mill 1846

# உலகமயமாக்கலும் வளர்முக நாடுகளில் அந்நிய நேரடி முதலீடும்
# Globalization and foreign direct investment in Developing countries

பிறேமினி கணேசமூர்த்தி
3ம் வருடம்
பொதுக்கலை

## அறிமுகம்

உலக நாடுகள் அனைத்தினது வளர்ந்துவரும் பொருளாதார ஒருங் கிணைப்பையும், உலகளாவிய ரீதியில் தேசிய சந்தைகளை ஒருங்கிணைக்கும் செயன்முறையையும் மேற்கொள்வதே உலகமயமாக்கல் எனலாம். அதாவது சர்வதேச நாடுகள் தங்கள் தேசிய பொருளாதாரத்தை உலக சந்தையுடன் இணைக்கும் நடவடிக்கையினையே உலகமயமாக்கல் என பொதுவாக வரைவிலக்கணப்படுத்தலாம். சர்வதேச வர்த்தகத் தொடர்பில் தாராளமயப் படுத்தப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபடுதல், தனியார் மயமாக்கலுக்கு ஏற்றவாறான பொருளா தார சீர்திருத்தத்தை உருவாக்குதல், சந்தை மயமாக்கப்பட்ட பொருளாதார முறைமையை அனுமதித்தல் மற்றும் ஒவ்வொரு நாட்டின் முதலீட்டு சந்தையையும் சர்வதேச ரீதியாக ஒன்றிணைத்தல் போன்ற தன்மைகளைக்கொண்டமைந்த நாடுகளே உலகமயமாக்கலுக்குள் தம்மை உட் புகுத்துகின்றன. புதிய சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வ தற்காக பொருளாதார செயற்பாடுகள் தேசிய எல்லைகளைக் கடந்து விஸ்தரிக்கப் படும் பொழுது வர்த்தகம், முதலீடு என்பன சர்வதேச மயமாக்கப் படுகின்றன.

இன்றைய உலகில் ஒவ்வொரு நாடும் ஒன்றிலொன்று தங்கியிருந்து தமது பொருளாதார நடவடிக்கைகளை ஆற்றவேண்டிய நிலமை உருவாகிக் கொண்டிருக்கின்றது. கடந்த இரு தசாப்த காலங்களாக நாடுகளின் பொருளாதாரமானது சர்வதேச ரீதியாக பெரும் சந்தையை நோக்கி தமது செயற்பாடுகளை நகர்த்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வளர்முக நாடுகளின் பொருளாதார உறுதிநிலை தளர்வடைவ தால் இவை வளர்ச்சியடைந்த நாடு களிடம் மூலதனத்தை பெற வேண்டிய நிலைமையை உருவாக்கியுள்ளது. இதனடிப்படையில் வளர்முக நாடுகள் தமக்குத் தேவையான மூலதனத்தைப் பெறும் வழிவகையினுள் அந்நிய நேரடி முதலீடு சிறப்பானதாகக் கருதப்படு கின்றது.

அந்நிய நேரடி முதலீடு என்பது ஒரு நாட்டில் வேறோர் நாட்டினது தனியார் அல்லது கம்பனிகள், மற்றும் பல்தேசியக் கம்பனிகள் என்பன இலாப நோக்கம் கருதி மேற்கொள்ளப்படும் முதலீடாகும். இவ் அந்நிய நேரடி முதலீடானது வளர்முக நாடுகளின் பல்வேறுபட்ட பொருளாதார நோய்களையும் குணப்படுத்துவதற்கு சிறப்பானதோர் மாத்திரையாக அமைந்து விடுகின்றது எனலாம். எனவே வளர்முக நாடுகள் அந்நிய நேரடி முதலீட்டைப் பெறுவதற்க் காக வளர்ச்சியடைந்த நாடுகள்,

சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆகிய வற்றால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற உலகமயமாக்கல் என்னும் பொருளா தார செயற்பாட்டை ஏற்க வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றை உலகில் உலகம யமாக்கலானது அதிகளவுக்கு சந்தை யினாலேயே உருவாக்கப்பட்டு வருகின் றது. சந்தையில் பல்தேசிய கம்பனிகள் முதன்மைப் பங்கினை வகித்து வருகின்றன. எனவே உலகமயமாக்க லினது பிரதான முகவராக பல்தேசியக் கம்பனிகளைக் குறிப்பிட முடியும். பல்தேசியக் கம்பனிகள் வளர்முக நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக் குத் தேவையான அந்நிய நேரடி முதலீட்டை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றன. பொதுவாக வளர்முக நாடுகளில் அந்நிய நேரடி முதலீட்டின் பங்களிப்பினை நோக்குகின்றபோது 1980-85 காலப்பகுதியில் சராசரியாக வருடமொன்றுக்கு 12.6 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இது 1992-93 காலப்பகுதியில் 4 மடங்காக அதிகரித்தது. 1980களின் முதல் அரைப் பகுதியில் 20% மட்டுமே வளர்முக நாடுகளுக்குக் கிடைத்தது. ஆனால் 1992-94 காலப்பகுதியில் இது 32 சதவீதமாக அதிகரித்தமை குறிப்பிடத் தக்கது. 1993ம் ஆண்டு வளர்முக நாடுகளின் மொத்த மூலதன ஆக்கத்தில் அந்நிய நேரடி முதலீடானது 6 சதவீதத்திற்கும் அதிகமாக காணப் பட்டது. அந்நிய நேரடி முதலீடானது 1991 இல் 34.4 பில்லியன் அமெரிக்க டொலராகவும் 1998ல் 155.0 பில்லியன் அமெரிக்க டொலராகவும் காணப் பட்டது. எனவே இவ் அதிகரிப்பானது வளர்முக நாடுகளில் அந்நிய நேரடி முதலீடு அதிக செல்வாக்கு செலுத்து கின்றமையை எடுத்துக்காட்டுவதாகவே அமைகிறது.

**வளர்முக நாடுகளில் அந்நிய நேரடி முதலீட்டைப் பெறுவதற் கான வாய்ப்புக்கள்:~**

உலகமயமாக்கல் என்பது ஏற்றுமதி மயப்படுத்தப்பட்ட உற்பத்தி, உள்நாட்டு சந்தைக்கான உற்பத்தி என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் அருகி வருவதனை குறிக்கும். வளர்முக நாடுகள் ஏற்றுமதியாளருக்கும், உள்நாட்டுச் சந்தைக்கு உற்பத்தி செய்பவர்களுக்கும் சிறந்த வியாபார சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்ப தன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளைக் கவர முற்படுகின்றன. பல்தேசிய நிறுவனங்கள் அதிகரித்த போட்டிக்கு முகம்கொடுக்கும் வகையில் அவர்களது தொழிலுக்கு பலதரப்பட்ட இட அமைவு களைக் கருத்திற் கொள்கின்றன. அதாவது பல வெளிநாட்டு முதலீட்டாளர் கள் எங்கு சர்வதேச நியமங்களுக் கமைய தரமும், விலையும் உடைய பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய தாக இருக்கின்றதோ அவ்வாறன இடங்களுக்கே தமது முதலீடுகளை நகர்த்த விரும்புகின்றன. கிழக்காசியா வும், இலத்தீன் அமெரிக்க நாடுகளும் உலகமயமாக்கலுக்கு ஏற்றவாறு தமது தந்திரோபாயங்களை சீராக்கி வருவதன் மூலம் அதிகளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெற்றுவருகின்றன.

அந்நிய முதலீட்டைப் பெறுவ- தில் வெற்றி காணாத நாடுகளை அவதானிக்கும்பொழுது இந்நாடுகளில் முதலீடுகளைக் கவர்வதற்குரிய

உள்ளார்ந்த வளம் இருந்தும் போதிய பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுக்காததால் முதலீடுகள் பெருமளவில உள்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அந்நிய நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கு வளர்முக நாடுகள் உலகளாவிய ரீதியில் கடைப்பிடிக்கும் நியமங்களை உள்ளடக்கியதாக அபிவிருத்தியை நோக்கி நகரவேண்டும்.

வளர்முக நாடுகளில் அரசானது உலகளாவிய ரீதியில் கடைப் பிடிக்கப்படும் கொள்கைகளை ஒத்த வகையில் பொருளாதார கொள்கை களை உருவாக்க வேண்டும். சில நாடுகளில் ஏற்படுத்தப்படும் சீர்திருத்தங்கள் கூட வெளிநாட்டு முதலீடுகளுக்கு அபாயமானதாக அமைந்துவிடுகின்றது. அதாவது சில வேளைகளில் வெளிநாட்டு முதலீடு களை அரச உடமையாக்கல் உருவாக்கப்படல் போன்றன வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை அற்ற தன்மையை தோற்றுவித்து விடுகின்றது. மேலும் புதிய முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படும். இச் சலுகைக்காலம் முடிவடைந்ததும் கம்பனிகளுக்கு வரிச்சுமை அதிகரிக்கின்றது. இந்நிலையில் நாட்டின் வரி இறுப்பாளர்களிடையே ஊழல்கள் நடைபெறவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆனால் நிலையான, தன்னியக்கமான வரி அமைப்பு நியாயவீதத்துடன் விதிக்கப்பட்டால் முதலீட்டாளர்கள் அதை வரவேற்பர்.

மேலும் வளர்முக நாடுகளில் மலிவானதாகக் காணப்படுவது ஊழியமாகும். இது முதலீடுகளைக் கவர்ந்திழுக்கக் கூடியனவாக இருப்பினும் கூட அங்கும் ஓர் பிரச்சினை இருக்கின்றது. அதாவது வெளிநாட்டு முதலீடுகள் நுணுக்கமான உற்பத்தி முறைகளைக் கையாண்டு உலக சந்தையில் போட்டித் தன்மையைப் பேணக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்து, இலாபத்தை உழைப்பதையே இலக்காகக் கொண்டுள்ளன. ஆனால் வளர்முக நாடுகளில் மலிவான ஊழியம் காணப்பட்டாலும் செயற்திறன் வாய்ந்த ஊழியம் என்பது இல்லாத நிலையே காணப்படுகிறது. இது வெளிநாட்டு முதலீட்டை கவர்ந்திழுக்கும் சக்தி அற்றதாகவே காணப்படுகிறது. அந்நிய நேரடி முதலீட்டாளரின் இலாப நோக்கு, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அபிலாஷைகளும் ஒன்றிணைக்கப் படுகின்ற பொழுதுதான் அந்நிய நேரடி முதலீடு எதிர்பார்த்த நலன்களை வளர்முக நாடுகளுக்கு வழங்குவதுடன், உலகமயமாக்கல் செயன்முறையூடாக உலக நாடுகள் யாவும் நலன்களை அனுபவிக்க முடியும்.

## வளர்முக நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பெறுவதற்காக உலகமயமாக்கலை மேற்கொள்வதால் ஏற்படக்கூடிய அனுகூல, பிரதிகூலங்கள்

அனுகூலங்கள்:-

வெளிநாட்டு நேரடி முதலீடானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும பல்வேறு பொருளாதார, சமூக பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. வளர்முக நாடுகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை

கைத்தொழில் மயமாக்கல் கொள்கை யாகும். கைத்தொழில் மயமாக்கத்தினை ஏற்படுத்தும் முக்கிய காரணியாக வெளிநாட்டு நேரடி முதலீடு காணப்படு கின்றது. கைத்தொழில் நாடுகளாக உருவாக முயற்சிக்கும் வளர்முக நாடுகளுக்கு வெளிநாட்டு நேரடி முதலீடு சிறப்பானதாகவும், அடிப்படை யானதாகவும் அமைகிறது. இதற்கு தாய்வான், கொங்கொங், தென்கொரியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளை சிறந்த எடுத்துக்காட்டாக கூறலாம். பொதுவாக உலகமயமாக்கல் சக்திகள் கைத்தொழில் நாடுகளில் இருந்தே தோன்றி வருகின்றன. வளர்முக நாடுகளை தம்மால் வடிவமைக்கப்படும் உலகளாவிய அமைப்புக்குள் உள் வாங்கிக் கொள்வதன் மூலம், இந் நாடுகளின் கைத்தொழிலாக்க செயற் பாட்டுக்கு துணைநிற்கக்கூடிய ஓர் பிரதான காரணியாக உலகமய மாக்கலானது அமைந்துவிடுகின்ற தெனலாம்.

வளர்முக நாடுகளின் உள்நாட்டு வளமானது பெருமளவுக்கு பற்றாக்குறையாகவே காணப்படுகின்றது. இது வளர்முக நாடுகளின் முதலீட்டு நடவடிக்கைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. முதலீட்டுப் பற்றாக் குறையால் இந்நாடுகள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக அமைப்புரீதியான சீராக்கல் பிரச்சினைக் குள் சென்மதி நிலுவையை குறிப்பிட லாம். வளர்முகநாடுகளில் சென்மதி நிலுவையானது பெரும்பாலும் பற்றாக் குறையாகவே காணப்படுகின்றது. சென்மதி நிலுவையில் மூலதனக் கணக்கில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பங்கு முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடானது அந்நியச் செலாவணி இருப்புக்களோடு சேர்ந்து அடிப்படை நிலுவைப் பிரச்சினையை ஓரளவு குறைத்துக் கொள்ள உதவுவதன் மூலம் சென்மதி நிலுவைப் பிரச்சினைக்கும் ஓர் தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

வளர்முக நாடுகளில் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை அதாவது பணவீக்கத்தினை நிவர்த்தி செய்வதற்கு அந்நிய நேரடி முதலீடுகள் பெருமளவு பங்காற்றுகின்றன. உலகமயமாக்கல் செயற்பாட்டின் முக்கிய விளைவாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமது அந்நியச்செலாவணியை 1980 களின் பிற்பகுதியில் தாராளமயப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. நாணயத்தின் பெறுமதியை அரசு தீர்மானித்தல் அல்லது சந்தைப் பொறிமுறையிடம் ஒப்படைத்தல் போன்ற சீராக்கங்களை மேற்கொண்டன.

வளர்முக நாடுகளில் அபிவி ருத்திக்கு தடையாக இருப்பவற்றில் வறுமை முக்கிய காரணமாக அமைகின்றது. இந்நாடுகளில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் வறுமை நிலையில் வாழ்கின்றனர். இந்நிலை யானது சேமிப்பு மட்டத்தை எதிர்மறை நிலைக்கு இட்டுச் செல்ல வழிவகுக் கின்றது. இச்சேமிப்பு குறைநிலைமை மூலதனப் பற்றாக்குறையை வளர்முக நாடுகளில் ஏற்படுத்தும் முக்கிய காரணியாக அமைகிறது. மூலதனப் பற்றாக்குறையை அந்நிய நேரடி முதலீட்டினைப் பெறுதல் சிறந்த வழியாக அமைகிறது. மூலதன உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உற்பத்திதிறனில் அதிகரிப்பை

ஏற்படுத்த முடியும். உலகமயமாக்கல் செயற்பாடு வளர்முக நாடுகள் அவற்றின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், வறுமையை குறைப்பதற்கும் உதவி செய்து பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கச்செய்யும்.

உலகமயமாக்கலினூடு பெறப்படும் அந்நிய நேரடி முதலீடானது மேலதிக வளங்களை வளர்முக நாடுகளுக்குள் கொண்டு வருகின்றது. தொழில்நுட்பம், முகாமைத்துவம், ஏற்றுமதிச் சந்தைகள், தொழில் நிபுணத்துவம், சர்வதேச சந்தைகளுடான இணைப்பு போன்றவையே மேலதிகமான வளங்களாகும். முக்கியமாக முகாமைத்துவ, தொழில்நுட்ப உதவிகளை வளர்ச்சியடைந்த நாடுகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துகின்றன. உள்நாட்டு வேலை வாய்ப்பினை அதிகரித்து, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வேலை இன்மைப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. எனவே உலகமயமாக்கமானது புதிய தொழில்நுட்பம், வெளிநாட்டு நேரடி முதலீடு ஊடாக மனித மேம்பாட்டிற்கான பெருந்தொகையான வாய்ப்புக்களை வழங்கி வருகின்றது.

**பிரதிகூலங்கள்:-**

உலகமயமாக்கலானது வளர்முக நாடுகளுக்கு அனுகூலங்களை மட்டுமல்லாது, மறுபுறமாக பல்வேறு தீயவிளைவுகளையும் வளர்முக நாடுகளுக்கு வழங்கி வருவதனையும் மறுக்க முடியாது.

வளர்முக நாடுகளில் அந்நிய நேரடி முதலீட்டை கவர்ந்திழுக்கும் நோக்குடன் உலகமயமாக்கல் என்னும் வலையில் சிக்கிக் கொள்வதனால் உள்ளூர் வளப்பயன்பாட்டைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. பெருமளவிற்கு வளர்முக நாடுகள் ஊழியச் செறிவு மிகுந்தவையாகவே உள்ளன. ஆனால் மிகை ஊழியத்தை பயன்படுத்தக்கூடியவாறான தொழில் முயற்சிகளில் அந்நிய நேரடி முதலீட்டின் வருகை குறைவாகவே காணப்படுகின்றது. முக்கியமாக நவீன உலகில் கணனிமயப்படுத்தல் காரணமாக வளர்முக நாடுகளின் வளங்கள் வீணாக்கப்படுவதனைக் காணலாம்.

வெளிநாட்டு போட்டி காரணமாக வளர்முக நாடுகளில் உள்ளூர் முயற்சியாளர்கள் பாதிப்படைகின்றனர். அதாவது உள்ளூர் கைத்தொழில்கள் வெளிநாட்டுப் போட்டிக்கு உட்படுவதன் காரணமாக அவை பின்னடைவை சந்திக்கின்றன. அந்நிய நேரடி முதலீடானது வர்த்தக சொந்தக்காரர்கள், தொழிலாளர்கள் பயமுறுத்துவதன் காரணமாக உலகமயமாக்கல் வளர்முக நாடுகள் மீது பாதகமான நிலையைத் தோற்றுவித்துள்ளது.

வளர்முக நாடுகள் உலக நிதிச் சந்தைகளின் செயற்பாடுகளையும் ஆராய்ந்தறிந்தே உலகமயமாக்கல் செயன்முறையை பின்பற்ற வேண்டும். மூலதனத்தின் மீதான கட்டுப்பாடுகளை நீக்குவதன் மூலம் உலக நிதிச் சந்தைகளை ஒருங்கிணைப்பதானது வெளிநாட்டு மூலதனத்தை கவர்வதற்கு வழிவகுக்கும். இவ்வாறான தாராளமயமாக்கல் மூலம் பயன்பெறும் வளர்முக நாடுகளில் உறுதியற்ற

தன்மை ஏற்படுவதையும் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக 1990 களின் பிற்பகுதியில் ஏற்பட்ட கிழக்காசிய நிதி நெருக்கடி இதனை எடுத்துக்காட்டு கின்றது. எனவே உலகமயமாக்க மானது நாணய நெருக்கடி, நியாயமற்ற தன்மை என்பவற்றை வளர்முக நாடுகளிடையே அதிகரிக்கச் செய்கிறது.

அந்நிய நேரடி முதலீட்டினை கவர்வதற்கு வளர்முக நாடுகளிடையே போட்டி நிலவுகின்றது. இதனால் உயர் இலாபங்களை பெறக்கூடிய நாடுகளி லேயே அந்நிய முதலீடுகள் பெருமளவு உட்பாய்கின்றன. இவ் உயர் இலாப நோக்கானது வளர்முக நாடுகளது நலன்களுக்கு சாதகமற்ற தன்மையை உருவாக்குகின்றது. உதாரணமாக இலாபம் உயர்வாகவுள்ள, ஆனால் சூழலிற்கு தீங்கு தரக்கூடிய பொருட் களின் உற்பத்தியானது வளர்முக நாடுகளின் அபிவிருத்தி நடவடிக்கை களைப் பாதிப்படையச் செய்கின்றது.

வளர்முக நாடுகளில் அந்நிய நேரடி முதலீடானது சமூக ரீதியிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. கைத்தொழில் மயமாக்கல் கொள்கை யால் சூழல் மாசடைகிறது. கலாச்சாரம் சீரழிகிறது. எனவே பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அந்நிய நேரடி முதலீடு சிறப்பானது எனக் கருதி, அதனைப் பெருமளவு பெறும் நோக்குடன் உலகமயமாக்கலுக்குள் பிரவேசித்த வளர்முக நாடுகள், தற்போது உலக மயமாக்கலின் விளைவாக பலதரப்பட்ட சமூக, பொருளாதார பிரச்சினைகளை அனுப விப்பதே உண்மை எனலாம்.

## உலகமயமாக்கலும் இலங்கை யில் அந்நிய நேரடி முதலீடும்

உலகமயமாக்கல் நடவடிக்கையின் முக்கிய அம்சமான அந்நிய நேரடி முதலீடானது, வளர்முக நாடுகளில் ஒன்றாகிய இலங்கையிலும் பெரும் தாக்கத்தினை செலுத்தி வருகின்றது. இலங்கை சுதந்திரமடைய முன்பு அந்நியராட்சிக் காலத்திலிருந்தே அந்நிய நேரடி முதலீட்டின் பங்களிப்பு காணப்பட்டது. சுதந்திரத்தின் பின்னர் அரசியல் சூழ்நிலை, பொருளாதார கொள்கைகள் என்பவற்றின் விளைவாக முதலீடுகளின் பாய்ச்சலானது சீரற்ற தன்மையை உருவாக்கியுள்ளது. பொருளாதாரக் கொள்கையினுள் ஏற்றுமதிசார் கைத்தொழில் கொள்கை, இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கை என்பன அந்நிய நேரடி முதலீட்டைக் கவர்வதில் பங்களிப்பு செய்கின்றன.

எனினும் 1977ல் உருவாக்கப் பட்ட திறந்த பொருளாதார செற்பாட்டின் மூலம் தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகமாகியது. இது அந்நிய நேரடி முதலீட்டைக் கவரும் சிறந்த ஒரு சாதனமாக காணப்பட்டது தாராள மயமாக்கல் கொள்கையின்கீழ் நேரடி முதலீட்டுக் கட்டுப்பாடுகளை நீக்குதல், ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தல், ஆகியன மேற்கொள்ளப்பட்டன. அந்நிய நேரடி முதலீட்டின் பாய்ச்சலை அதிகரிப்பதற்காகவும் அதனுடன் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற் காகவும் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு, அந்நிய முதலீட்டு ஆலோசனைக்குழு உருவாக் கப்பட்டன. தென்னாசியாவி லேயே அதிகளவு தாராளமயப்படுத்தப்பட்ட

முதலீட்டுச் சூழலைக் கொண்ட நாடு இலங்கையாகும். ஒரு சில விதிவிலக்கு கள் தவிர அநேகமாக அனைத்துத் துறைகளும் அந்நிய சுதந்திர வர்த்தக வலயமாக பிரகடனப் படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இலங்கையானது பொருளாதாரத்தைத் திறந்துவிடுவதன் மூலம் தாராளமயப் படுத்தல், உலகமயமாக்கல எனும் பொருளாதார நெறி முறைக்குள் உட்பட்டிருக்கும் நிலையை நாம் அவதானிக்கலாம்.

இலங்கைக்கான அந்நிய நேரடி முதலீட்டின் பாய்ச்சலானது திறந்த பொருளாதாரக் கொள்கையின் பின்னர் அதிகரிக்கத் தொடங்கியது. அரசாங் கத்தால் மேற்கொள்ளப்பட்ட பொருளா தாரக் கொள்கை, அரசியல் நிலை என்பனவற்றால் பாய்ச்சல், வேகம் அதிகரித்தது. அந்நிய நேரடி முதலீடு 1978ல் 938 மில்லியன் ரூபாவாகவும், 1983ல் 1171 மில்லியல் ரூபாவாகவும், 1994ல் 158 மில்லியன் அமெரிக்க டொலராகவும் காணப்பட்டமை இதனை நன்கு தெளிவுபடுத்துகின்றது. வெளி நாட்டு முதலீட்டு ஊக்குவிப்புக்கான முக்கிய அரசமுகவராக கடமையாற்றும் இலங்கை முதலீட்டுசபை 1998ல் இலங்கையினுள் பல நாடுகளால் முதலீட்டு நடவடிக்கைகளை மேற் கொள்ள வழிவகுத்தது. 1998ல் 9689 மில்லியன் ரூபாவில் இருந்து 1999 இல் 16261 மில்லியன் ரூபாவாக 68 வீதத்தினால் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். முதலீட்டு ஊக்குவிப்பு தூதுக் குழுக்களை பல்வேறு நாடுகளுக்கு அனுப்பியதன் மூலம் பெருமளவிலான முதலீடுகள் கவரப்பட்டமையே 1999இல் அதிகரிப்பிற் கான காரணமாகும்.

பொதுவாக நோக்கும் போது இலங்கையில் அந்நிய நேரடி முதலீட்டு பாய்ச்சல் வேகமானது மிகவும் மந்த நிலையில் இடம் பெறுவதை நாம் காணலாம். இந்நாடுகளில் அரசியல், பொருளாதார ஸ்திரமற்ற நிலையே பிரதான காரணமாகும். எனவே அந்நிய நேரடி முதலீட்டின் தாக்கமானது எதிர்பார்க்கப்பட்டளவு வெற்றி அளிக் காததால் இலங்கையானது உலகமய மாக்கலுக்குள் தன்னை முழுமையாக தயார்ப்படுத்தவில்லை என்ற முடிவுக்கே வரலாம்.

### காலணித்துவ, நவகாலணித்துவ அம்சங்களின் கீழ் உலகமய மாக்கம்

ஆரம்ப காலகட்டத்தில் அரசியல், சமூக, பொளாதார ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளால் அபிவிருத் தியடையாத நாடுகள் மீது காலணித்துவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. காலணித்துவ ஆட்சியின் கீழ் அரசியல் ரீதியாக வளர்முக நாடுகளைக் கைப்பற்றுவதன் மூலம் பொருளாதார கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி உலக மயமாக்கலுக்குள் வளர்முக நாடுகளை உட்புகச் செய்வதே நோக்கமாகும்.

ஆனால் அண்மைய காலங்க- ளில் நவ காலணித்துவ ஆதிக்கம் நிலவுகின்றது என்பது முக்கியமான ஓர் அம்சமாகும். நவகாலணித்துவம் என்பது வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்முக நாடுகளில் பொருளாதார ரீதியில் உட்புகுவதன் மூலம் அரசியல், பொருளாதார செயற்பாட்டை தம் வசப்படுத்தி உலகமயமாக்கலை மேற்கொள்ள முற்படுகின்றன. ஆனால்

அந்நிய நேரடி முதலீட்டின் முக்கிய முகவராக செயற்படுகின்ற பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கத்துக்கு இந் நாடுகள் உட்படுவது நவகாலணித்து வத்தின் விளைவே. இதனால் வளர்முக நாடுகளின் அரசியல், பொருளாதார திட்டமிடல்கள் பல்தேசிய கம்பனிகளின் சாதகமான தன்மைகளுக்கேற்பவே மேற்கொள்ள வேண்டியுள்ளமையை அவதானிக்கலாம்.

### உலகமயமாக்கலினூடாக வளர் முக நாடுகள் யாவும் எதிர்பார்த்த நன்மைகளை பெற்றுள்ளதா?

உலகமயமாக்கலானது இன்றைய உலகில் வர்த்தக நலன்கள், கட்டுப்பாடுகள் அற்ற சந்தைகளாலேயே செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் இச் செயன்முறையானது உலகிலுள்ள அனைத்து நாடுகளினது அபிவிருத்தியையும் மேற்கொள்வதில் வெற்றியடைந்துள்ளதா? என்பது கேள்விக்குரியாகும். இது பெரும்பாலான வளர்முக நாடுகளில் நன்மையை ஏற்படுத்தத் தவறிவிட்டது என்றே கூறலாம். அதாவது வளர்முக நாடுகள் சிலவற்றுக்கும், புதிதாக தொழில் மயமாகிவரும் வளர்முக நாடுகளிற்குமே அனுகூலங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளது என்பதே உண்மை. குறிப்பாக மிக வறிய வளர்முக நாடுகள் அந்நிய நேரடி முதலீட்டின் தாக்கத்திற் குட்பட்டு பெரும் பாதிப்புக்களை எதிர் கொள்கின்றன.

உயர் வருமானங்களைப் பெறுகின்ற கைத்தொழில் நாடுகளில் வாழ்கின்ற மொத்த சனத்தொகையில் 1/5 வீத்தினரான மக்கள் உலகின் நேரடி அந்நிய முதலீட்டின் 68 சதவீதத்தைப் பெறுகின்றனர். ஆனால் மிகவும் வறிய நாடுகளில் வாழ்கின்ற 1/5 பகுதியினர் அந்நிய நேரடி முதலீட்டின் ஒரு சதவீதத்தை மட்டுமே பெறுகின்றமையை அவதானிக்கலாம். 1997இல் மொத்த உலக வெளிநாட்டு நேரடி முதலீடு சுமார் 40,000 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. இதில் 37% வளர்முக நாடுகளுக்கும் 58% வளர்ச்சி யடைந்த நாடுகளுக்கும் சென்றமை குறிப்பிடத்தக்கது. எனவே உலக மயமாக்கலினூடாக வளர்முக நாடு களிலே சமமற்ற முதலீட்டு பரம்பல் இடம் பெறுவதையும், இதனூடாக மிக வறிய நாடுகள் மேலும் மேலும் பாதிப்புக்குள்ளாவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

### முடிவுரை:

உலக பொருளாதாரத்தில் உலக மயமாக்கல் தவிர்க்க முடியாதது ஆகும். பொருளாதாரங்களைத் திறந்து விடுவதன் மூலம் வர்த்தக தாராள மயப்படுத்தல் ஊடாக உலகமயமாக்கல் என்ற பொறிமுறையூடாக உலக பொருளாதாரம் மிக வேகமாக மாற்றம் கண்டு வருகின்றது. அந்நிய நேரடி முதலீடு, பொருளாதார வளர்ச்சி, ஏற்றுமதி வர்த்தகத்தை மேம்படுத்தல், சென்மதி நிலுவையினை சீராக்கல் போன்ற பல செயற்பாடுகளை சாதிக்கும் நோக்கத்துடனேயே வளர்முக நாடு களால் உலகமயமாக்கமானது மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலம் வளர்முக நாடுகள் பல சாதகமான அனுகூலங்களைப் பெற்றுக் கொண்டாலும், பெரும்பாலான வளர்

முகநாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தாக்கம் எதிர்பார்க்கப் பட்டளவு வெற்றியளிக்கவில்லை என்பதே உண்மை.

இந்நாடுகளில் அரசியல், பொருளாதர ஸ்திரத்தன்மை காணப் படாமை மற்றும் உள்நாட்டுக் கலவரம் போன்றன காரணமாக வெளிநாட்டு முதலீட்டின் மூலம் பெறும்பயனை முழுமையாக அனுபவிக்க முடியா துள்ளது. எனினும் வளர்முக நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடு பொருளா தார வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் மிக முக்கிய பங்கினை வகித்து வருகின்றது என்பது பொதுவான கருத்து எனவே வளர்முக நாடுகள் உலக மயமாக்கலை ஓர் அச்சுறுத்தலாக நோக்காமல் ஒரு வாய்ப்பாக நோக்க வேண்டும். இதன் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீட்டை சிறந்த முறையில் பொருளாதார வளர்ச்சிக்கு பயன் படுத்தும் போது வளர்முக நாடுகள் அபிவிருத்தியை நோக்கி நகர முடியும் என்பதில் ஐயமில்லை.

## References

✍பொருளியல் நோக்கு 1994 Aug 2000

✍சமூக ஒளி - இதழ் 06

✍Central bank reports 1995-2000

✍International trade policy.

Many parts of the world are witnessing a new phenomenon jobless growth even when output increases, increase in Employment lags way behind

United nations development program, Human Development Report, 1993.

It is the agricultural sector that the battle for longterm economic development will be won or lost

Gunnar myrdal, Nobel Laurate in Economics

Environmental degradation poses a major threat to human security.

United nations, human Development Report, 1995

# உலகமயமாக்கலும் 3ம் உலக நாடுகளும்
# Globalization and third world countries

*சி. சிவநேசன்,*
*பொருளியல் சிறப்புக்கலை,*
*இறுதி வருடம்,*
*யாழ் பல்கலைக்கழகம்.*

21ம் நூற்றாண்டில் அனைவராலும் பேசப்பட்டுவருகின்ற ஒன்றாக உலகமயமாக்கல் என்ற விடயம் காணப்படுகின்றது. அந்த வகையிலே அதன் அண்மைக்கால விடயங்களை அறியும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது. இதில் உலகமயமாக்கல் என்றால் என்ன அது 3ம் உலகநாடுகளில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் உலகமயமாக்கல் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

"உலகமயமாக்கல்" என்பது உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் ஓர் செயற்பாடாகும். இதனை நாம் பொருளாதாரம், அரசியல் சமூகவியல் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கமுடியும்.

அரசியல் அடிப்படையில் நோக்கும் போது உலகமயமாக்கல் என்பது ஜனநாயகம் மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரங்கள் பால், சமத்துவம், ஒளிவு மறைவற்ற ஆட்சி, மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பெருக்கம் என்ற வகையிலே கருதப்பட்டு வருகின்றது.

சமூகவியல் அடிப்படையில் நோக்கும்போது உலக மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்வதும், பொப்இசை, ஹொலிவூட் படங்கள் திடீர் உணவுகள் என்பவற்றின் வளர்ச்சியாகவும் நோக்கப்படுகின்றது.

பொதுவாக கூறுவதானால் உலக மயமாக்கல் சக்திகள் கைத்தொழில் நாடுகளிலிருந்தே தோன்றி வருகின்றன. வளர்முக நாடுகளை தம்மால் வடிவமைக்கப்படும் உலகளாவிய அமைப்பிற்குள் உள்வாங்கிக் கொள்வதே இச்சக்திகளின் நோக்கமாகும். இது அநேகமாக மேலை நாடுகளில் மூலதனம், தொழில்நுட்பம், கலாச்சாரம், எண்ணப்போக்குகள் மற்றும் வாழ்க்கைப்பாணிகள் என்பவற்றை வளர்முக நாடுகளிற்குள் ஊடுருவச் செய்கின்றன. இந்த வகையில் இது உலக நாடுகளினது பொருளாதார கலாச்சார அரசியல் மற்றும் சித்தாந்த கொள்கைகளை ஒருமுகப்படுத்தும் (மேலைத்தேய மார்க்கம்) ஓர் செயன்முறையாகவே காணப்படுகின்றது.

உலகமயமாக்கம் என்பது ஒரு புதிய விடயமல்ல. அது 16ம் நூற்றண்டில் உருவாக்கப்பட்ட கிழக்கிந்திய வர்த்தக கம்பனி போன்ற வர்த்தக நிறுவனங்களின் ஸ்தாபிதத்துடன் ஆரம்பமானதுடன் ஏகாதிபத்திய வாதம் மற்றும் காலனித்துவம் என்பவற்றின் கீழ் புதிய உத்வே

கத்தினைப் பெற்றுக் கொண்டது. பிற்பாடு 1971இல் நிலையான செலாவணி விகிதத்தைக் கொண்ட பிரிட்டன் வூட்ஸ் அமைப்பின் வீழ்ச்சி மற்றும் 1990கள் தொடக்கம் சோவியத் பாணியிலான சோசலிச பொருளாதார அமைப்புக் களில் ஏற்பட்டு வந்த வீழ்ச்சி என்ப வற்றையடுத்து உலகமயமாக்கல் செயல்முறை மேலும் வலுவடைந்தது.

இன்று இடம்பெற்று வரும் உலகமயமாக்கல் பழைய உலக மயமாக்கலில் இருந்து பல வழிகளிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. முன்னைய உலகமயமாக்கல் முறை பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றிலான வர்த்தகம் மூலப் பொருட்கள் மீதான முதலீடு என்பவற் றில் கவனம் செலுத்தியது. ஆனால் இன்றைய உலகமயமாக்கல் இவற்றிற்கு மேலதிகமாக அந்நியச் செலாவணி மற்றும் மூலதனச் சந்தைகள் என்பவற்றையும் உள்ளடக்கியதாக அமைகின்றது.

உலகமயமாக்கலானது கடந்த 25 வருட காலங்களில் உலகளாவிய ரீதியில் எவ்வாறான பாதிப்பினை ஏற்படுத்தியது என்பதனை நோக்கு வோமாயின், உலகளாவிய ரீதியில் நாடுகளிற்கிடையிலான ஒருங்கிணைப் பானது ஒருபோதும் இருந்திராத அளவிற்கு வரிவடைந்து செல்கின்ற மையை பின்வரும் புள்ளி விபரங்களி னூடாக நோக்கலாம்.

1) உலக ஏற்றுமதிகள் 1970ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 17% இருந்து 1990களில் 21 சதவீதமாக அதிகரித்துள்ளது.
2) வெளிநாட்டு நேரடி முதலீடு 1997ல் 40 000 கோடி U.S $ ஆக இருந்து வந்தது. இது 1970களில் காணப்பட்ட அளவிலும் பார்க்க 7 மடங்கு உயர்வானது.
3) 1975இல் 26500 கோடி U.S $ இருந்து சர்வதேச வங்கி கடனளிப்பு 1994ல் 420 000 கோடி U.S $ ஆக உயர்ந்தது.
4) 1970களில் சுமார் 1000 - 2000 இடைப்பட்ட கோடி அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட அந்நியச் செலாவணி சந்தைகளின் நாளாந்தப் புரள்வு 1998ல் 150,000 கோடி அமெரிக்க டொலராக உயர்ந்தது.
5) 1980இல் 26 கோடியாக இருந்து வந்த உலக சுற்றுலா பயணிகள் தொகை 1994ல் 59 கோடியாக உயர்ந்தது.
6) சுமார் 13- 14.5 கோடி மக்கள் தமது சொந்த நாடுகளிற்கு வெளியே தொழில் புரிகின்றார்கள். 1996ல் தமது சொந்த நாடுகளிற்கு அனுப்பி வைத்த பணத்தின் மதிப்பு 5800 கோடி U.S டொலராகும்.
7) சர்வதேச தொலைபேசி அழைப்புக் களில் செலவிடப்பட்ட நேரத்திலும் கணிசமான மாற்றம் ஏற்பட்டது. 1990ல் 3300 கோடி நிமிடமாக காணப்பட்டது. 1996ல் 7000 கோடியாக அதிகரித்தது.

இவ்வாறாக இன்று உலகமய-மாக்கல் செயன்முறை தலை தெறிக்கும் வேகத்தில் சென்று கொண்டிருக்கின்ற போதிலும் அதன் விளைவாக பெருகி வரும் வாய்ப்புக்களை அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய நிலைமை ஏற்படவில்லை. குறிப்பாக 3ம் உலகநாடுகளினைப் பொறுத்து அவற்றின் அபிவிருத்தியில்

உலகமயமாக்கல் என்பது ஓர் தடைக் கல்லாகவே காணப்படுகின்றது. உலக மயமாக்கலானது செல்வம், அதிகா ரத்தை ஒரு சிலரின் கைகளில் ஒன்றாக குவியச் செய்துள்ள அதே வேளை வறிய நாடுகளும் வறிய மக்களும் புறமொதுக்கப்பட்டு வருகின்றார்கள்.

3ம் உலகநாடுகளைப் பொறுத்து உலகமயமாக்கங்கள் எவ்வாறான பாதிப்பினை ஏற்படுத்துகின்றது என்ப தனை நோக்குவோமாயின்.

1) **பண்டங்களின் விலை வீழ்ச்சி:-**

உலகமயமாக்கலானது வளர்முக நாடுகளின் கைத்தொழில் உற்பத்தி களிற்கு சந்தை வாய்ப்பையும் சாதகமான விலையினையும் வழங்கிய அதேவேளை சந்தையை மட்டுப்படுத்தி விலையை வீழ்ச்சிய டையச் செய்துள்ளது. 1987-97 காலப்பகுதியில் விளை பொருட் களின் விலை (மெய்விலை) 39% வீழ்ச்சி கண்டது.

2) **வருமான ஏற்றத்தாழ்வை உண்டு பண்ணியுள்ளது.**

உலகமயமாக்கலின் விளைவாக வளர்ச்சியடைந்த நாடுகளிற்கும் வறிய நாடுகளிற்குமிடையிலான இடைவெளி அதிகரித்து கொண்டுள் ளது என 1994ல் கெய்ரோவில் நடந்த மாநாட்டில் சுட்டிக் காட்டப் பட்டது. செல்வந்தர்களிற்கும் வறியவர்களிற்குமிடையிலான இடை வெளி 1960ல் 30க்கு 1 என்ற புள்ளியிலிருந்து 1997ல் 74க்கு 1 என்ற புள்ளிவரையில் வீழ்ச்சிகண் டுள்ளது.

3) **தொழில் மற்றும் வருமானப் பாதுகாப்பு தொடர்பாக நிச்சயமற்ற தன்மை காணப்படல்.**

உலகமயமாக்கல் செல்வந்தர்கள் தொடர்பாக தொழில் மற்றும் வருமானம் பாதுகாப்பு என்பவற்றை அதிகரிக்கும் அதே வேளையில் வறியவர்களைப் பொறுத்தவரையில் தொழில், வருமானம் தொடர்பாக நிச்சமற்ற நிலைமையை ஏற்படுத் தியுள்ளது. தொழில் வருமான முன்னேற்றம், தன்னியக்கமுறை, நிறுவனங்கள் ஒன்றிணைதல் காரணமாக வேலையில்லாப் பிரச்சனையை ஏற்படுத்தி உள்ளன. 3ம் உலக நாடுகளைப் பொறுத்து பல்தேசிய கம்பனிகள் பாரிய உள்நாட்டு நிறுவனங்களை விழுங்கி ஏப்பம் விடக்கூடிய ஓர் நிலைமையை தாராளமயமாக்கல் தோற்றுவித்துள்ளது. வளர்முக நாடுகளைச் சேர்ந்த விவசாயிகள் வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து வரும் மானியப்படுத்தப்பட்ட மலி வான இறக்குமதிகள் அச்சுறுத்தலை யும் ஒரு புறத்தில் எதிர் கொண்டுள்ளனர்.

4) **குற்றச் செயல்களின் பெருக்கம்**

உலகமயமாக்கல் பாரியளவிலான குற்றச் செயல்களிற்கான கதவு களை திறந்துள்ளது. தொடர் பாடல், தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட பாரிய முன்னேற்றம், நிதிச்சந்தை, போதைவஸ்து ஆயுதக் கடத்தல், கறுப்புப்பணம் என்பவற்றின் தடங்கலற்ற பாய்ச்சலிற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

5) உண்ணாட்டு கலாச்சார சீரழிவு

இன்று கலாச்சார பாய்ச்சலானது வளர்ந்த நாடுகளிலிருந்து வளர்முக நாடுகளிற்கு ஒரு முகப் பாய்ச்சலா கவே இடம் பெற்று வருகின்றது. விபச்சாரம், எயிட்ஸ், ஹொலிவூட் திரைப்படங்கள் என்பவற்றின் தாக்க மாக காலங்காலமாக பேணிப் பாதுகாக்கப்பட்ட கலாச்சாரங்கள் அழியும் நிலையில் உள்ளன.

6) சூழல் மாசடைகின்றது

உலகமயமாக்கல் நுகர்வு உற்பத் தியை அதிகரிக்கச் செய்துள்ளது. இது சூழல் மாசடைதலிற்கு வழிகோலியுள்ளது. கனியநெய், கனிப்பொருட்கள் போன்ற புதுப்பிக்க முடியாத வளங்கள் அழிந்து போகின்றன. இரசாயன பீடை கொல்லிகளின் பாவனை அதிக ரிப்பால் நிலம், வளி மாசடை கின்றது. அத்துடன் பெருமள விற்கு காடழிப்பும் நடைபெற்று வருகின்றது. இது சூழலை சமநிலையற்ற தாக்குகின்றது.

7) பாதுகாப்பின்மையும் நிச்சயமற்ற நிலைமையும்

உலகமயமாக்கல் வளர்ச்சிய டைந்த நாடுகளிலும் ஒரு சில வளர்முக நாடுகளிலும் வளர்ச்சி-யையும் வருமான அதிகரிப்புக்க-ளையும் எடுத்து வந்த போதிலும் மனித பாதுகாப்பு தொடர்பாக பல புதிய அச்சுறுத்தல்களை ஏற்படுத் தியுள்ளது. அந்த வகையில் வேலை வாய்ப்பு, வருமானம் என்பவற்றை இழக்கக்கூடிய நிலை, தொழிற் சாலைகளிலும் வேலைத்தலங்க ளிலும் மனித உரிமை மீறல்கள் நிதிச் சந்தையின் உறுதியற்ற நிலை என்பவற்றினை ஏற்படுத்தியுள்ளது.

உதாரணம்:- இந்தியாவின் போபால் நச்சுவாயு கசிவு.

உலகமயமாக்கலானது இலங்கையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது என்பதனை நோக்குவோமாயின் இத்தகைய பொருளாதாரம் கடந்த 20 வருட காலமாக படிப்படியாக தாராளமய மாக்கப்பட்டு வந்துள்ளது. தீர்வைகள் வர்த்தக கட்டுப்பாடுகள் மற்றும் வரிகள் என்பன குறைக்கப்பட்டுள்ளன. விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. வர்த்தகம் தொடர்பான ஒழுங்குவிதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. அரசதுறையின் பங்கு குறைக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டுதலின் கீழ் வெளிநாட்டு மூலதனத்தை கவர்ந்தி ழுப்பதற்கென பெருந்தொகையான ஊக்குவிப்புக்களும் சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தனியார் முதலீட்டிற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டுக்குள் வெளிநாட்டு மூலதனம் வந்து சேர்வதற்கான சகல கதவுகளையும் அரசாங்கம் திறந்தே வைத்துள்ளது.

எனினும் இலங்கை உலக-மயமாக்கல் மூலம் நன்மையைப் பெற்றுள்ளதா? என்றால் இல்லை என்பதே விடையாக அமைகின்றது. கடந்த கால புள்ளிவிபரங்களைக் கொண்டும் வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டும் இதனை தெளிவாக வரையறுத்துக் கொள்ள முடியும்.

ஒரு நாட்டின் செல்வச்செழிப்பு நிலைமைக்கான சிறந்த குறிகாட்டி பொருளாதார வளர்ச்சியாகும். தாராள மயமாக்கல் இடம்பெற்று வந்த வருடங்

களின்போது இலங்கை ஓர் மிதமான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை மட்டுமே அனுபவித்து வந்துள்ளதை காணமுடிகின்றது.

1980-1998 வரையான 19 வருட காலத்தின்போது சராசரி பொருளாதார வளர்ச்சி 4.7% மட்டுமே காணப்படுகிறது. மாறாக ஆசிய வேங்கைகளான தென்கொரியா தாய்வான், கொங்கொங், சிங்கப்பூர், ஆசிய நாடுகளில் (1960-1996) 37 வருடங்களின்போது 9% பொருளாதார வளர்ச்சியை ஆண் டொன்றிற்கு காட்டியது.

இலங்கையில் பொருளாதார வளர்ச்சி மட்டம் மிகவும் மந்தமான முறையில் இடம் பெற்று வந்தமைக்கு மந்தமான முதலீட்டு மட்டம் உள்நாட்டு யுத்தம் காரணங்களாக கூறப்பட்டது.

மேலும் இலங்கையில் பண்ட ஏற்றுமதிகளில் மோசமான வீழ்ச்சியை உலகமயமாக்கல் ஏற்படுத்தியுள்ளது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவு 8 மடங்காக அதிகரித்த வேளையில் கடந்த 10 வருடங்களில் விவசாய ஏற்றுமதிகளின் அளவு 3 மடங்கால் மட்டுமே அதிகரித்துள்ளது.

மேலும் உள்நாட்டு விவசாயமும் பாதிப்படைந்துள்ளது. கடந்த 5 வருடகாலத்தின்போது பிரதானமாக உலகமயமாக்கல் மற்றும் சுதந்திர வர்த்தகம் என்பவற்றின் செயற்பாடு காரணமாக உள்நாட்டு விவசாயம் சீர்குலைந்துள்ளது. தீர்வை மற்றும் தீர்வை அல்லாத தடங்கல் என்பன குறைந்ததன் மூலம் அல்லது நீக்கியதன் மூலம் இறக்குமதிகள் தாராளமயப்படுத்தப்பட்டமையால் உள்நாட்டு விவசாயம் பாதிப்படைந்துள்ளது. 1998ல் பதிவு செய்யப்பட்ட நெல் உற்பத்தி 2692 மொற்றிக்தொன். இது 1994 இன் உற்பத்திக்கு அண்மித்ததாகவே காணப்பட்டது.

உள்நாட்டு கைத்தொழிலை பொறுத்து இறக்குமதி தாராளமயமாக்கல் கைத்தறி மற்றும் ஆடைக் கைத்தொழில், மின் உபகரணம், உலோக உற்பத்திகள், இரசாயனப் பொருட்கள் சைக்கிள் டயர்கள் மூக்குக் கண்ணாடிகள் பிரேம்கள், அச்சடிக்கும் காகிதம் மற்றும் கால்நடை உற்பத்திகள் போன்ற பெருந்தொகையான உள்நாட்டு கைத்தொழில்களைப் பாதித்துள்ளது. புடவை மீதான 35% தீர்வை அண்மையில் ஒழிக்கப்பட்டமை உள்நாட்டு புடவை கைத்தொழில் நாடுகளைப் பொறுத்து மரண அடியாக அமைந்தது. குளிர்சாதன பெட்டிகள் போன்ற மின்சார உபகரணங்களின் தங்கு தடையற்ற இறக்குமதிகளின் காரணமாக உள் நாட்டு குளிர்சாதனப் பெட்டி நிறுவனம் ஒன்று தனது தொழிற்சாலையை மூடியுள்ளது. குளியலறை சாதனங்கள் நீர் குழாய்கள் கழிவறை சாதனங்கள் என்பவை இப்போது நாட்டில் அனேகமாக உற்பத்தி செய்யப்படுவதில்லை.

எனவே இலங்கை என்றாலும் சரி அது போன்ற 3ம் உலக நாடுகள் என்றாலும் சரி வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போசாக்கின்மை மற்றும் தொழில்நுட்ப பின்னடைவு போன்ற முக்கியமான பல பிரச்சனைகள் இந்நாடுகளில் தீர்க்கப்படாமலேயே உள்ளது. இந்நிலையில் வளர்முக நாடுகள் உடனடியாக செல்வச் செழிப்பு,

மாற்றம் என்பவற்றை சாதித்துக் கொள்வது என்பது அரிதாகவே தென்படுகின்றன. உலகமயமாக்கலை முனைப்புடன் ஆதரித்து பேசி வருபவர்கள் வறிய நாடுகள் தொடர்பாக அவர்கள் முன்வைத்து வரும் அபிலாசையுடன் கூடிய இலக்குகள் சாதித்துக் கொள்ளப்படுவதனை உறுதி செய்தாலே ஒழிய இன்றைய இருண்ட யதார்த்த நிலைமைகள் இன்னும் பல வருடங்களிற்கு நீடிக்கவே வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

## References


✍பொருளியல் நோக்கு -99/2000

✍யுனெஸ்கோ கூரியர் - நவம்பர் 2000

✍World development Reports


## உலகமயமாக்கல் வறியவர்களுக்கு உதவியுள்ளதா?

உலகமயமாக்கல் வருமான சமமின்மையை அதிகரித்து வறுமையை ஏற்படுத்துவதாக பலர் விமர்சித்த போதும் உலகமயமாக்கலால் வறியவர்கள் நன்மையடைகிறார்கள். உலகமயமாக்கல் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கிறது. இவை வறியவர்களின் வருமானத்தை அதிகரிக்கின்றது என கூறப்படுகிறது. நிலைத்து நிற்கக் கூடிய வறுமை குறைப்பு பொருளாதார வளர்ச்சி இல்லாமல் சாத்தியப்பட மாட்டாது. (Without economic growth there can be no sustained poverty reduction) வறிய நாடுகளின் சுகாதாரத்தை மேம்படுத்தவும், எதிர்பார்க்கும் ஆயுள்காலத்தை அதிகரிக்கவும், எழுத்தறிவை அதிகரிக்கவும் உலகமயமாக்கலினால் வசதியளிக்கப்படும் தொழில் நுட்பங்கள் பங்களிப்பு செய்கின்றன.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சிசுமரணவீதம் 1970க்கு 1999க்கும் இடையில் 1000 ற்கு 59 ஆக இருந்து 50 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

சீனாவில் எதிர்பார்க்கும் ஆயுற்காலம் 1960க்கும் 1999க்கும் இடையில் இருமடங்காகப்பட்டுள்ளது. இந்தியாவில் இது 20 வருடங்களால் அதிகரித்துள்ளது. U.S.A இல் 70 இல் இருந்து 77 ஆக மட்டுமே அதிகரித்துள்ளது.

கடந்த 3,4 பத்தாண்டுகளில் சீனா, இந்தியா, கானா, கொறியா, மொச்சிக்கோ போன்ற நாடுகளின் முதியோர்களுக்கான கல்வியறிவின்மை வீதம் 30% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட மாற்றங்கள் மேற்குறித்த வறிய பொருளாதாரங்கள் உலகமயமாக்கல் என்ற நீரோட்டத்தில் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ தங்களை இணைக்காமல் இருந்தால் சாத்தியப்பட்டிருக்குமா?

உலகமயமாக்கல் வறியவர்களுக்கு நேரடியாக உதவி செய்யாவிட்டாலும் மறைமுகமாக பல வழிகளிலும் பொசிந்து செல்லல் கொள்கை ஊடாகவும் உதவுகின்றது.

மூலம்: உலக அபிவிருத்தி அறிக்கை 2002

# உலகமயமாக்கமும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியும்
# Globalization and sustainable development

*S. முத்தமிழ்ச்செல்வி*
*3ம் வருடம்*
*பொருளியல் சிறப்புகலை*

இன்றைய காலகட்டத்தில் உலக மயமாக்கமானது அனைவராலும் பேசப்படுகின்றது, சர்ச்சைக்குட்படுத்தப்படுகின்றதுமான ஓர் பதமாக காணப்படுகின்றது. உலக மயமாக்கம் என்பது முக்கியம், எனக் கருதப் படுகின்ற அதே வேளையில் இது பற்றிய கண்டன விமர்சனங்களும் இல்லாமல் இல்லை. உலகமய மாக்கம் நிலைத்து நிற்கும் அபிவிருத் தியில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பதனை இக் கட்டுரையில் நோக்குவோம்.

முதலில் உலகமயமாக்கல் என்றால் என்ன? நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்றால் என்ன? என்பவற்றிற்கான அடிப்படை விளக்கப் பாடுகளை நோக்குவோமாயின், உலகமயமாக்கல் என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டுள்ள தைக் காணலாம். தேசிய முன்னேற்றம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என்ற கருத்தியலில் இருந்து மாறுபட்டது. உலக ரீதியாக சிந்தித்து உள்ளூர் மட்டத்தில் செயற்படுதல் என்பதே உலகமய மாதல் ஆகும். உலகளாவிய சந்தையைப் பயன்படுத்தல், விருத்தி செய்தல் என்பது உலகமயமாதலின் அடிப்படையாகின்றது. 1990 களில் இருந்து இப்புதிய சிந்தனையும், செயற்பாடுகளும் நடைமுறைக்கு வந்துள்ளன. ஆனால் 1970களில் New classical Economists உடைய பொருளாதார உறுதிப்படுத்தலுக்கு சந்தைச்சக்திகளே காரணம் என்ற வாதத்துடனேயே உலகமயமாக்கற் சிந்தனை ஆரம்பமானது எனலாம். உலக தொடர்பு பற்றிய அடங்கல் அறிக்கை, உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) தோற்றம் என்பவற்றில் இருந்து உலகமயமாக்கல் முதன்மை பெறலாயிற்று எனலாம்.

அரசியல் அடிப்படையில் நோக்கும் போது உலகமயமாக்கல் என்பது ஜனநாயகம், மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள், பால் சமத்துவம், ஒழிவு மறைவற்ற ஆட்சி மற்றும் அரச சாரா அமைப்புக்கள் என்பவற்றின் பெருக்கம் என்ற வகையிலேயே கருதப்பட்டு வருகின்றது. இது தவிர உலக மயமாக்கல் சமூகரீதியில் உலக மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்வது, பொப்இசை, ஹொலிவூட் படங்கள், நீலநிறக் காற்சட்டைகள், திடீர் உணவகங்கள் மற்றும் நவீன வாழ்க்கை என்பவற்றின் பரவலாகவும் அது கருதப்படுகிறது.

அடுத்து நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பது எதிர்கால சந்ததி யினர் தமது சொந்த தேவைகளை

நிறைவேற்றிக் கொள்ளும் ஆற்ற லுக்கு பங்கம் ஏற்படாத வகையில் நிகழ்கால தேவைகளை நிறைவு செய்யும் அபிவிருத்தியினைக் குறிக்கும். அதாவது குறித்த ஒரு நாட்டின் அபிவிருத்தி வீதம் என்றும் ஒரே அளவாக இருக்க வேண்டும் என்றும், இன்றைய அபிவிருத்தி வீதத்தினை எதிர்கால சந்ததியினர் அதே அபிவிருத்தி வீதத்தினை தொடர்ந்து பேணுவதாகும்.

இதற்கேற்ற வகையில் முதலீடு கள், வளப்பயன்பாடு, நீதியான பங்கீட்டு முறைகள் இருத்தல் வேண்டும். அடுத்து வரும் காலப்பகு தியில் சனத்தொகை அதிகரிக்கக் கூடியதாக இருப்பதால் அதனை கருத்திற் கொண்டதாக நிலைத்து நிற்கும் அபிவிருத்திவீதம் அமைய வேண்டும். நாடுகளின் பொருளாதார, சமூக, அபிவிருத்தி குறிக்கோள்கள் நிலைபேறான தன்மையின் அடிப்படை யில் வரையறுக்கப்பட வேண்டும். இயற்கை வள ஆதாரத்தை நிர்வகித்து, பாதுகாத்து, நிகழ்கால, எதிர்கால மனித வளங்களை அடைத்து தொடர்ச்சியான தேவை களை நிறைவு செய்யும் வகையில் தொழில்நுட்ப, தரவு ரீதியான மாற்றங்களினூடாக வழி நடத்துதல் போன்ற நிலைத்து நிற்கும் அபிவிருத் திக்கு வழிவகுக்கின்றன. அத்தகைய அபிவிருத்தி தொழிநுட்ப ரீதியில் பொருத்தமானதாயும் சுற்றுச்சூழல் சீரழிக்காததாயும் பொருளாதார ரீதியில் சாத்தியமாகவும், சமூக ரீதியல் ஏற்கத்தக்கதாயும் இருந்து நிலம், நீர், தாவரம் மற்றும்மிருக மரபியல் வளங்கள் பேணிப் பாதுகாக்க கூடியதாக இருந்துவரல் அவசியமாகும்.

மாறாக குறித்த ஓர் தசாப்பத்தில் மட்டும் விரைவான அபிவிருத்தியும் பின்னர் அது வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கும் காணப்படின் அது நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை குறிப்பிடமாட்டாது. எதிர்கால சந்ததிக் குரிய வளங்களை நிகழ்கால சந்ததியினர் புதியகண்டு பிடிப்புக்களு டன்,தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வளங்களை சுரண்டுவதாக இருக்கக் கூடாது. இவ்வாறான எண்ணக்கருவை வெளிப்படுத்தக்கூடிய வகையில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி நடவடிக்கையை ஒழுங்குபடுத்தல் அவசியம்.

ஓர் நாட்டின் இயற்கை வளங்க-ளான வளி, நீர், நிலம், தாவரம் என்பன அனைத்து சந்ததியினர்க்கும் உரித்துடைய வளமாகும். முக்கிய மாக அபிவிருத்தித் திட்ட வளர்ச்சிக் குத் திட்டங்களை வகுப்போர் சூழற் கணக்குகளை கவனத்திற் கொண்டு கொள்ளையை தீர்மானம் மேற் கொள்ள வேண்டும்.

சுற்று சூழல் தொடர்பான கணக்கீட்டின் எல்லா வகையான சொத்துக்களும் அடங்கும். உற்பத்தி முதலீடுகளான இயந்திரம், காரணி கள், உயிரியல் மட்டுமன்றி மனித முதலீடுகளான அறிவு, ஆற்றல், திறமை என்பவையும் சூழல் முதலீடுகளான காடுகள், நீர், நிலம் என்பவற்றை உள்ளடக்கியதாயி ருக்கும்.

எனவே உலகமயமாக்கம் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு எவ்வளவு தூரம் பங்காற்றுவதா யுள்ளது. அல்லது பாதகமாயுள்ளது என்பதை நோக்கினால், முதலில்

பங்காற்றுகிறது என்பது பற்றிப் பார்ப்போம்.

பல்தேசிய நிறுவனங்களுக்கு அவை எடுத்து வரும் மூலதனம், தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்தல் நுட்பங்கள் என்பவற்றிற்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டு வருகிறது. உண்மையிலேயே பல வளர்முக நாடுகள் பல்தேசிய நிறுவனங்களை கவர்ந்திழுப்பதற்கு உசிதமான ஓர் சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு தாராளமயமாக்கலிலும், ஒழுங்குவிதி தயாரிப்பிலும், தனியார் மயமாக்கலும் ஈடுபட்டு வருகின்றன. அது மட்டுமன்றி நலன்புரி செலவுகளையும், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையையும் அவை குறைத்து வருகின்றன. இந்நடவடிக்கைகள் வெளிநாட்டு முதலீட்டினை, குறிப்பாக ஏற்றுமதி அடிப்படையிலான கைத்தொழில்களை அதிகரிக்கும் என்றும் ஏற்றுமதிகளை பெருக்கும் என்றும் பொதுவாக நீண்டகால நோக்கில் பொருளாதார வளர்ச்சியை எடுத்துவரும் என்றும் மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும் என்றும்கருதப்படுகிறது. இதனால் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியானது ஏற்படுத்தப்படுகிறது எனலாம்.

உலகமயமாக்கலின் கீழ் உலகின் புதிய நாடுகளைச் சந்தைகளாகப் பெறும்போது ஏற்கனவே ஏற்றுமதி செய்பவற்றை விட புதிதாகப் பல ஏற்றுமதிகளை மேற்கொள்ள முடியும். அதன் காரணமாக ஏற்றுமதித் துறைகள் மாத்திரம் விரிவடைவதில்லை. மாறாக புதிய உற்பத்தித் துறைகளும் வளர்ச்சியடையும். இதனால் புதிய தொழில் வாய்ப்புக்களும் வருவாய்களும் கூட முடியும். இதனால் அபிவிருத்தி ஏற்பட வழி வகுக்கிறது. அத்தோடு மூலதன நகர்வுகள் தொழில்நுட்ப இடமாற்றங்கள் ஊக்குவிக்கக்கூடியன. மேலும் உலகமயமாதல் தொழில்நுட்ப இடமாற்றத்திற்கு தடையாயுள்ளன. மேலும் உலகமயமாதல் தொழிநுட்ப இடமாற்றத்திற்கு தடையாயுள்ள எல்லா நிலைமைகளையும் படிப்படியாக அகற்றும்படி வலியுறுத்தி வருகின்றது. இதனால் வளர்முக நாடுகள் தமது ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு உற்பத்தித்துறைகளின் போட்டியிடும் திறன்களை அதிகரிக்கக் கூடிய வகையில் தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஏற்படுத்தல் சாத்தியமாகிறது. இதனால் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு வழி வகுக்கிறது.

உலகமயமாக்கல் நிலையான அபிவிருத்திக்கு பாதகமென நோக்கினால் உலக மயமாக்கல் புதிய தொழில்நுட்பம், வெளிநாட்டு முதலீடு, வர்த்தக விஸ்தரிப்பு ஊடகங்கள் மற்றும் இணையத் தொடர்பு என்பவற்றுக்கு ஊடாக மனித மேம்பாட்டிற்கான பெருந்தொகையான வாய்ப்புகளை வழங்கி வருவதுடன் வறுமையை ஒழித்து விழுமியங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் ஓர் சமூகத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி வர்த்தக அக்கறைகளால் பின்னுக்குத் தள்ளப்படுகின்றது. போட்டிச் சந்தைகள் செயல்திறனை சாதித்துக் கொள்ள முடியும். ஆனால் அவை சமத்துவத்தை எடுத்து வரும் எனக்கூற முடியாது. உலகமயமாக்கல் சந்தை விரிவாக்கத்திலே செல்வாக்கினை கொண்டிருக்கும் வரையில் மானிட அபிவிருத்தியின் மீது அது நெருக்கடிகளை எடுத்து வரும்

என்பதில் சந்தேகமில்லை.

இன்று உலகமயமாக்கல் செயன் முறை தலைதெறிக்கும் வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் உலகமயமாக்கத்தின் விளைவாக பெருகி வரும் வாய்ப்புக்களை அனைத்துத் தரப்பு மக்களும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு நிலமை நிலவிவரவில்லை. இச் செயன்முறையானது அதிகாரத்தை ஒரு சிலரின் கைகளில் ஒன்று குவியச் செய்துள்ளது. வறிய நாடுகளும், வறிய மக்களும் புறம் ஒதுக்கப்பட்டு வருகின்றனர்.

பல்தேசிய நிறுவனங்களுக்கு அவை எடுத்துவரும் மூலதனம், தொழிநுட்பம், மற்றும் சந்தைப்படுத்தல் நுட்பங்கள் என்பவற்றுக்கு செங்கம்மள வரவேற்பு அளிக்கப்-பட்டு வந்தாலும் உலகமயமாக்கலின் போது அதிகாரம் தேசிய அரசுகள் மற்றும் பல்தேசிய நிறுவனங்களின் கைகளுக்கும், சர்வதேச நாணய நிதியம், மற்றும் உலக வர்த்தக நிறுவனம் போன்ற அமைப்புகளின் கைகளுக்கும் நகர்ந்து செல்வதனால் அது தேசிய பொருளாதார இறைமையை அதிகரித்துச் சென்று விடுகின்றது. சந்தையின் செயற்திறனானது அதன் முக்கிய குறியாயிருந்து வருவதனால்சந்தை செழித்தோங்குவதற்கு உசிதமான ஓர் சூழ்நிலையை உருவாக்குவதிலேயே அது முழுக்க முழுக்க கவனம் செலுத்துகிறது. மக்கள் நீண்ட ஆரோக்கியமான வாழ்க்கையை நடாத்த வேண்டும் என்பதில் அது அக்கறை கொண்டிருக்கவில்லை இதனால் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு பாதகமே ஏற்படும்.

உலகமயமாக்கலில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் ஏற்றத்தாழ்வற்ற முறையில் வழங்கப்படாமையின் விளைவாக ஏற்றத்தாழ்வான பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிறது. ஒரு சில நாடுகள் உயர்வளர்ச்சி வீதங்களை சாதித்து கொண்டிருக்கும் அதேவேளையில் வேறுசில நாடுகள் தாழ்ந்த அல்லது எதிர்க்கணிய வளர்ச்சியை அடைந்திருந்தன. உலகமயமாக்கல் வளர்ந்த, வளர்முக நாடுகளில் வருமான அதிகரிப்பை எடுத்து வந்தள்ளது எனினும் அதே வேளை மனித பாதுகாப்பு தொடர்பான புதிய அச்சுறுத்தல்களை உருவாக்கியுள்ளது.

பெரும்பாலான வளர்முக நாடுகளில் வாழ்ந்து வரும் மக்களிடையே ஒருவிதமான நிச்சயமற்ற நிலையையும் தோற்றுவித்து தானியக்கமுறை, ஆட்குறைப்பு மற்றும் கட்டற்ற வர்த்தகம் என்பவற்றின் காரணமாக வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் என்பவற்றை இழக்கக்கூடிய நிலை தொழிற்சாலைகளிலும், வேலைத் தலங்களிலும் மனித உரிமை மீறல்கள் நிச்சயமற்ற பணப்பாய்ச்சல்களால் உருவாக்கப்படும் நிலச்சந்தையின் உறுதியற்ற நிலை, போதைப் பொருட்கள், ஆயுதங்கள், பெண்கள், பிள்ளைகள் மற்றும் கறுப்புப்பணம் என்பவற்றை சட்டவிரோதமாக கையாளும் கும்பல்களின் நடவடிக்கை காரணமாக சமூகத்தின் குற்றச் செயல்கள் பெருகல் பெருகிவரும் சுற்றுலாத்துறை மற்றும் குடியகல்வு என்பவற்றில் இருந்து தோன்றக் கூடிய சுகாதார சீர்கேடுகள், மேலைத்தேய பொருள் சார்ந்த சலாச்சாரம் மற்றும் அமெரிக்க வாழ்க்கைப் பணி என்பனவற்றில் ஆக்கிரமிப்பு என்பன

காரணமாக அபிவிருத்தி அழிவுறுகின்றது. இதனால் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி பாதிப்புறுகிறது.

உலகமயமாக்கல் ஒருவகையில் கலாச்சாரம், கருத்துக்கள் மற்றும் அறிவு என்பவற்றை உலகின் அனைத்து மூலைகளில் இருந்தும் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் அவர்களுடைய வாழ்க்கையைத் திறந்து விடுகின்றது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் கலாச்சாரத்தின் பாய்ச்சல் ஒரு வழிப்பாதையிலேயே, அதாவது வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து வளர்முக நாடுகளை நோக்கியதாகவே இடம் பெற்று வருவதனைக் காணமுடிகிறது. இந்நிலை கலாச்சாரத்தின் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு உகந்ததல்ல இத்தகைய விதத்திலான மேலைய கலாச்சாரத்தின் முற்றுகை மக்களின் கலாச்சாரத் தனித்தன்மையை சீரழித்து அவர்கள் தமது சொந்த கலாச்சார அடையாளங்களை இழக்கக் கூடிய ஓர் அச்சுறுத்தலை எடுத்து வந்துள்ளமையை காணலாம்.

உலக மயமாக்கலின் கீழ் சந்தைகள் புதிய நாடுகளையும், புதிய பிரதேசங்களையும் நோக்கி நகர்ந்து செல்வதனாலும், நுகர்வுவாத சமுதாயம் உலகெங்கும் பரவுவதாலும் நுகர்வு பெருக்கத்தின் காரணமாக சுற்றுச்சூழலின் மீது தாக்கங்கள் தோன்றுகின்றன. சந்தைகள் பொதுவாக சுற்றுசூழலுக்கு மதிப்பளிப்பதில்லை. இது மறு புறத்தில் பெற்றோலியம், ஏனைய கனிப்பொருட்கள் போன்ற புதுப்பிக்கமுடியாத வளங்களின் இழிவுக்கு வழிகோலுகின்றது. அது மட்மன்றி மீள்வளம், காடுகள் போன்ற நில, நீர் வளங்கள் இதன் விளைவாக அழிகின்றன. பெருகிவரும் கேள்வியை நிறைவு செய்து வைக்கும் விதத்தில் விவசாய மண்டங்களின் விரைவான சாகுபடி இரசாயன உரவகை மற்றும் பீடை கொல்லிகள் என்வற்றின் பரவலான உபயோகத்துக்கு வழிவகுக்கின்றது. இவை மண் மற்றும் நீர் என்பவற்றை மாசுபடுத்துகிறது. இதனால் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை பாதிக்கிறது.

உலகமயமாக்கல் மற்றும் நுகர்வுவாத சமூகம் என்பவற்றின் தங்கு தடையற்ற பெருக்கம் காரணமாக உலகின் நீர் வளத்துக்கே மிக மோசமான அச்சுறுத்தல் ஏற்பட்டு வருகின்றது. நீர்தட்டுப்பாடு, ஆரோக்கியம், உணவுப்பாதுகாப்பு மற்றும் உயிரினவியல் தொகுப்புகள் என்பவை எதிர்கொண்டு வரும் மிகப்பயங்கரமான தனி ஒரு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது.

உலகமயமாக்கல் மற்றும் தாராள மயமாக்கல் என்பவற்றை நோக்கிய புதிய பாய்ச்சல் ஆரம்பத்தில் ஒரு சில நல்ல பெறுபேறுகளை எடுத்து வந்தது. தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றின் ஏற்பட்டிருந்த முன்னேற்றங்களுடன் இணைந்த விதத்தில் உலகவர்த்தகம் மற்றும்தனியார் மூலதனம் பாய்ச்சல் என்பன முன் எப்போதும் இருந்திராத மட்டங்களை எட்டின. இந்த வகையில் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு பங்காற்றுகிறது.

எது எவ்வாறெனினும் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு உலகமயமாக்கலது பங்காற்றினாலும் உலக மயமாக்கல் பற்றிய பலவிமர்சனங்கள் நிலவுவதையும் மற்றும் விமர்சனங்

களுடன் கூடிய எதிர்ப்புகளையும் காணலாம். இதற்கு அண்மையில் ரொரன்ரோவில் இடம் பெற்ற போராட்டமும், மலேஷியப் பிரதமரின் தொடர்ச்சியான கண்டங்களும் எடுத்துக் காட்டாகும்.

இந்த வகையில் பார்க்கும்போது உலகமயமாக்கல் ஆனது நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு பங்காற்று-கிறது என்றோ அல்லது நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை பாதிக்கிறது என்றோ தனிப்பட்ட முறையில் கூறமுடியாது. ஆனால் வளங்கள் மற்றும் எதிர்கால சந்ததியின் உரிமைகள், உடமைகள் என்பன பாதிக்கப்படாத வகையிலான ஓர் உலகமயமாக்கல் ஆனது தேவை அல்லது அவசியம் எனக் கூறலாம்.

## References


✍யாழ்ப்பாணப் புவியியலாளன் இதழ் -9 (1992-1993)

✍மார்க்கம் 1993 இதழ் 1 மலர் 04

✍பொருளியல் நோக்கு - 2000 April.


Of course there must be differences between developing countries...(but) to maintain that no common ground exists is to make any discussion out side or across the frontiers of a single country meaningless.

Julian west, oxford university

The third world is important because of the massiveness of its poverty

Padma Desai, Colombia university

What is the meaning of growth if it is not translated into the lives of people?

United nations, Human Development Report 1995.

# உலகமயமாக்கலும் சிறிய நாடுகளும் Globalization and Small countries

N. விபுலன்
உதவி விரிவுரையாளர்
பொருளியல் துறை

20ம் நூற்றாண்டு பூர்த்தியாகி இருபத்தியோராம் நூற்றாண்டினை நோக்கி நகர்கின்றது. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக உலக பொருளாதாரத்தில் இடம்பெற்று வந்த முக்கியமான மாற்றங்களை கவனத்தில் கொண்டு இம்மாற்றம் உலக மயமாக்கலின் முழுமைக்கு உதவிய தன்மையினையும், இதனால் சிறிய நாடுகளின் வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் செல்வாக்கு செலுத்துகின்றது என்ற அடிப்படையிலும் இக்கட்டுரை நோக்கப் படுகின்றது.

## உலகபொருளாதார பின்னணியும், உலகமயமாக்கலும்

1900 இல் 160 கோடியாக இருந்த உலக சனத்தொகை 2000 இன் முடிவில் 630 கோடியாக அதாவது 470 கோடியாக அதிகரித்துள்ளது. குடித்தொகையின் வருடாந்த அதிகரிப்பு வீதம் 1.4 சதவீதமாக இருந்தது. கடந்த நூறு வருட காலத்தில் உலக உற்பத்தியின் வளர்ச்சி 1900ல் 100 என்ற புள்ளியில் இருந்து 2000 இல் 1900 புள்ளியாக 19 மடங்கினால் அதிகரித் துள்ளன. சராசரி வருடாந்த உற்பத்தி வளர்ச்சி 3 சதவீதமாகும். எனவே கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தின் போது உலக உற்பத்தி வளர்ச்சி 3%மும், உலக குடித்தொகை வளர்ச்சி 1.4%திலும் பார்க்க உயர்வாக உள்ளன. உலக உற்பத்தியானது 19 மடங்கு களாக அதிகரித்தபோதிலும் அதன் வளர்ச்சி உலகின் எல்லா நாடுகளினது ஒரேசீரான வீதத்தினை பிரதிபலிக்க வில்லை. வருமானத்தின் அடிப்படையில் உலக நாடுகளின் தொகுதிகளாக (கொள்வனவு சக்தியுடன் சீராக்கம் செய்யப்பட்ட தலா நபர் வருமான மட்டம்) வருமாறு.

| | 1900 (US $) | 2000 (US $) |
|---|---|---|
| குறைவருமானத் தொகுதி நாடுகள் | 3 மடங்கிலும் குறைவு | 1700 |
| நடுத்தர வருமான தொகுதி நாடுகள் | 400 | 3800 |
| நடுத்தர உயர்வருமான தொகுதி நாடுகள் | 500 | 6000 |
| உயர்வருமானத் தொகுதி நாடுகள் | 3000 | 18000 |

உலகின் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரங்களில் ஏற்றத்தாழ்வான விதத்தில் வளர்ச்சி ஏற்பட்டு வந்திருப்பதனை இப் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இன்றைய உலகின் மொத்த குடித்தொகையில் 1/5 பங்கினர் அதாவது 120 கோடி பேர் 1 அமெரிக்க டொலருக்கும் குறைவான வருமானத்துடனே வாழ்கின்றனர். இந்த வறிய மக்களில் 44 சதவீதத்தினர் இலங்கையும் உள்ளிட்ட தென்னாசியா பிராந்தியத்திலே வாழ்ந்து வருகின்றனர். இதனடிப்படையில் உலக வருமான ஏற்றத்தாழ்வு மிகவும் மோசமான நிலையில் நகர்ந்து சென்றிருப்பதனை அவதானிக்க முடிகிறது. 2000ம் ஆண்டளவில் உலகின் வறுமை வீதம் அதிகரித்திருப்பதனை 2000-2001 World Development Report "வறுமையின் மீது தாக்குதல் தொடுத்தல்" என்ற தொனிப் பொருளைக் கொண்டுள்ளது.

2000ல் வளர்முக நாடுகளின் வறுமை தொடர்பான தரவுகள் பின்வருமாறு காணப்படுகிறது.

ஒவ்வொரு 100 பிள்ளைகளிலும் 5 பேர் தமது ஐந்தாவது வயதுவரையில் உயிர்வாழ்வதில்லை (வளர்ச்சியடைந்த நாடுகளில் இதன் அளவு 1 ஆகும்) 5 வயதுக்கு குறைந்த 50 சதவீதத்தினர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளர். (வளர்ச்சியடைந்த நாடுகளில் 5 சதவீதம்). சிம்பாவே, பொஸ்ட்வானா போன்ற ஆபிரிக்க நாடுகளில் வயது வந்தவர்களில் சுமார் 25%னர் HIV/AIDS நோயினால் பீடிக்கப் பட்டுள்ளர்.

## உலகப் பொருளாதார படிமுறையும் உலகமயமாக்கலின் வளர்ச்சியும்

உலகப்பொருளாதார பின்னணியை வைத்து 1900-2000 காலப்பகுதியின் பொருளாதாரத்தை நான்கு கட்டங்களாக நோக்கிக் கொள்ளலாம்.

முதலாம் கட்டம் (1900-1913) 16ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட கிழக்கிந்திய வர்த்தக கம்பனி போன்ற வர்த்தக ஸ்தாபனங்களுடன் ஆரம்பித்தன. இக்காலத்தில் தங்கம் தர நிர்ணயம் நிலவிவந்ததுடன். ஒப்பீட்டில் தடையற்ற வர்த்தகம் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. ஏகாதிபத்தியம், காலணித்துவம், என்பவற்றின் கீழ் புதிய உத்வேகத்தினை கொண்டிருந்த காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் உலகப்பொருளாதார வளர்ச்சியில் சராசரியாக 1.5 சதவீதமாகும்.

இரண்டாம் கட்டம் (1913-1950) இரு உலகமகா யுத்தங்களை கொண்ட காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் உலக வர்த்தகங்களை மேற்கொள்வதில் பல இடையூறுகளைக் கொண்ட மந்தகாலமாகும். உலக பொருளாதார வளர்ச்சியில் சராசரியாக 0.7 சதவீதத்தினைக் கொண்டிருந்தது.

மூன்றாவது கட்டம் (1950-1973) உலக யுத்தங்களுக்கு பின்னால் பல வளர்ச்சிக் கோட்பாடுகள் தோற்றம் பெற்றன. உலகில் வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளின் பொற்காலமாக இருந்து வந்தன. 1971இல் நிலையான செலாவணி விகித்தைக்

கொண்ட பிரிட்டன்வூட்ஸ் அமைப்பின் வீழ்ச்சி அடைந்த காலப்பகுதியாகும். இக்கால காட்டத்தில் உலக பொருளாதார வளர்ச்சியில் சராசரியாக 2.8 சதவீதமாக இருந்தது.

நான்காவது கட்டம் (1973-இன்றுவரை) உலகமயமாதல் காலகட்டமாகும். கட்டற்றவர்த்தகம், திறந்த பொருளாதாரம், சுதந்திரசந்தை நடவடிக்கை வலுப்பெறுகின்ற காலமாகும். 1990களில் சோவியத் ஒன்றியத்தின் சோசலிச பொருளாதார அமைப்புக்களில் காணப்பட்ட உடைவுகளினால் ஏற்பட்ட வீழ்ச்சியானது உலகமயமாக்கல் செயன் முறையினை மேலும் வலுவடையச் செய்கின்றது. இக்காலப்பகுதியில் உலக பொருளாதாரத்தின் சராசரி வளர்ச்சி 1.3 சதவீதமாகும்.

முன்னைய உலகமயமாக்-கலில் இருந்து பல்வேறுபட்ட வழிகளிலான பரிணாம வளர்ச்சியினைக் கொண்டு இன்றைய உலகமயமாதல் விளங்குகின்றது. அதாவது அனைத்து நாடுகளினது வளர்ந்துவரும் பொருளாதார ஒருங்கிணைப்பாகவும், தேசிய சந்தைகள் ஒரு உலகளாவிய சந்தையில் ஒருங்கிணையும் ஒரு செயன்முறையாகவும் உள்ளது. உற்பத்தி, வர்த்தகம், சர்வதேச மூலதனம், தொழில்நுட்பம், பணம் போன்றன பொருளாதாரத்தின் தேசிய எல்லைகளைத் தாண்டி வியாபித்துச் செல்லும் போது சர்வதேச மயமாக்கப்படுகின்றன.

உலகமயமாக்கல் சக்திகள் கைத்தொழில் நாடுகளில் இருந்தே தோன்றிவருகின்றன. சிறிய நாடுகளை தம்மால் வடிவமைக்கப்படும் உலகளாவிய அமைப்பிற்குள் உள்வாங்கிக் கொள்வதே இச்சக்திகளின் நோக்கமாகும். இது அனேகமாக மேலைத்தேச மூலதனம், தொழில்நுட்பம், கலாச்சாரம், எண்ணப்போக்குகள், வாழ்க்கைப் பணிகள் என்பவற்றை வளர்முக சிறிய நாடுகளுக்குள் ஊடுருவச் செய்கின்றன. இது உலகநாடுகளின் பொருளாதார கலாச்சார, அரசியல் மற்றும் சித்தாந்தக் கொள்கைகளை ஒருமுகப்படுத்தும் அல்லது மேலைத்தேசமயமாக்கும் ஒரு செயன்முறையாக உள்ளன.

## சிறிய நாடுகள் மீது நான்காவது கட்டத்தில் உருவான உலகமயமாக்கலின் விளைவுகள்

பெரும்பாலான சிறிய நாடுகள் அரசின் வழிகாட்டுதல்களின் மூலம் பொருளாதார செயற்பாடுகளை திட்டமிட்டு பின்பற்றி வருகின்றன. இந் நாடுகளில் தனியார்துறை பலவீனமானதாக இருந்து வருவதுடன் உட்கட்டுமான வசதிகள், கைத்தொழில் ஆற்றல், உற்பத்தித்திறன்கள் குறைவானதாக உள்ளது. முதன்நிலைப் பொருட்களை ஏற்றுமதி வருமான மூலமாகவும், தொழிற்சாலைத் தயாரிப்புக்களான ஏற்றுமதி வாய்ப்புக்கள் மிகக் குறைந்த மட்டத்தில் இடம் பெறுகின்றன. இதனால் சந்தைக்கான வாய்ப்புக்கள் ஸ்திரமற்ற நிலை காணப்படுகின்றது. இதனால் சிறிய நாடுகள் வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளின் ஆதரவை வேண்டி நிற்கின்றன.

தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் செயன்முறையால் பெரும்பாலான சிறிய நாடுகள்

எத்தகைய அனுகூலங்களையும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. உலக வருமானப் பகிர்வில் செல்வந்த நாடுகளுக்கு சாதகமானதாக அதிகரிப்ப துடன் வளர்முக சிறிய நாடுகளுக் குள்ளேயும், சிறிய நாடுகளுக்கிடை யேயும் வருமான ஏற்றத்தாழ்வு விரிவடைந்து வருகின்றது. இதனால் சிறிய நாடுகள் சமூக, அரசியல், பொருளாதார பிரச்சனைகள் எழுச்சி யடைந்தன. கிழக்காசியா, தென்கிழக் காசிய நாடுகளில் பரந்த மட்டத்திலான சமூக பொருளாதாரம் மற்றும் அரசியல் பின் விளைவுகளை எதிர்நோக்கின.

வளர்ச்சியடைந்த நாடுகளுக் கும், புதிய தொழில் மயமாகிவரும் சில வளர்முக நாடுகளுக்கும் வாய்ப்புக்கள் மூலம் நன்மை பெற்றன. ஆனால் பெரும்பாலான சிறிய நாடுகள் நியாய மான பகிர்வுக்கான வாய்ப்புக்களில் தோல்வியடைந்தன. பெரும்பாலான சிறிய நாடுகள் உலகமயமாக்கல் சக்தியினால் அந்நாட்டு சமூகப்பிரிவினர் கள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டு வருகின்றனர்.

உலக குடித்தொகையில் கைத்தொழில் நாடுகளில் வாழ்ந்து வரும் உயர்வருமானம் பெறும் 1/5 வீத்தினர் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 86%யும், உலக ஏற்றுமதிச் சந்தையில் 82% யும் உலக வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 68%யும், உலக மொத்தத் தொலைபேசி இணைப்புக் களில் 74%யும் இணையத்தின் வசதிகளை பயன்படுத்துவதில் 88%யும் அனுபவித்து வருகின்றனர்.

உலகின் மிக வறிய நாடுகளில் வாழ்ந்துவரும் வாழ்க்கைத் தரத்தில் மிகத்தாழ்ந்த மட்டத்தில் உள்ள 1/5 வீதத்தினர் வருமானம், ஏற்றுமதிகள், தொலைபேசி இணைப்புக்கள், நேரடி முதலீடுகள் போன்ற ஒவ்வொரு துறைக ளிலும் 1% மட்டுமே அனுபவிக்கின்றர்.

உலக வருமானம் பெறும் மக்களுக்கும், வறிய நாடுகளில் உள்ள மக்களுக்கும் இடைவெளி மேலும் விரிவடைந்து செல்கின்றன. 1960ல் 30:1 என்ற புள்ளியில் இருந்து 1997ல் 74:1 என்ற வகையில் வீழ்ச்சி கண்டுள்ளன. கடந்த 25 வருடகாலத்தில் குறை வளர்ச்சி நாடுகளில் தலைக்குரிய வருமானம் மெய்நியதிகளில் 272 USA $ இருந்து 233 USA $ ஆக வீழ்ச்சிய டைந்துள்ளன. எனவே உலகமயமாக்க லின் பலன்கள் சிறிய நாடுகளிலும் பார்க்க கைத்தொழில் மயநாடுகளுக்கு கிட்டியிருப்பதனை காணலாம்.

15ம், 16ம் நூற்றாண்டில் முதலாளித்துவத்தின் எழுச்சி, கடல் கடந்த விஸ்தரிப்பு என்பவற்றை அடுத்து பட்டயம் பெற்ற பல கம்பனிகள் உருவாக்கம் பெற்றன. அவை தேசியப் பொருளாதாரங்களை சர்வதேச ரீதியில் ஒருங்கிணைக்கும் பணியை மேற் கொண்டன. இன்று அந்தச் செயற் பாட்டை பல்தேசியக் கம்பனிகள் செய்து வருகின்றன. இந்நிறுவனங்களால் எடுத்து வரும் மூலதனம், தொழில் நுட்பம், சந்தைப்படுத்தல் நுட்பங்களுக்கு பல சிறிய நாடுகள் செங்கம்பள வரவேற்பு செய்து வருகின்றன. பல்தேசியக் கம்பனிகள் சிறிய நாடுகளை கவர்ந்திழுக்கும் வகையில் தாராளமயமாக்கல், தனியார் மயமாக்

கல், ஒருங்குவிதி கட்டுப்பாடுகளை தளர்த்தல் என்பவற்றில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைக்கு IMF ஊக்கத்தினை வழங்கி வரு கின்றது. (கிழக்காசிய நிதி நெருக் கடிக்கு உதவி வழங்குவதற்கு நிபந்தனைவிதித்தல்).

உலகமயமாக்கல் புதிய தொழில்நுட்பம், வெளிநாட்டு முதலீடு, வர்த்தக விஸ்தரிப்பு, ஊடகங்கள் மற்றும் இணையத் தொடர்பு என்பவற்றுக்கு ஊடாக மனித மேம்பாட்டிற்கு பெருந் தொகையான வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன.

சந்தையின் 300 முன்னணி பல்தேசிய கம்பனிகள் மொத்த வெளிநாட்டு முதலீட்டில் 70% திற்கு பொறுப்பாகவும், உலகின் உற்பத்திசார் சொத்துக்களின் இருப்பில் சுமார் 25% தினை தமது கட்டுப்பாட்டிலும் வைத்துச் செயற்படுகின்றன. பல்தேசிய கம்பனிகள் வர்த்தகத்துறையிலும், சேவைத்துறை யிலும் ஈடுபட்டு சர்வவியபமாக வளர்ந்து வருகின்றன.

சிறிய நாடுகளில் இயங்கி வரும் பாரிய இலாபகரமான பல நிறுவனங் களை பல்தேசிய நிறுவனங்கள் நசுக்கியும், விழுங்கியும் வருகின்றன. உதாரணமாக இந்தியா, இலங்கை, கிழக்காசிய நாடுகளில் பல்தேசிய கம்பனி தமது மேலாதிக்கத்தை பரவச்செய்கின்றன.

உலகமயமாக்கல் செயன் முறையால் வர்த்தகம், முதலீடுகள், தேசிய அரசாங்கங்களின் கையில் இருந்து பல்தேசிய நிறுவனங்களின் கைகளுக்கும், சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக நிறுவனம் போன்ற அமைப்புக்களின் கைகளுக்கும் நகர்ந்து செல்வதால் அவை சிறிய நாடுகளின் தேசிய பொருளாதார இறைமையைக் குறைத்துவிடச் செய் கின்றன. உதாணமாக இலங்கையில் இயங்கிவரும் பெரும்பாலான ஆடைத் தொழிற்சாலைகள் பல்தேசிய நிறுவ னங்களின் வழங்குனர்களாக அல்லது உப ஒப்பந்தக்காரர்களாக இயங்கி வரு கின்றன. இவற்றினால் சுதேச நாடுக ளின் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்து இறக்குமதி கைத்தொழில் வளர்ச்சிய டைய வாய்ப்பளிக்கின்றன.

உலகமயமாக்கல் செயற் பாட்டினால் உலக வர்த்தகம், முதலீ டுகள் என்பன பெரிய நாடுகளிலும், சிறிய நாடுகளிலும் விஸ்தரிக்கப்ப டுகின்றன. இதனால் புதிய முதலீட்டு தொழில் அமைப்புக்கள், தொழில் நுட்ப வசதிகள், கீழ்க்கட்டுமான வசதிகள், வேலைவாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன. இங்கு முதலீடுகள், வர்த்தக நடவடிக்கைகள் சரியான பங்கீட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதில்லை. இதனால் உலக ரீதியில் பொருளாதார, வருமான ஏற்றத் தாழ்வினை நாடுகள் பெற்று வருகின் றன. இவை சிறிய நாடுகளில் பெருமளவு தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

1980-1996 காலப்பகுதியின்- போது பொருட்கள், சேவைகளின் ஏற்றுமதியில் சராசரி வருமான வளர்ச்சி யில் 15 நாடுகளில் மட்டும் 15%ற்கு மேற்பட்டதாகவும், 43 நாடுகளில் 4% - 10% ற்கும் இடைப்பட்டதாகவும், 55 நாடுகளில் 5%ற்கு குறைவாகவும் பெற்று வந்தன.

1965-1996 காலப்பகுதியில் சராசரி வருடாந்த ஏற்றுமதி வளர்ச்சியில் கிழக்காசியா 6.2% வும், இலத்தீன் அமெரிக்கா 5.2% மாகவும், ஆபிரிக்கா 2.1% மாகவும்இருந்தன. உலக ஏற்றுமதியில் ஆபிரிக்காவின் பங்கு வீழ்ச்சி கண்டுள்ளது. 1996ல் வளர்முக நாடுகளில் ஒருசில நாடுகள் ஏற்றுமதி களில் சுமார் 80% மேற்பட்ட அளவினை மேற்கொண்டு வந்தன. இந்நாடுகளே உலகமயமாக்கலின் பெருமளவு பயன் களைப் பெற்று வருகின்றன.

1996ல் மட்டும் வளர்முகநாடு களில் 95%மான நேரடி முதலீடுகளை 2ம் நாடுகளும், மிகுதி 5%மான முதலீடுகளை 140 நாடுகளும் பெற்றன. இதில் தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து கிழக்காசிய நாடுகளே பெருமளவு முதலீடுகளை ஈர்த்துக் கொண்டுள்ளன.

உலகமயமாக்கல் விளைவு-களால் 1997ல் சுமார் 40000 கோடி US $ வெளிநாட்டு மொத்த முதலீடுகளில் 37% வளர்முக நாடுகளுக்கும், 58% வளர்ந்த நாடுகளுக்கும் சென்றுள்ளது. வளர்முக நாடுகளில் ஆசியா 22% மும், இலத்தீன் அமெரிக்கா 14%மும், ஆபிரிக்கா 1%மும் பெற்றுக் கொண்டன. 1990-1997 ஆண்டு காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சலில் மலேசியா 4000 கோடி US$ உம், இந்தோனேசியா 2600 கோடி US $ ரும், தாய்லாந்து 1700 கோடி US $ ரும், சீனா 20000 கோடி US $ ரும், இந்தியா 900 கோடி US $ ரும், இலங்கை 80 கோடி US $ ரும் பெற்றிருந்தன.

உலகமயமாக்கலினால் முத லீட்டுச் சட்டங்கள், தாராளமய மாக்கத் துக்கு பொருளாதாரத்தை திறந்து விடுதல் போன்றன சர்வதேச வர்த்தகம், வெளிநாட்டு முதலீடு, தொழில்நுட்ப பரிமாற்றங்கள், சுற்றுலாத்துறை என்பன பரவலாக அதிகரித்து வருகின்றன. இவற்றின் பயன்கள், நன்மைகளின் பெரும் பகுதியை சிறிய நாடுகளுடன் ஒப்பிடும் போது பெரிய நாடுகளான சீனா, இந்தியா போன்ற நாடுகள் கவர்ந்திழுத்துக் கொள்வதால் சிறிய நாடுகளுக்கு கிடைக்கும் அனுகூலங் கள் குறைவாகவே காணப்படும்.

முதல் நிலைப் பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் சிறிய நாடுகள். உலகமயமாக்கலின் திறந்துவிட்ட பொருளாதார இணைப்பில் பெரிய நாடுகளினால் உற்பத்தி செய்யப்படும் முதன் நிலை விவசாய உற்பத்திகளுடன் பேரம் பேசி தமக்கென சாதகமான விலையினை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. இதனால் விளை பொருட்களின் விலைகள் சிறிய நாடுகளில் தளம்பல் அடைந்து, வருமானம் பாதிப்படை கின்றன.

சர்வதேச மயமாக்கலினால் வளர்ந்த நாடுகள் தமது கைத்தொழில் பொருட்களுக்கான பரந்த சந்தை வாய்ப்பினை சிறிய நாடுகளில் மேற்கொண்டு வருகின்றன. சிறிய நாடுகளின் கைத்தொழில் பொருட்களை வளர்ந்த நாடுகளுக்கு சந்தைப்படுத்தப் படும் போது மட்டுப்படுத்தப்பட்ட கோட்டா முறையினைக் கொண்டிருக் கின்றன. இது சிறிய நாடுகளின் முழு அளவிலான சந்தைப்படுத்தலினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படு

கின்றன. உதாரணமாக இலங்கையில் தைக்கப்பட்ட ஆடை உற்பத்தி பொருளை அமெரிக்காவுக்கு கோட்டா அடிப்படையில் ஏற்றுமதி செய்கின்றது. பெரிய நாடுகள், வளர்ந்த நாடுகள் உற்பத்தி செய்த முடிவுப்பொருட்களை குறைந்த விலையில் சிறிய நாடுகள் உற்பத்தி செய்த முடிவுப்பொருட்களை குறைந்த விலையில் சிறிய நாடுகளுக்கு சந்தைப்படுத்தி வருவதால் சிறிய நாடுகளில் வளர்ந்து வருகின்ற குழந்தை நிலைக் கைத்தொழில்களின் வளர்ச்சி பாதிப்படைகின்றன. திறந்துவிட்ட பொருளாதாரக் கொள்கையினால் சுதேச கைத்தொழில்களுக்கு போட்டியாக, செங்கம்பள வரவேற்புடன் உள்வாங்கப்பட்ட நேரடி முதலீட்டுக் கைத்தொழில்கள், பல்தேசிய கம்பனிகள் என்பவற்றால் போட்டி போடமுடியாமல் போட்டி அச்சுறுத்தல்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

உலகமயமாக்கலினால் திறந்துவிடப்பட்ட சந்தைகள் சுற்றுச்சூழல் மீதான தாக்கங்களுக்கு மதிப்பளிப்பதில்லை. நுகர்வுவாத சமுதாயம் உலகெங்கிலும் பரவுவதாலும், நுகர்வு பெருக்கத்தின் காரணமாக புதிய நாடுகள், புதிய பிரதேசத்தை நோக்கி நகருகின்றன. அதிகரித்து வரும் கேள்விக்கு போட்டியடிப்படையில் உயர் அளவிலான உற்பத்திக்கு தூண்டுவதால் புதுப்பிக்க முடியாத கனிப்பெருட்கள் அழிவுக்கு வழிகோலுகிறது. பெற்றோலியம், கனிப்பெருட்கள், மீன்வளம், காட்டுவளம், நிலநீர்வளம், பாதிப்படைகிறது. உலகமயமாக்கலினால் பெரிய நாடுகளுடன் போட்டியாக சிறிய நாடுகள் விவசாய உற்பத்திப் பொருட்களின் பெருக்கத்திற்கு இரசாயன உரம், கிருமிநாசினி பரவலாக பயன்படுத்துவதால் நிலவளத்தின் செழிப்பு, நீர் நிலைகள் பாதிப்படைகின்றன. கைத்தொழில் பண்டங்களின் அதிகரித்த உற்பத்திக்கு மிதமிஞ்சிய வளங்களின் பயன்பாடு, அளவுத்திட்ட சிக்கனமின்மை, போன்றன சிறிய நாடுகளின் நிலைத்து நிற்கும் பொருளாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றன.

உலகமயமாக்கலின் இன்றைய சூழலில் கலாச்சாரமானது வளர்ச்சியடைந்த நாடுகளிடம் இருந்து வளர்முக நாடுகளை நோக்கியதாகவே அமைகின்றன. கலாச்சாரம் ஒரு பொருளாதார பண்டமாக ஆக்கப்படுவதுடன் கைவினைப் பொருட்கள், சுற்றுலாத்துறை, இசை, நூல்கள், திரைப்படங்கள் போன்றன வர்த்தகம் செய்யக்கூடிய பண்டங்களாக காணப்படுகின்றன. தென்னாசியா, தென்கிழக்காசிய நாடுகளில் மதித்து நடக்கும் சமூகத்தின் வழக்காறுகள், விழுமியங்கள், பாரம்பரியங்கள் என்பவை திறந்த சந்தைகள், பல்தேசிய நிறுவனங்கள் நவீன ஊடகங்களை பயன்படுத்தி பணத்திற்கும், பண்டங்களுக்கும் அடிமைப்படுத்தி செல்வச்செழிப்பு, பேராசை, தனிநபர்வாதம் என்பவற்றை போற்றிப்புகழும் ஒரு கலாச்சாரத்தை உலகமயமாக்கல் வளர்த்து வருகின்றன. இதனால் பாரம்பரிய கலாச்சாரம் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. உலகளாவிய ஊடக வலைப்பின்னல் அமைப்புக்களின் விரிவாக்கம் தொடர்பாடல், தொழில் நுட்பங்களின் பெருக்கம் சக்திவாய்ந்த ஒரு புதிய ஊடகத்தை ஒரு சில வினாடிக்குள் முழு உலகத்தையும் சென்றடையும் தன்மையை உருவாக்கியுள்ளது. அமெரிக்காவின் கலாச்சாரத்தை அடையாளப்படுத்தும் கூறுகள்

உலகெங்கிலும் எடுத்து செல்லப்படுகின்றது. மேலத்தேச கலாச்சாரமானது சிறிய நாடுகளினால் கட்டிக்காத்துவரும் கலாச்சாரத்தின் தனித்துவத்தினை சீர்குலைக்கும் அபாய அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளன.

உலகமயமாக்கலின் விளைவால் சிறிய நாடுகளின் தேசிய உற்பத்தி அதிகரித்துச் செல்கின்றன. 1960 ஆண்டு முதல் யப்பான் வருட மொன்றுக்கு சராசரியாக 7 சதவீதத்திற்கும் குறையாமலும் தாய்லாந்து, சிங்கப்பூர், தென்கொரியா, கொங்கொங் நாடுகள் சராசரி வருடமொன்றிற்கு 8% திற்கு குறையாமலும், இதேபோன்று மலேசியா, இந்தோனேசியா 1980 களிலும், பிலிப்பைன்ஸ் 1990களிலும் உயர் பொருளாதார வளர்ச்சி கண்டுள்ளன. ஏனைய கிழக்காசிய நாடுகள் முன்னைய வளர்ச்சி வீதத்திலும் சற்று குறைவான வளர்ச்சியைக் கண்டன. கடந்த 3 தசாப்தங்களாக உலகின் பொருளாதார வளர்ச்சி தென்னாசியா, தென்கிழக்காசியா, நாடுகளில் அதிகரித்து காணப்பட்டது. சில ஆசிய நாடுகளின் மெய்த்தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம் வருமாறு

| நாடுகள் | 1978-88 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 |
|---|---|---|---|---|---|---|---|
| தென்கொரியா | 7.8 | 9.5 | 9.1 | 5.1 | 5.8 | 8.6 | 8.9 |
| இந்தோனேசியா | 4.9 | 9.0 | 8.9 | 7.2 | 7.3 | 7.5 | 8.2 |
| மலேசியா | 5.8 | 9.6 | 3.6 | 7.8 | 8.3 | 9.2 | 9.5 |
| தாய்லாந்து | 6.7 | 11.6 | 8.1 | 8.1 | 8.3 | 8.8 | 8.7 |
| பிலிப்பைன்ஸ் | 1.9 | 3.0 | 0.6 | 0.3 | 2.1 | 4.4 | 4.8 |

இக்காலகட்டத்தில் வளர்ச்சி கண்ட அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் 3 சதவீதங்களுக்கு குறைவாகவே காணப்பட்டது. உலகமயமாக்கலினால் இரு தரப்பு நாடுகளுக்கிடையிலான வருமான வேறுபாட்டைக் குறைப்பதற்கு உதவியுள்ளது. புதிய கைத்தொழில் மயமான நாடுகளாக கருதப்பட்ட பிறேசில், மெக்சிக்கோ போன்ற நாடுகளின் தலாவருமானத்தினைவிட கிழக்காசியா, தென்கிழக்காசியா நாடுகளினது தலாவருமானம் உயர்வாக காணப்பட்டது. இவ்விரு நாடுகளுக்கிடையிலும் சனத்தொகை, பரப்பளவு என்பவற்றில் வேறுபாடுகள் காணப்படுகிறது. இவற்றில் சில நாடுகளின் சனத்தொகை, தேசிய வருமானம் என்பவை உலக ரீதியில் நோக்கும்போது சிறிய பங்கினையே கொண்டிருக்கின்றன. உலகமயமாக்கலினால் சிறிய நாடுகளின் தேசிய உற்பத்தி அதிகரித்துக் காணப்பட்டாலும் இந்நாடுகள் விவசாயம், கைத்தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு பெருமளவு வளர்ந்த நாடுகளின் இறக்குமதி உள்ளீடுகளை வேண்டி இருப்பதனை காணமுடிகிறது.

கிழக்காசியா, தென்கிழக்காசியா பொருளாதார முன்னேற்றத்திற்கு காரணமாக சுதந்திர ஏற்றுமதி சந்தை, தடையற்ற ஊழியச் சந்தை, ஊழியர்

சேமிப்பு, உயர் வட்டிவீதம், உறுதியான நாணயமாற்றுவீதம், வரவுசெலவுத்திட்ட மிகை, போட்டித்தன்மை வாய்ந்த கைத்தொழில் அமைப்பு, பயிற்றப்பட்ட ஊழிய நிரம்பல், உறுதியான அரசு என்று பொருளியல் ஆய்வாளர் கூறினர். இவ்வாறு உலகமயமாக்கலினால் வெற்றிகண்ட இந்நாடுகள் அதே உலகமயமாக்கலினால் பல்வேறு காரணிகளின் பின்னணியால் 1997ன் பின் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பங்குச்சந்தையில் விலைத்தளம்பல், முதலீடுகள் வெளிப்பாய்ச்சல், நாணய மாற்றுவீதத் தளம்பல், சென்மதி நிலுவை பிரச்சனை போன்றன தோன்றுவதற்கும் வழி வகுத்தன.

இன்றைய நிலையில் முழு உலகமும் ஒரு பூகோள கிராமமாக சுருங்கி வரும் ஒரு பின்புலத்தில் உலகளாவிய ரீதியில் பொருளாதாரங்கள் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலை அதிகரித்துவருகின்றது. உலகமயமாக்கலின் அனுகூலங்கள் நாடுகளுக்கிடையில் சமமான முறையில் பகிரப்பட்டிருக்கவில்லை என்பதனை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மானிட அபிவிருத்தி அறிக்கை கூறுகின்றது. உலக மயமாக்கலின் விரிவாக்கத்தில் இணைந்த விதத்தில் சமூக, அரசியல், கொந்தளிப்புக்கள் தோன்றமுடியும் என்பதனை அண்மையில் சீட்டில் நகரத்திலும், பல மூன்றாம் உலகநாடுகளிலும் இடம் பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக நிறுவனம் போன்ற சர்வதேச அமைப்புக்கள் உலக மயமாக்கலை ஆதரித்த போதிலும் வறிய உலகம் எதிர்நோக்கும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், போசாக்கின்மை மற்றும் தொழில்நுட்ப பின்னடைவு போன்றன பல முக்கிய பிரச்சனைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. கல்வி, தொழில்நுட்பம், ஆராய்ச்சி, பயிற்சி, நிதி வங்கித்தொழில், காப்புறுதி, போக்கு வரத்து, தொடர்பாடல் போன்ற வளங்கள் வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளிலே ஒன்று திரண்டுள்ளன. இந்நிலையில் வளர்முக உலகம், உடனடி எதிர்காலத்தில் மாற்றம், செல்வச்செழிப்பு என்பவற்றை சாதித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அரிதாகவே காணப்படுகின்றன. உலக மயமாக்கலை முனைப்புடன் ஆதரித்து வரும் நிறுவன அமைப்புக்கள் வறிய நாடுகள் தொடர்பாக அவர்கள் முன்வைக்கும் அபிலாஷையுடன் கூடிய இலக்குகள் அடையும் வகையில் உறுதி செய்தாலே ஒழிய இன்றைய இருண்ட யதார்த்த நிலமைகள் இன்னும் பல வருடங்களுக்கு தொடர்ந்து நீடித்து வரக்கூடும்.

## References


✍Economic Review April/May -2002

✍Economic Review September/August -2002

✍ Economic Review May -1996

# உலகமயமாக்கல் – ஓர் ஆய்வு
# Globalization - An analysis

*K.உதயசீலன்*
*இரண்டாம் வருடம்*
*பொருளியல்துறை*

உலக மயமாக்கல் என்பது ஒரு புதிய விடயமல்ல. அது 16ம் நூற்றாண்டில் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி போன்ற வியாபார அமைப்புக் களின் தோற்றத்துடன் ஆரம்பமானது. இது ஏகாதிபத்தியவாதம். காலனித்து வம், போன்றவற்றின் கீழ் புதிய எழுச்சியைப் பெற்றுக் கொண்டது. பின்னர் 1971ல் நிலையான செலாவணி விகிதத்தைக் கொண்ட அமைப்பின் வீழ்ச்சி, 1990 களில் ஏற்பட்ட சோவியற் யூனியன் பாணியிலான சமவுடமைப் பொருளாதார அமைப்புக் களில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றின் காரணமாக உலகமயமாக்கல் உத்வேகம் பெற்றது. எனவே இவ் உலகமயமாக்கல் என்பதற்கான விளக்கத்தை நாம் நான்கு பரிமானங்களில் கொடுக்க முடியும் அவை.

1. பொதுவான நோக்கு (2) சமூகவியல் ரீதியான நோக்கு
2. அரசியல் ரீதியான நோக்கு (4) பொருளாதார ரீதியான நோக்கு

பொதுவான நோக்கின்படி உலகமயமாக்கல் என்பது சர்வதேச நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒன்றாக இணைக்கும் ஒரு செயன்முறையாகும். அது பொருளாதார, கலாச்சார, தொழில்நுட்ப மற்றும் அரசியல் இணைப்புக்களுக் கூடாக உலக மக்களை எடுத்து வருவதுடன் அவர்களை ஒருவரை ஒருவரில் தங்கியிருக்கும் நிலையையும் அதிகரிக்கின்றது. அரசியல் நோக்கின் படி சனநாயகம், மனிதஉரிமைகள், அடிப்படை சுதந்திங்கள், பால் சமத்து வம், ஒளிவு மறைவற்ற ஆட்சி மற்றும் அரசுசாரா அமைப்புக்கள் என்பவற்றின் அதிகரிப்பு உலகமய மாக்கல் ஆகும். பொருளாதார ரீதியாக நோக்கின் வளர்ந்து வரும் எல்லா நாடுகளினதும் பொருளாதாரத்தை ஒருங்கிணைப்பதும் உலகளாவிய சந்தையில் "தேசிய சந்தைகளை இணைக்கும் செயற்பாடும் உலகமயமாக்கலாகும்.

தேசிய சந்தைகள் மற்றும் பொருட்கள் சேவைகள் என்பவற்றின் அதிகரித்த அளவிலான எல்லை தாண்டிய வர்த்தகத்திலும், சர்வதேச மூலதனம், மற்றும் பணம் என்பவற்றின் நகர்வுகளுக்கூடாகவும், தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கூடாகவும் இது இடம் பெற்று வருகின்றது. "இனி எதுவும் பிறநாடு என்றில்லை" (Nothing is overseas' anymore) என்ற தாரகமந்தி ரத்துடன் சர்வதேச வர்த்தகம் நாட்டு எல்லைகளைத் தாண்டிவிட்டது. வர்த்தகம் உள்நாட்டுக்கானது என்ற நிலைப்பாடு மாறி அது சர்வதேசத்துக் குரியது என அங்கீகரிக்கப்படும் நிலைமையே உலகமயமாதல் எனலாம் பொதுவாக உலகமயமாக்கல் என்பது கைத்தொழில் நாடுகளிலிருந்து தோன்றி

வருகின்றன. வளர்முக நாடுகளை தமது உலகளாவிய அமைப்புக்குள் உள்வாங்கிக்கொள்வதே இதன் நோக்கமாகும். இது மேலைத்தேய நாடுகளின் ஒரு நடவடிக்கையாக இருக்கிறது. அதாவது உலகநாடுகளின் பொருளாதார அரசியல் கொள்கைகளை ஒருமுகப் படுத்தும் அல்லது மேலைத்தேசமாக்கும் ஒரு நடவடிக்கை எனலாம். உலக மயமாக்கல் என்ற எண்ணக்கரு பின்வரும் மூன்று பகுதிகளை உடையது.

**A) அருகாண்மை (Proximity)**

தகவல் தொழில்நுட்பத்தினால் உலகம் சுருங்கி விட்டது. இதனால் வர்த்தக நிறுவனம் ஒன்று தனது வாடிக் கையாளர் உலகின் எப்பகுதியில் இருந்தாலும் அவர்களை சமதூரத்தில் வைத்திருக்க முடிகின்றது. இது மெய் நிகர் அருகாண்மை (virtual proxity) எனப்படுகின்றது.

**B. இடவமைவு (Location)**

ஒரு நிறுவனத்தின் சொந்த நாடடுக்கு அப்பால் பல நாடுகளில் அந் நிறுவனத்துக்கு உற்பத்தி மையங்கள் ஒன்றினைக்கப்பட்டு நிர்வகிக்கப்படு வதை இது குறிக்கின்றது. இதன் தொடர்ச்சியாய் "நாடு தாண்டிய முகாமைத்துவம்" (Transnational management) என்பது அறிமுக மாகியுள்ளது.

**C. மனோபாவம் (Attitude)**

உலகமயமான வர்த்தக வெற்றிக்கு நிறுவனம் ஒன்றின் ஊழியர், தொழிலாளர்களின் வேலைத்திறன்களுடன் அவர்களின் மனோபாவம் என்பதும் முக்கியம் பெறுகின்றது. நிறுவனங்கள் நோக்கங்களை நிறைவேற்ற மனோபா வங்களை அதற்கேற்ப மாற்றியமைக்க முற்படுகின்றன மேலும் ஒரு கம்பனியின் உலகளாவிய வர்த்தகவெற்றிக்கு அதன் சொந்த நாட்டின் நிலைமைகள் சாதகமாக இருக்க வேண்டும். அவையாவன,

- அந்நாட்டின் பொருளாதாரச்சூழல் Economic Elimate
- வெளிநாட்டுக் கொள்கை (Foreign policy)
- பங்குச்சந்தை நிலைமை (Share market situation)
- அரசாங்கத்தின் ஆதரவு (Government support)

உதாரணமாக: கணினி உற்பத்திக்கு ஆதரவாக அரைகடத்தி (Semi conductor) உற்பத்தியை ஊக்குவிக்க அமெரிக்க அரசு பல சீர்திருத்தங்களை, விட்டுக் கொடுப்புகளை 1980களில் செய்தது.

இத்தகைய உலகமயமாக்கலில் 5 பிரதான கூறுகள் காணப் படுகின்றன.

1. சர்வதேச நிதிச்சந்தைகளில் ஏற்பட்டு வரும் துரித வளர்ச்சி
2. பல்தேசிய கம்பனிகளிடையே வர்த்தகத்தில் ஏற்பட்டுவரும் வளர்ச்சி
3. வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் காணப்படும் பெரும் பாய்ச்சல்
4. உலகளாவிய சந்தைகளின் எழுச்சி
5. உலகமயமாக்கப்பட்டுள்ள போக்கு வரத்து மற்றும் தொடர்பாடல் வசதிகளின் பெருக்கத்துக்கு ஊடாக

தொழில்நுட்பங்களும் கருத்துக்களும் வியாபித்துச் செல்லல்.

இன்று உலக வர்த்த நிறுவனம் சர்வதேச நாணயநிதியம், உலகவங்கி போன்ற அமைப்புக்கள் உலகமய மாக்கல் செயற்பாட்டை மேம்படுத்தும் நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளன. இவ் அமைப்புக்கள் தம்மிடம் உதவி பெறும் நாடுகளுக்கு உதவி வழங்கலுக்கான நிபந்தனையாக (குறிப்பாக I.M.F) பின்வரும் தாராளமயமாக்கல் கொள்கை களை பின்பற்ற வேண்டும் எனக் கோருகின்றன.

* நவதாராளவாதப் பொருளாதாரம்
* சந்தை சக்திகளை எவ்வித தலையீடு மின்றி திறந்துவிடல்
* ஒழுங்குவிதிகள் தளர்த்தப்படல் வேண்டும்
* தனியார் மயமாக்கல் நடவடிக் கைகள் மூலம் அரசின் பங்கினை குறைத்துவிடல் வேண்டும்.

இவ்வாறான நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இன்று இடம் பெறும் உலக மயமாக்கலுக்கும் பழைய உலக மயமாக்கலுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு பழைய உலக மயமாக்கல் பண்டங்கள் சேவைகள் என்பவற்றின் மீதான வர்த்தகம் மூலப்பொருட்கள் மீதான முதலீடு என்பவற்றில் கவனம் செலுத்தியது. இன்றைய உலகமயமாக் கல் இவற்றுடன் அந்நியச் செலாவணி, மூலதனச்சந்தை என்பவற்றையும் உள் ளடக்குகின்றது. கணனி, இணையம், ஊடாக வலையமைப்பு என்பன இதற்கு அடிப்படையாக அமைந்தன. இத்தகைய உலகமயமாக்கலினால் ஏற்பட்டுள்ள அனுகூலங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

* நாடுகளின் எல்லைகள் சுருக்கப்பட் டமை. தொழிநுட்பமுன்னேற்றத்தின் காரணமாக காலம், இடம், தேசிய எல்லைகள் என்பன சுருக்கப்பட்டும் இல்லாமற் செய்யப்பட்டும் வருகின் றது. இதற்கு உலகமயமாக்கலினால் நாடுகளுக்கிடையில் பரவிய, இணை யம், இடம்பெயர் தொலைபேசி, தொலைநகல் பொறி முதலிய தகவல் தொடர்புசாதனங்களே காரணமாகும். இவை நிதிச்சந்தை களின் ஒழுங்கிணைப்புக்களையும் பல்தேசிய நிறுவனங்களின் விஸ்த ரிப்புக்களையும், மக்களுக்கிடை யில் தகவல், கருத்துக்கள் என்பவற்றின் பரிமாற்றத்தினையும் துரிதப்படுத்தியுள்ளன.
* உற்பத்தி அதிகரிப்பு

  உலகமயமாக்கல் காரணமாக தொழில்நுட்ப முன்னேற்றம் பரவ லாக்கப்பட்டமை உற்பத்தி அதிக ரிப்புக்கு வழிசெய்தது. பொருள் உற்பத்திகள் தொடர்பாக நல்ல தரமான பொருட்களை மலிவாகவும், தரமாகவும் உற்பத்தி செய்யக் கூடிய புதிய கருவிகள் கண்டுபிடிக்கப் பட்டமை, மனித உழைப்புக்கு பதிலாக இயந்திர சாதனப்பிர யோகம், புதிய விதைகள் கண்டு பிடிக்கப்பட்டமை போன்றவைகள் காரணமாக உற்பத்தி அதிகரித்தது.
* புதிய விதைகள் கண்டுபிடிக் கப்பட்டமை போன்றவைகள் காரண மாக உற்பத்தி அதிகரித்தது.
* கலாசார மாற்றம்: உலகமயமாக்க லின் விளைவாக பொருளாதாரங்கள் திறந்து விடப்பட்டன. இதனால் மேலைத்தேச நாடுகளின் பழக்க

வழங்கங்களும் கலாசாரங்களும் ஏனைய நாடுகளுக்கும் பரவியது. இது மற்றைய நாடுகளில் கலாசார மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. உ+ம் +> ஆங்கிலத்தை மொழியாக ஏற்றமை பொப் இசை, ஹொலிவூட் படங்கள் போன்றவற்றைக் குறிப்பிட லாம்.

* வருமான அதிகரிப்பு: பொருளா தாரங்கள் உலகமயமாக்கலின் காரணமாகத் திறந்து விடப்பட்டன. இதனால் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப் புக்களினால் ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது. மற்றும் சுற்றுலாத் துறை, வெளிநாட்டு முதலீடு, தொழில்நுட்ப பரிமாற்றங்கள் காரண மாகவும் வருவாய் அதிகரித் துள்ளது. இவை ஒட்டு மொத்த வருமான அதிகரிப்புக்கு வழி செய்தன.
* வேலையின்மை வீழ்சியடைய உதவுதல். வெளிநாட்டு நிறுவனங் களின் வருகையால் புதிய முதலீடுகள் அதிகரிக்கின்றது. இது வேலையின்மையை குறைக்க உதவுகின்றது.
* பொருட்களின் விலைகள் வீழ்ச்சிய டைதல். இது கொள்வனவு ஆற்றலை அதிகரிக்கின்றது.
* வளப்பயன்பாடு அதிகரித்தல்
* காரணி விலைகள் சமப்படுத்தல்
* விரைவான பொருளாதார வளர்ச் சிக்கு உதவுகின்றமை.
* ஒப்பீட்டு நயு அடிப்படையிலான உற்பத்தி

போன்ற அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும், இவ்வாறான நன்மைகளைப் பெறுகின்ற போதிலும் கூட இவ் உலகமயமாக்கலானது எமக்கு பல தீமைகளையும் விளை விக்கின்றது அவை

1. **வருமான ஏற்றத்தாழ்வு (செல்வம் சரியாகப் பகிரப்படாமை)**

உலக மயமாக்கல் இன்று கட்டற்ற சந்தைச் சக்திகள் மற்றும் வர்த்தக நலன்கள் என்பவற்றினால் உந்தித்தள்ளப்பட்டு வருகின்றது. இங்கு உழைக்கப்படும் வருமான மானது கூடுதலாக வளர்ந்த நாடு களுக்கே செல்கின்றது. இதனால் வளர்முக நாடுகள் பாதிப்படைய வருமான ஏற்றத் தாழ்வு உருவா கின்றது. உலக சனத் தொகையில் 1/5 வீத மக்கள் பின்வரும் அனுகூலங்களை அனுபவிப்பதாக அறிக்கையொன்று கூறுகின்றது.

a. உலக ஏற்றுமதிச்சந்தையில் 82 வீதத்தை வைத்துள்ளன.

b. உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 86 வீதத்தைக் கொண்டு ள்ளனர்.

c. உலக வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 68 வீதத்தைப் பெற்று வருகின்றனர்.

d. உலகின் மொத்த தொலைபேசி இணைப்புக்களின் 74 வீதத்தைக் கொண்டுள்ளனர்.

e. இணைய வசதிகளை உபயோகிப் பவர்கள் 88 வீதமாக உள்ளனர்.

இவை வருமான ஏற்றத் தாழ்வைக் காட்டுகின்றன.

2. **மனித உரிமைகள் மதிக்கப்படாமை**

உலகமயமாக்கலானது மக்கள் தொடர்பாகவும் அவர்களின் உரிமை கள் தொடர்பாகவும் கவனம் செலுத்த

வில்லை. விழுமியங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு சமுகத்தைக் கட்டி யெழுப்பும் முயற்சி வர்த்தக அக் கறைகளால் கவனிக்கப் படவில்லை. இது பற்றி ஐ.நா. மனித அபிவிருத்தி அறிக்கை கூறுவதை இவ்விடத்தில் கூறுவது பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன்.

"சந்தை சமூக மற்றும் அரசியல் தளங்களில் அதன் முழு ஆதிகத் தையும் படரச்செய்யும் பொழுது உலக மயமாக்கலின் வாய்ப்புக் களும் வெகு மதிகளும் ஏற்றத் தாழ்வான முறையில் பகிரப்படு கின்றன. ஒரு சிறு குழுவின ரிடையேயும் ஒரு சில நாடுகளி டையேயும் கம்பனிகளிடையேயும் செல்வமும் அதிகாரமும் ஒன்று திரண்டு விடுகின்றன. ஏனைய நாடுகளும் மக்களும் ஒதுக்கப்படு கின்றனர். கிழக்காசியப் பொருளா தார நெருக்கடியும் அதன் உலகளா வியதாக்கங்களும் இந்த அடிப்படை யிலேயே ஏற்பட்டன. சந்தையில் செயற்பட்டு வருபவர்களின் இலாப வேட்கை கட்டுமீறிச் செல்லும் போது தார்மீக நெறிமுறைகள் மீறப்படு வதுடன் நீதி மற்றும் மனித உரிமைகள் என்பவற்றிற் கான மதிப்பும் பலியாகி விடுகின்றது.

3. உள்நாட்டில் இலாபகரமாகச் செயற் படும் நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங் களால் விழுங்கப்படுதல்

உலகமயமாக்கலின் காரணமாக உள்நாட்டில் இயங்கும் இலாபகரான நிறுவனங்களை வெளிநாட்டு நிறுவனங்கள் கைப்பற்றுகின்றன. இந்தியாவில் தாராளமயமாக்கல் செய்முறை தொடங்கிய போது பல்தேசிய நிறுவனங்கள் இந்திய கைத்தொழிற்துறையின் மீது தமது மேலாதிக்கத்தைப்பரவச் செய்தன.

உ+ம்=> கொரியாவைச் சேர்ந்த டேவுகார் கம்பனி இந்திய டிசி எம் கார் கம்பனியின் மீதான தனது பங்கு களை அதிகரித்துக் கொண்டது.

4. நாடு ஒன்று தன்னிறைவுப் பொருளா தாரத்தின் வலிமையை இழந்து விடுகின்றமை. கிராமிய பொருளா தாரம் முற்றாக அழிக்கப்படும் நிலை தோன்றியுள்ளமை.

5. தனித்துவமான கலாசாரங்கள், விழுமியங்கள் அச்சுறுத்தலுக் குள்ளாகியுள்ளன.

6. பல்தேசியக் கம்பனிகள் சூழல் மாசடைதல் பற்றி பொறுப்புணர்ச்சி அற்றவையாக உள்ளமை.

   உ+ம்=>அமெரிக்கா பல்தேசியக் கம்பனி களுக்கு ஆதரவாக சியாட்டில் உடன் படிக்கையை உதாசீனம் செய்துள்ளமை.

7. அரசுகளை பல்தேசிய நிறுவனங்கள் கைப்பொம்மையாக்கல்.

8. அதிகாரமாற்றம் தேசிய பொருளா தார இறைமையைப் பாதித்தல்.

9. இயந்திரசாதனப் பயன்பாடு வேலை யின்மையை அதிகரித்தமை

10. பாதுகாப்பின்மையும் நிச்சயமற்ற தன்மையும்.

11. நாட்டின் உற்பத்தி இயலளவை விட கூடுதலாக நுகர தூண்டப்படுவதால்

சென்மதி நிலுவை பாதிப்படைதல்

12. தொழிலாளர் நலன், உரிமைகள் பற்றிய அக்கறை அருகி வருதல்.

இவை தவிர முதல் உலகநாட்டு அறிவு ஜீவிகள் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுகின்றனர்.

a. சனநாயகத்தை வர்த்தக உலகம் விழுங்கிவிட்டது.

b. மிகப் பெரிய முடிவுகள் மக்களால் தெரிவு செய்யப்படாத கண்ணுக்குத் தெரியாத வர்த்தக நிபுணர்களாலேயே எடுக்கப்படுகின்றன. அவர்கள் நாட்டுக்கோ, மக்களுக்கோ விசுவாச மில்லாதவர்கள். (They have no loyality to place or citizen)

c. காலநிலைமாற்றம் (Climate change) முக்கிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

d. உலகவர்த்தக நிறுவனம் (wto) என்பது "உலக அரசின் கருவே அன்றி வேறில்லை."

போன்ற விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

## References


✍பொருளியல் நோக்கு: இதழ் 01/02 (மலர் 26) (ஏப்ரல்/மே 2000)

✍விருட்சம் இதழ் - 5 (2000)


No society can surely be flourishing and happy of which by for the greater part of the numbers are poor and miserable.

Adam smith 1776

A Society that is not socially just and does not intend to be puts its own future in danger.

Pope john Paul II Brazil, 1980

Population -related goals and policies are integral parts of cultural, economic and social development.

Program of Action, 1994 united nations international conference on population and development.

# உலகமயமாக்கமும் அதன் பண்புகளும்
# Globalization and Its Characteristics

K.மகிந்தன்
2ம் வருடம்
பொருளியல் சிறப்புக்கலை

உலகமயமாக்கம் என்பது பொதுவாக பொருளாதார, தொழில்நுட்ப, கலாசார, அரசியல் தொடர்புகளுடாக உலக நாடுகளையும் அவற்றின் மக்களையும் நெருக்கமாகவும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதாகவும் ஒருங்கிணைக்கும் செயல்றை உலகமயமாக்கமாகும்.

"பொருளாதார நோக்கில் குறிப்பிடுவதாயின் "பொருட்கள், சேவைகள், வெளிநாட்டு முதலீடு, பணம், தொடர்பாடல், தொழில்நுட்பம், என்பவற்றின் அடிப்படையில் நாடுகளது எல்லைகளைத் தாண்டி இடம்பெறும்கொடுக்கல் வாங்கல்களின் அதிகரிப்பினூடாக தேசிய சந்தைகள் ஒருங்கிணைந்து ஒரு உலக சந்தையாக உருவாகுவதன் மூலம் எல்லா நாடுகளும் பொருளாதார ரீதியாக ஒன்றில் ஒன்று தங்கியிருக்கச் செய்தல் உலக மயமாக்கம் எனலாம்.

குறிப்பாக வளர்முக நாடுகளில் வேலையின்மை, வறுமை, வருமான சமமின்மை, பணவீக்கம் போன்ற பிரச்சனைகள் தேசியப் பொருளாதாரத்தின் விரைவான அபிவிருத்திச் சவாலாக உள்ளன. இப்பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் உலகமயமாக்கலே சிறந்த தீர்வாக இருக்க முடியும் என்ற அடிப்படையில் இலங்கை உட்பட வளர்முக நாடுகள் கடந்த மூன்று தசாப்பதங்களாக பாரிய சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றன.

## உலகமயமாக்கலுக்கான காரணிகள்

1) பொருளாதார அனுபவங்களின் அடிப்படையில் உலக நெருக்கடிகளைக் குறைக்கவும், நீண்ட கால வளர்ச்சியை உறுதிப்படுத்தக் கூடிய தொலைநோக்குடனான பல கொள்கைச் சீர்திருத்தங்கள் வலியுறுத்தப்பட்டமை.
2) தொடர்புசாதனமுறை, தகவல், நுட்பவியல், மின்னியல் முன்னேற்றங்கள் என்பவற்றால் நாடுகளுக்கிடையிலான காலம், தூரம் தொடர்பான தடைகள் வேகமாக அகற்றப்பட்டமை.
3) நாடுகள் பிராந்திய அடிப்படையிலான பொதுநலன்களை முன்னேற்றுவதும்அதன் பயன் களைப் பெறுவதற்கு போட்டியிலும் பாக்க ஒத்துழைப்பு சிறந்ததென்ற சிந்தனை வளர்ச்சியடைந்தமை அதனை வேகமாக செயல்வடிவம் ஆக்கியமை.
4) புதிதாக பல கைத்தொழில்கள் வளர்ச்சி பெற்றன. பல புதிய

சேவை கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்தன. புதிய தொழில் நுட்பங்களும் வளர்ச்சி பெற்றன. இதன் காரணமாக தேசிய சந்தைகள் ஒன்றாக இணைக்கப்பட்டு உலக சந்தை உருவாகும் தேவை வலுப் பெற்றமை.

5) நாடுகள் தம் வளர்ச்சிக்காக மற்றவற்றில் தங்கியிருத்தல் தொடர்ச்சியாக இருந்துவரும் நிலமைதான் ஆனால் கடந்த பத்தாண்டுகளில் பரஸ்பரம் தங்கியிருக்கும் தன்மை மேலும் வலிமை பெற்றுவிட்டமை.

6) மூலதனப் பாய்ச்சல் தொடர்வதற்கான சூழல் வளர்ச்சியடைந்தமை இவ்வோட்டத்திற்கு தடையாக இருந்த நிலைமைகள் அகற்றப்பட்டமை போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.

## இலங்கையின் நிலை

* ஏனைய பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைப் போன்றே இலங்கையும் வர்த்தகர் மற்றும் முதலீடுகள்தொடர்பான தடைகளைப் படிப்படியாக அகற்றுவதன் மூலம் உலக மயமாக்கல் பாதையில் படிப்படி யாக முன்னேற்றமடைந்து வருகின்ற வேளையில் தேவை யான ஒழுங்கு முறைப்படுத்தல், மற்றும் கண்காணிப்பு முறைகளை நிறுவிவருவதுடன் உறுதிப்பாட்டைப் பேணுவதற் கான வழிவகைகளையும் நடை முறைப்படுத்தி வருகின்றது.
* உலக பொருளாதாரத்துடன் இலங்கைப் பொருளாதாரம் அதிகளவில் இணைக்கப்பட்டு (உலகமயமாக்கப்பட்டு) வருவதனை உலக பொருளாதார வளர்ச்சி வீதத்திற்கும், இலங்கை யின் வளர்ச்சி வீதத்திற்குமான தொடர்புகள் காட்டுகின்றன.

## உலகமயமாக்கலின் அனுகூலங்கள்

* உற்பத்திகளையும், காரணிச்சந்தைகளையும் உலகளாவிய முறையில் ஒருங்கிணைக்கும் செயற்பாடு புதியதொன்றல்ல என்பதுடன் பொருளாதார அபிவிருத்தியில் தவிர்க்க முடியாத ஒரு பகுதியாகவும் மாறியுள்ளது. வர்த்தகப் பெருக்கம் - உற்பத்திப்பெருக்கம் - வேலைவாய்ப்பு பெருக்கம்.
* இலங்கையின் வரலாற்றில் பெரும்பகுதியில் இது சர்வதேச வர்த்தக வலைஅமைப்பில் முக்கியமானதொரு பங்கினைக் கொண்டிருக்கிறது.
* உலகளாவிய நுகர்வோர் தளத்தையும், மூலவளங்களையும் அடைவதற்கு அனுமதிப்பதன் மூலம் உலகமயமாக்கல் நாடுகளுக்கு நன்மையளிக்கிறது. அதிகளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறலாம்.
* இலங்கை போன்ற சிறிய நாடுகள் பாரிய சந்தைகளை அடைவதன் மூலம் உற்பத்திகளில் பொருளாதார அளவுத்திட்டச்சிக்கனங்களிலிருந்து அவை இலாபங்களை அடைகின்றன.
* அதிக நவீன தொழில் நுட்ப அறிவையும் கைத்தொழில்

அறிவையும் பெறலாம்

* தரமான பொருட்களை பெற முடிதல்
* பூகோளக் கிராமம் உருவாகும் போது வளர்முக நாடுகளில் உள்ள பின்தங்கிய சமூக நிலைமைகளை ஒழித்துவிடும்.
* இது செயல்திறன் மிக்க பொருளாதார நடவடிக்கைகளை இனங்கண்டு கொள்ளவும், மிகக்கூடியளவு உற்பத்தியாற்றல் மிக்க நடவடிக்கைகளின் மூலம்அவற்றைப் பதிலீடு செய்து கொள்ளவும் முடிகிறது.
* வளர்முக நாடுகள் தமது சேமிப்புக்களையும், கடன்பெறும் வாய்ப்புக்களையும் அதிகரிக்க முடியும்.

**உலகமயமாக்கலின் பிரதிகூலங்கள்**

1) பொருளாதாரங்கள் ஒன்றில் ஒன்று தங்கியிருத்தலும்அதனால் ஏற்படும் பலவீனங்களும்.
   * சர்வதேச நிதிச்சந்தைகளின் நிச்சயமற்ற தன்மையினால் ஆபத்துக்களின் அளவு அதிகரிக்கின்றது.
   * குறைந்த தரமுடைய தொழில்நுட்பத்தைக் கொண்ட நாடுகள் உலக சந்தையை அடைய முடியாதிருத்தல்.
2) பல்தேசியக் கம்பனிகளில் ஆதிக்கம் வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், தகவல்தொடர்பு என்பவற்றில் அதிகரித்தல்.
   இவை தேசிய பொருளாதாரங்களின் உள்ளார்ந்த விரிவாக்கத்திற்குத் தடையாக உள்ளன.
3) வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கின்றது.
4) சுகந்திரமான பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு மைய நாடுகளில் நிபந்தனைகள் தடையாகவுள்ளன.
5) தேசிய அரசின் முக்கியத்துவம் குறைக்கப்படுவது பல்துறைகளில் அரசின் பங்குப்பணிகளைப் பாதிக்கும்.
6) அதிகளவு குறுங்கால மூலதனப் பாய்ச்சல்களின் விளைவாக அந்நியச் செலாவணி வீதங்களில் தொடர்ச்சியான தளம்பல்கள் இடம்பெறும் இது உள்நாட்டு பொருளாதாரம், மூலவளங்களின் அசைவு, மற்றும் வெளிநாட்டுக்கு வர்த்தகம் என்பவற்றை மோசமாகப் பாதிக்கும்.

**உலகமயமாக்கலின் நன்மைகளைப் பெறுவதற்கும் தீங்கு பயக்கும் விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் ஒருநாடு பின்பற்ற கூடிய வழிமுறைகள்.**

1) நிதியியல்துறை ஒழுங்கு விதிகளும் மேற்பார்வையும்.
2) தேவையற்ற பொருள்களைக் குவித்தல், கொள்ளை இலாபம்பெறல் விலையிடல் என்பவற்றைத் தடுத்தல்.
3) ஒருங்கிணைக்கும் நம்பிக்கைக்கு எதிரான சட்டங்கள்
4) சட்ட ரீதியற்ற வழியிற் பெற்ற பணத்தை சட்டரீதியாக மாற்றுவதற்கு எதிரான நடவடிக்கைகள்.
5) உலகமயமாக்கல் செய்முறையுடன் சமூகத்தேவைகள் இணைக்கப்பட வேண்டும்.

6) சுற்றுச் சூழல், மூதவளங்களின் பாதுகாப்பு என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும்

உலகமயமாக்கல் நடவடிக்கை களை மிகையாக எதிர்த்தல் நாடுகளை ஒருக்கி, மிகப்பெரிய பக்க விளைவுகளை ஏற்படுத்தி தம்மை உலகமயமாக்கலுடன் ஒருங்கி-ணைத்து வெற்றிகண்ட நாடுகளைவிட பின் தங்கச் செய்து விடும்.

## உலகமயமாக்கலும், உலக நாடுகளிடையே சமமின்மை ஏற்றத்தாழ்வும்

உலகின் பொருளாதார வரலாறு முழுவதும் வேறுபாடுகளினால் ஏற்படும் முரண்பாடுகளின் செயன்முறையைத் தான் காண-முடியும்.

உலகபொருளாதார கொள்கை முடிவுகள் எப்போதும் எல்லா நாடு களினதும் சமத்துவத்தை உறுதிப் படுத்துவனவாயிருப்பதில்லை. இதே தன்மை இவ்உலகமயமாதலுக்கு பொருந்தும்.

நாடுகளுக்கிடையிலான சமமின்-மையை ஊக்குவிப்பதற்காகவே உலகமயமாக்கல் செய்முறை நிகழ்கி றது. அத்தகைய ஏற்றத்தாழ்வு பின்வரும் அம்சங்களில் அடையாளம் காணப்படக்கூடியன.

1) பல்தேசிய நிறுவனங்களின் மூலதன முதலீடு எல்லா நாடுகளுக்கிடையேயம் சமமாகப் பகிரப்படவில்லை. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 1980ல் 40,000 பில்லியனாக (40 Billion) இருந்தது. 1997ல் அது 315 மில்லியன் டொலராக பெருகியிருந் தது. ஆனால் இவற்றில் $^2/_3$ பங்கு உலகின் பத்து பெரிய நாடு களுக்குச் சென்றது. உலக சனத்தொகையில் 70 சதவீதமான மக்களை கொண்ட 100 சிறிய நாடுகளுக்கு $^1/_3$ பங்கு முதலீடு மாத்திரமே சென்றது.

2) வளர்முக நாடுகளுக்குரிய முதலீட்டில் 65% ஆசியாவுக்கு (அதிலும் சீனாவுக்கு அதிகம்) சென்றமை குறிப்பிடத்தக்கது. சில நாடுகளின் முதலீடுகள் சில பிராந்தியங்களில் மாத்திரம் குவியும் போக்கும் காணப்படு கின்றது. ஆசியாவில் ஜப்பானிய முதலீடுகளும், இலத்தின் அமெரிக்-காவில் அமெரிக்க முதலீடுகளும் குவிவதை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

3) பல்வேறு நாடுகளிலும்வ ருமானப் பங்கீட்டையும் அது சீராக்க உதவவில்லை. மிகவும் குறைந்த வருமான மட்டத்தவரின் வருவாய் களை 8%ல் உயர்த்திய போது மிக உயர்ந்த வருமனத்தவர்களின் வருவாய்களை (உலகமயமாதல் 60% னால் அதிகரிக்கச் செய்திருந்தது,

வளர்முக நாடுகளின் பொருளா-தார தகைமையை மாற்றும் இறைமை இந்நாடுகளின் அரசாங்கங்களிட மிருந்து பல்தேசிய கூட்டுத்தாபனங் களின் கைகளுக்கு மாற்றப்பட்டு விட்டன.

பிராந்திய ஒத்துழைப்புக்கள் சிலவற்றுடனும் (NAFTA, OPEC, EU) சில நாணயங்களுடனும் (¥$E) தொடர்புகளைப் பலமாக்கிய நாடுகளின் எதிர்காலம் சற்றுக்கடினமாக இருக்கக் கூடும்.

புதிய வர்த்தக விதிகள் மிகவும் பலசாலியான மேற்குலக நாடுகளுடன் நலிவுற்ற வளர்முக நாடுகளைப் போட்டியிட்டு முன்னேறுமாறு வற்புறுத்துகின்றன. இது விரும்பத்தக்கதல்ல.

வளர்முக நாடுகளுக்கான உதவி மூலகங்களில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் இவை துரிதமாக போட்டியிடும் வலிமையைப் பெற முடியாமற் போகும்.

இவ் உலக மயமாக்கல் மனித முகத்துடனான உலக மயமாக்கம் (Globalization with Human Face) என்ற பிரிவை உடையது இதன் பொருள் மனித பாதுகாப்பை உறுதி செய்கின்ற, வருமான ஏற்றத்தாழ்வைக் குறைக்கின்ற வறுமையைக் குறைக்கின்ற, வேலை வாய்ப்பை உருவாக்கின்றதான உலகமயமாக்கமாகும்.

**மனித முகத்துடனான உலக மயமாக்கலை** (Globalization with Human face) **அடைவதற்கான வழி முறைகள்.**

1. புதிய உலக ஆளுமை கட்டியெழுப்பப்பட வேண்டும்.
2. மனிதத் தேவைகளுடன் உலக மயமாக்கம் இணைக்கப்பட வேண்டும்.
3. IMF முறைமாறி உலக மத்திய வங்கி உருவாக்கப்பட வேண்டும்.
4. WTO நீதியான தாராள வர்த்தகத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.
5. சூழல் மற்றும் வனப்பாதுகாப்புக்கு கூடிய கவனம் செலுத்தல் வேண்டும்.

மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் தேசிய மட்டத்தில் பொறுப்பு உணர்வை ஏற்படுத்தல் வேண்டும்.

இவ்வாறு உலக மயமாக்கல் சிறப்பு பெறுவதைக் காணலாம்.

## Reference:

✍வணிகயோதி மலர் 19- மா.சின்னத்தம்பி (1998-1999)

✍பொருளாதார அபிவிருத்திக் கொள்கை- வே.கருணாகரன் (Page76-80)

✍மானிட அபிவிருத்தி -UNDP அறிக்கை 2000

# உலகமயமாக்கலும் இலங்கையின் பொருளாதாரமும்
# Globalization and the Economy of SriLanka

Miss. S. Ranjini,
2nd Year,
Economics Special

கடந்த மூன்று தசாப்தங்களாக உலக பொருளாதாரத்தில் இடம் பெற்று வரும் முக்கிய பரிணாம வளர்ச்சியாக உலகமயமாதல் (Globalization) விளங்குகின்றது. நாடுகள் தனித் தனியாக தமது வளங்களை அதிகரித்து, அதனூடாக வினைத்திறனை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்த வேண்டும் என்ற முன்னைய சிந்தனையில் இருந்து உலகமயமாதல் மிகவும் வேறுபடு கின்றது. இப்புதிய பொருளியற் கருத்தின் விளைவுகள் பற்றி தற்போது திருப்தி யற்ற அபிப்பிராயங்கள் பரவலாக வெளியிடப்பட்டும் வருகின்றன. இத்த கைய பின்னணியில் உலகமயமாதல் பற்றியும், இதனால் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றம் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

உலகமயமாதல் (Clobalization) என்பது, உலகநாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயன்முறையாகும். இது பொருளாதார, தொழில்நுட்ப, கலாச்சார மற்றும் அரசியல் பிணைப்புக்களுக் கூடாக உலகமக்களை மிக அருகில் எடுத்துவருவதுடன், அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கி இருக்கும் நிலையையும் அதிகரிக்கச் செய்கின்றது. பொருளா தாரக் கண்ணோட்டத்தில் நோக்கும் போது, உலகமயமாக்கல் என்பது அனைத்து நாடுகளிலும் வளர்ந்து வரும் பொருளாதார ஒருங்கிணைப்பாகவும், தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் ஒருங்கிணையும் ஒரு செயன்முறையாகவும் உள்ளது. தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் ஒருங்கிணையம் ஒரு செயன்முறை யாகவும் உள்ளது. தேசிய சந்தைகள், பொருட்கள் மற்றும்சேவைகள் என்பவற் றிலான அதிகரித்த எல்லை தாண்டிய வர்த்தகத்திலும், சர்வதேச மூலதனம் மற்றும் பணம் என்பவற்றின் அசைவு களுக்கூடாகவும் தொழிநுட்ப பரிமாற் றத்துக்கூடாகவும் இது இடம்பெற்று வருகின்றது.

உலகமயமாக்கல் செயன் முறையை, உலகரீதியாக பல்தேசியக் கம்பனிகள் (Multinational corporation), சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வங்கி (EB), உலக வர்த்தக அமைப்பு (WTO), சர்வதேச வலைப்பின்னல் முறை (Internet) என்பன மேம்படுத்தி வருவதுடன், புதிய விதிமுறைகள், வர்த்தகம், சேவைகள், மற்றும் அறிவுசார் சொத்துக்கள் என்பன தொடர்பான பல்பக்க உடன்படிக்கைகள் இதற்கு ஆதரவாகவும் இருந்து வருகின்றன. உலக பல்தேசியக் கம்பனிகள் உலக தொழிற்சாலை

களாக (Global Factories) உருவாகி உள்ளன. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, உலக வர்த்தக அமைப்பு போன்றவை உலகநாடுகள் மீது அவற்றின் தேசியவாதப் பொருளாதாரக் கொள்கைக்கு சவால்விடும் வகையில் உலக பொருளாதாரத்துடன் இணைந்து கொள்ளச் செய்யும் அமைப்பு சீராக்கங்களை செய்யுமாறு நிர்பந்தித்துள்ளன.

உலகமயமாதல், உலகரீதியில் எல்லா நாடுகளுக்கும் அதிக நன்மைகளை பெற்றுத்தரும் என உலக வர்த்தக நிறுவனத்தாலும் (WTO), நவ்றா (NAFTA)போன்ற அமைப்புக்களினாலும் கூறப்பட்டு வருகின்றன. ஆரம்பக் கட்டமாக உலகமயமாதலுள் உட்புகும் நாடுகள் சர்வதேச வர்த்தகத் தொடர்பில் தாராளமயப்படுத்தப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கையில் ஈடுபடுதல், சந்தைமயமாக்கப்பட்ட பொருளாதார முறமையை முழு அளவில் அனுமதித்தல், தனியார் மயமாக்கலுக்கு ஆவன செய்து பொருளாதார சீர்திருத்தம் ஒன்றை உருவாக்கி நடைமுறைப் படுத்தல், ஒவ்வொரு நாட்டின் முதலீட்டுச் சந்தையும் சர்வதேச ரீதியாக ஒன்றிணைக்கப்பட்டிருத்தல் போன்ற நிலமைகளை கொண்டிருக்கும். குறிப்பாக வளர்முக நாடுகளில் (LDC,S) வேலை இன்மை (Un Employment), வருமான சமமமின்மை (Un equal income), பணவீக்கம் (Inflation) போன்ற பிரச்சினைகள் தேசிய பொருளாதாரத்தின் விரைவான அபிவிருத்திக்குச் சவாலாக உள்ளன. இப் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கும், மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் உலகமய மாக்கலே சிறந்த தீர்வாக இருக்க முடியும் என்ற அடிப்படையில் இலங்கை உட்பட வளர்முக நாடுகள் கடந்த மூன்று தசாப்தங்களாக பாரிய சீர்திருத்தங் களை மேற்கொண்டு வருகின்றன.

இலங்கையின் பொருளாதா-ரம் கடந்த இருபது வருடகாலமாக படிப்படியாக தாராளமயமாக்கப்பட்டு வந்துள்ளது. தீர்வைகள், வர்த்தகக் கட்டுப்பாடுகள் மற்றும் வரிகள் என்பன குறைக்கப்பட்டுள்ளன. அத்துடன் விலைக்கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுள்ளன. வணிகம் தொடர்பான ஒழுங்கு விதிகள் தளர்த்தப்பட்டு, அரசதுறையின் பங்கு குறைக்கப்பட்டுள்ளது. பிரதான மாக சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டுதலின் கீழ் வெளிநாட்டு மூலதனத்தை கவர்ந்திழுப்பதற்கென பெருந்தொகையான ஊக்குவிப்புக் களும், சலுகைகளும் வழங்கப் பட்டுள்ளன. இதன் மூலம் தனியார் முதலீட்டிற்கு குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டிற்கு உசிதமான ஒரு சூழ்நிலை நாட்டுக்குள் உருவாக்கப்பட்டள்ளது.

ஒரு நாட்டின் செல்வச் செழிப்பு நிலைக்கான மிகச்சிறந்த குறிகாட்டி பொருளாதார வளர்ச்சி விகிதமாகும். தாராளமயமாக்கல் இடம் பெற்று வந்த வருடங்களில் இலங்கை ஒரு மிதமான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை மட்டுமே அனுபவித்து வந்திருப்பதினை அவதானிக்க முடிகின்றது. திறந்த பொருளாதாரம் செயற்பட்டு வந்த (1980-1998) 19 வருட காலத்தின் போது சராசரி பொருளாதார வளர்ச்சி 4.7 சதவீதமாக மட்டுமே இருந்து வந்துள்ளது. உலக

பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வந்த ஒரு காலகட்டத்தில், உலக வர்த்தகம் துரிதமாக விரிவடைந்து வந்த ஒரு காலகட்டத்தில் இந்த மிதமான வளர்ச்சிவீதம் எட்டப்பட்டுள்ளது. உண்மையிலேயே (1980-1989) பத்து வருடங்களின்போது சராசரி வளர்ச்சி 4.2 சதவீதமாக இருந்து வந்தது. இது (1990-1998) ஒன்பது வருட காலத்தின் போது மட்டுமே 5.2 சதவீதமாக அதிகரித்திருந்தது. எனவே உலக மயமாக்கலால், இலங்கையின் பொருளாதாரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டதனை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மிகவும் மந்தமான முறையில் இடம்பெற்று வந்தமைக்கான பிரதான காரணம் முதலீட்டு மட்டம் குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டு மட்டம் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்து வந்ததாகும். கடந்த 5 வருட காலப்பிரிவின் போது இலங்கையின் சராசரி உள்நாட்டு முதலீடு மொ.உ.உயில் 25 சதவீதமாக இருந்து வந்துள்ளது. மாறாக கிழக்காசிய நாடுகளில் இது 35 சதவீதமாகவும், தென்கிழக்காசிய நாடுகளில் 40 சதவீதமாகவும் இருந்துள்ளது. இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் சராசரி வருடாந்த உட்பாச்சல் 5 வருட காலத்தில் (1994-1998) 105 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டது. இதற்கு மாறாக மலேசியாவில் இது 487 கோடி அமெரிக்க டொலராகவும் இருந்துள்ளது. எனவே இலங்கை தாராளமயமாக்கல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றிருக்கவில்லை எனலாம்.

இலங்கைக்குள் வந்த சிறிய அளவிலான வெளிநாட்டு முதலீடுகள் கூட குறிப்பாக ஆடை ஏற்றுமதிக் கைத்தொழில் துறைக்குள்ளே சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு குறைந்த கூலி விகிதங்களும், ஐக்கிய அமெரிக்க சந்தையில் பயன்படுத்தப்படாமலிருக்கும் கோட்டாக்களை இலங்கை வைத்திருப்பதுவும் காரணமாகும். எனவே கடந்த 15 வருட காலத்தின்போது நாட்டின் கைத்தொழில் ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிகளின் 19 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக அதிகரித்துச் சென்றுள்ளன. இலங்கையின் ஆடைக்கைத்தொழில் விரிவாக்கத்திற்கு இந்த வகையில் உலகமயமாக்கல் உதவியிருந்தாலும் ஏனைய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கோ, அதன் மூலம் ஏற்றுமதி அபிவிருத்தியைப் பன்முகப்படுத்துவதற்கோ அது எத்தகைய பங்களிப்பையும் வழங்கியிருக்கவில்லை எனலாம்.

இலங்கையில் கடந்த பத்து வருடகாலத்தின்போது விவசாய பண்டங்களின் ஏற்றுமதி மூன்று மடங்கினால் அதிகரித்திருந்தது. விவசாய ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சிக்கு பிரதான பங்களிப்பை வழங்கிய ஒரு பயிர் தேயிலையாகும். கடந்த பத்து வருட காலத்தின் போது தேயிலை உற்பத்தியில் 35 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. அதேவேளை தெங்கு பொருட்களின் உற்பத்தியில் 3 சதவீத அதிகரிப்பே ஏற்பட்டிருந்தது. மறுபுறத்தில் இறப்பர் உற்பத்தியில் 14 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. கடந்த 5 வருட காலத்தின்போது பல சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி அளவிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தற்போது இறப்பர், சணல், கம்பனி மற்றும் பருத்தி போன்ற இயற்கைப் பண்டங்களுக்கு "சிந்தெடிக்" பொருட்கள் பதிலீடாக அமைவதால், இவற்றுக்கான கேள்விகள் குறைவடைந்துள்ளன. எனவே உலகமயமாக்கலால் இயற்கை பண்டங்களின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட வழிகோலப்பட்டுள்ளது எனலாம்.

கடந்த ஐந்து வருடகாலத்தின் போது பிரதானமாக உலகமயமாக்கல் மற்றும் சுதந்திர வர்த்தகம் என்பவற்றின் விளைவாக உள்நாட்டு விவசாயத்தில் ஒரு சீர்குலைவு நிலை ஏற்பட்டுள்ளது. தீர்வைகள் மற்றும் தீர்வைகள் அல்லாத தடங்கல்களை நீக்கியதன் மூலம் இறக்குமதிகள் தாராளமயமாக்கப் பட்டன. இதன் விளைவாக சந்தையில் இறக்குமதி பண்டங்கள் வந்து குவிந்த துடன், அது உள்நாட்டு விவசாயத்தின் மீது பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. நாட்டின் முதன்மை உணவுப் பண்டமான நெல்லின் உற்பத்தி கடந்த ஐந்து வருட காலமாக தேக்கமுற்று காணப்படு கின்றது. சீனி உற்பத்தியில் 15 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உபஉணவுப் பயிர் உற்பத்தியிலும் மிகப்பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இவை தாராளமய மாக்கப்பட்ட இறக்குமதிகளில் இருந்து கடுமை-யான போட்டியை எதிர்கொண்டி ருந்தன. எனவே வர்த்தக தாராளமய மாக்கல் கொள்கை கிராமிய உற்பத்தித் துறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளது எனலாம்.

இறக்குமதி தாராளமயமாக்க-லானது, கைத்தறி ஆடை, மின் உபகரணங்கள், உலோக உற்பத்திகள், இரசாயனப் பொருட்கள், கால்நடை உற்பத்திகள், கண்ணாடி பொருட்கள், போன்ற பெருந்தொகையான உள் நாட்டுக் கைத்தொழில்கள் மீது தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது. புடவைகள் மீதான 35 சதவிகித தீர்வை அண்மையில் ஒழிக்கப்பட்டமை உள்நாட்டு புடவை கைத்தொழிலைப் பொறுத்தவரை ஒரு மரண அடியாக உள்ளது. குளிர்சாதன பெட்டிகள் போன்ற மின்சார உபகரணங்களின் தங்குதடையற்ற இறக்குமதிகளின் காரணமாக உள்நாட்டு குளிர்சாதன பெட்டி நிறுவனமொன்று தனது தொழிற்சாலையை மூடியுள்ளது. எனவே தாராளமயமாக்கலால் உள்நாட்டுக் கைத்தொழில் பாரிய பின்னடைவை கண்டுள்ளது எனலாம்.

இலங்கை அரசு தனியார் துறைகளை நம்பி தனது முதலீடுகளை பெருமளவிற்கு குறைத்துள்ளது. தனியார் முதலீடுகள் பெருமளவிற்கு வரையறுக்கப்பட்ட அளவில் மேற் கொள்ளப்பட்டமையால் பொருளாதாரம் பாதிப்படைந்து பங்கு சந்தையில் இருந்து வெளிநாட்டு நிதிகள் விலக்கிக் கொள்ளப்பட்டமையால் பங்கு விலை களில் வீழ்ச்சி ஏற்பட்டது. தாராளமய மாக்கலால் வரிவருமானங்களும் குறைவடைந்துள்ளது. இதனால் பொருளாதாரம் வீழ்ச்சி அடைய நேர்ந்தது. இதை விட இறக்குமதி தீர்வைகள் மூலமான வருமானம் 3.9 வீதத்தில் இருந்து 2.8 வீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

எனவே முடிவாக நோக்கு மிடத்து, உலகமயமாக்கலால் இலங்கை யின் பொருளாதாரத்தில் வரையறுக்கப் பட்ட சில அனுகூலங்களும், பாரியளவி லான பிரதிகூலங்களும் ஏற்படுத்தப்

பட்டுள்ள. இலங்கையின் பொருளாதாரம் உலளாவிய பொருளாதாரத்துடன் ஒருங் கிணைக்கப்படுவதானது உலகச் சந்தை சக்திகளினால் நாடு எளிதில் பாதிப்புறக் கூடிய ஒரு நிலமையை எடுத்துக் காட்டுவதுடன், பொருளாதாரத்தையும் பலவீன நிலைக்குள் தள்ளியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே உலகமய மாக்கலானது இலங்கையின் பொருளா தாரத்திற்கு மட்டுமல்ல, இலங்கையின் அபிவிருத்திக்கும் ஒரு சவாலாக அமை யும் என்று கூறுவதில் மிகையில்லை.

## References:-


✍பொருளியல் நோக்கு – ஏப்ரல்/மே – 2000

✍Central Bank Reports - (1999 – 2000)

✍Virutcham - Volume – 5 ( 2000)


What the third world must ask of the international order is... a genuin transfer real resources, not the present 'aid' charade.

Santiago Resolution of third world social scientists, April - 1973.

Foreign assistance must belinked to commanly agreed policy Objectives particularly to poverty reduction strategies.

United nation development program, Human Development report 1994

For the first time in human history, The world is clase to creating a single, Unified global system.

United nations development program, Human Development Report - 1992

Absent major changes in north south relations, the wretched should inherit the earth by about 2025.

Matthew connelly and paul kennedy, must it be the regt against the west?

Sustainability must be strongthened as a guiding principle of development.

Boutros boutros searetary Genetal, united nations, 1994

# எமது நன்றிக்குரியவர்கள்

புதுப்பொலிவுடன் வெளிவரும் எமது அபிவிருத்திப் பொருளியல் சஞ்சிகைக்காக ஆசிச்செய்திகளை வழங்கிய துணைவேந்தர், கலைப்பீடாதிபதி, அவர்களுக்கும் பாராட்டுச் செய்தியை வழங்கிய துறைத்தலைவர் அவர்களுக்கும் வாழ்த்துச் செய்தியை வழங்கிய பெரும் பொருளாளர் அவர்களுக்கும்,

எமது அழைப்பினை ஏற்று சஞ்சிகைக்கான ஆக்கங்களை தந்து உதவிய வவுனியா வளாக விரிவுரையாளர் திரு.A.தயாபரன், யாழ் பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர் S. சந்திரசேகரம் மற்றும் எமது துறைசார் விரிவுரையாளர்கள், மாணவர்களுக்கும்,

எமது அபிவிருத்தப் பொருளியல் சஞ்சிகை வெளியீட்டுக்கான நிதியினை அதிஷ்டலாப சீட்டிழுப்பில் மூவர் பெற்றுக்கொள்வதற்கு பரிசில்களாகவும், பணமாகவும் தந்து உதவிய யாழ் வர்த்தகப் பெருமக்களுக்கும், நிதியினை திரட்ட எம்மோடு உழைத்த எமது துறைசார்ந்த, ஏனைய துறைசார்ந்த மாணவ நண்பர்களுக்கும்,

எமக்கு உரிய நேரத்தில் ஆலோசனைகளை வழங்கி நேரடியாக நின்று நெறிப்படுத்திய எமது பெருமதிப்புக்குரிய மன்றக் காப்பாளரும், எமது துறைத் தலைவருமான திரு.V.P. சிவநாதன் அவர்களுக்கும், பெரும் பொருளாளர் திருமதி.வி.ரவிசங்கர் அவர்களுக்கும் எமது துறைசார் விரிவுரையாளர்களுக்கும், மற்றும் ஆலோசனைக் குழுவினருக்கும்,

எமது சஞ்சிகை தாங்கிவரும் ஆக்கங்களை முழுமனத்துடன் அழகுற வடிவமைத்து அச்சிட்டுத் தந்துதவிய "ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ்" நிறுவனத்திற்கும்,

இவ் இதழின் அட்டையினை அச்சிட்டுத்தந்த Kumaran அச்சகத்தினர்க்கும்,

எமது இம்முயற்சியில் முன்னின்று செயற்பட்ட மன்ற அங்கத்தவர்களுக்கும், சக நண்பர்களுக்கும்,

மேலும் இம் முயற்சிக்காக பல்வேறு வழிகளிலும் உழைத்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.



**இளம் பொருளியலாளர் மன்றம்,**
**பொருளியல்துறை,**
**யாழ்பல்கலைக்கழகம்.**

இதழாசிரியர்கள்

# நேர்பாருங்கள்

### எமது மன்றத்தின்

### விசேட வெளியீடாக

## வடக்கு கிழக்கு மாகாணம் சார்பான





Kumaran Press
Private Limited

201, Dam Street Colombo-12 tel: 421388